REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூன் 2 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 129 | Friday 02, June, 2023 | 20 பக்கங்கள் | 50/-

## ரூபாவின் பெறுமதி மேலும் வலுப்பெற்றது



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி, நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும்போது டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி, நேற்று (01) மேலும்

06

# 2048 இல் முழுமையான அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்றுவதே எமது திட்டம்



## ஐந்து ஆண்டுகளில் பொருளாதார ஸ்திரம்

### ஒரு வருடத்துக்கு முன்னிருந்த நிலைக்கு நாட்டை இட்டுச்செல்ல அனுமதியோம்

- நாட்டை கட்டியெழுப்பும் பணியில் இளைஞர்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறோம்
- துரித பொருளாதார மறுசீரமைப்புக்கு அரச – தனியார் துறை ஒத்துழைப்பை பெறவும் திட்டம்
- மோசடியை ஒழிக்க விசேட செயலணி உருவாக்கப்படும்

இலங்கையை 2048 ஆம் ஆண்டில் முழுமையான அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே எமது போராட்டமாகும். ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த நிலைக்கு நாட்டை மீண்டும் இட்டுச்செல்ல யாரையும் அனுமதிக்க மாட்டோமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

**நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையின்போது ஜனாதிபதி தெரிவிப்பு**

அத்துடன் 04 முக்கிய தூண்களில் நாட்டைக் கட்டியெழுப்புவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அடுத்த 05 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்தி, அடுத்த 25 ஆண்டுகளில் உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையை மாற்றுவதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டை கட்டியெழுப்பும் பணியில் இளைஞர் சமூகம் மீது பெரும் நம்பிக்கை வைத்திருப்பதாக கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, துரித பொருளாதார மறுசீரமைப்பு செயற்பாட்டில் அரச தனியார் துறை ஒத்துழைப்பை அதிகரிக்க கூட்டாய்வு முறையை அமுல்படுத்துவதாகவும் மோசடியை ஒழிக்க விசேட செயலணியொன்று உருவாக்கப்படுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய நிலைமாற்றத்துக்கான திட்ட வரைபடத்தை முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக கடந்த 09 மாதங்களில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி இதன் போது விரிவாக விளக்கினார்.

அத்துடன், எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கான செயல்பாட்டு முன்மொழிவுகளையும் ஜனாதிபதி நாட்டுக்கு முன்வைத்தார்.

அரச நிதி மறுசீரமைப்பு, முதலீட்டு ஊக்குவிப்பு, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆகிய பிரதான 04 தூண்களில் நாட்டின் எதிர்காலம்

06

டாக்டர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் உட்பட பலரும்

## உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் வருமானத்தை பதிவு செய்தல் கட்டாயம்

**நேற்று முதல் அமுல், ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி வெளியீடு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழ் 11 நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டு, விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா டெலிகொம், நோர்த் சீ, திரிபோஷா நிறுவனம், தேசிய உப்பு நிறுவனம், சீமெந்து கூட்டுத்தாபனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம், கொழும்பு லோட்டஸ் டவர் முகாமைத்துவ தனியார் கம்பனி, கல்லோய பெருந்தோட்ட

06

## நாட்டில் 111 மருந்து வகைகளுக்கே தட்டுப்பாடு

**நிவர்த்திக்க அரசு தீவிர முயற்சியில்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சில மாதங்களுக்கு முன் நாட்டில் சுமார் 200 மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவியது. ஆனால் தற்போது 111 மருந்துகளுக்கே தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். இவ்வாறு பற்றாக்குறையாக உள்ள மருந்துகளை பெற்றுக்

06

## மதங்களுக்கிடையே ஐக்கியத்தை சீர்குலைப்போர் மீது நடவடிக்கை

**கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானம் –பிரமித்த பண்டார**



மத முரண்பாடுகளை ஏற்படுத்தி, நாட்டில் தற்போதுள்ள அமைதி நிலையை குழப்பும் நோக்கில் செயற்படுவோருக்கு எதிராக, சட்டத்தை நிலைநாட்ட பின்வாங்கப்போவதில்லை. இவர்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பல்வேறு தரப்பினர், மத ஐக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வெளியிடும் கருத்துக்கள் மற்றும்

06

## எரிபொருள் விலைகளில் நேற்று முதல் மாற்றம்

**பெற்றோல் 15 ரூபா, மண்ணெண்ணெய் 50 ரூபாவால் குறைப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எரிபொருள் விலைகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெற்றோல் ஒக்டேன் 92 ஒரு லீற்றர் 15 ரூபாவாலும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 50 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக, எரிசக்தி மின்சக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக்க தெரிவித்துள்ளார்.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் புதிய விலை 318 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின்

06

வவுனியா ஆட்டோ சாரதி கொலை

## 10 வருடங்களின் பின் மரண தண்டனை

**மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் அதிரடி தீர்ப்பு**

**வவுனியா விசேட நிருபர்**



முச்சக்கர வண்டி சாரதியான சதாசிவம் குகானந்தன் என்பவரை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ், முச்சக்கர வண்டி சாரதியொருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று (01) இத்தீர்ப்பையளித்தார். வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதிக்கே 10 வருடங்களின் பின்னர்

06

## NSB யின் 2022 ஆண்டறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



தேசிய சேமிப்பு வங்கியின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை வங்கியின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி ஹர்ஷ கப்ராலினால், நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று (01) ஜனாதிபதி அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பொருளாதார கட்டமைப்புக்குள் அதன் செயற்றிறன் மற்றும் சமூக, சுற்றுச்சூழல் துறைகளுடனான அதன் உறவை பிரதிபலிக்கும் வகையில் "எங்கள் பலத்தை வலுப்படுத்துதல்" என்ற கருப்பொருளுடன் தேசிய சேமிப்பு வங்கி அதன் ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

06

அரிசி, மா, சீனி. பருப்பு உட்பட

## ஆறு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நேற்று முதல் குறைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சீனி, பருப்பு, மா உள்ளிட்ட 06 அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகளை நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 15 ரூபாவினாலும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 14 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை மைசூர் பருப்பு ஒரு கிலோ 11 ரூபாவாலும் சீனி ஒரு கிலோ 10 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

கடலை ஒரு கிலோ

06

## இலங்கையில் முதலீடு செய்யுமாறு தாய்லாந்து நாட்டினருக்கு அழைப்பு

**தாய்லாந்து வர்த்தக சமூகத்தினர் மத்தியில் பிரதமர்**



இலங்கையில் முதலீடு செய்யுமாறு தாய்லாந்தின் வர்த்தகர்கள், தொழில் அதிபர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் முதலீடு செய்யும்போது தமது பொருட்களை விற்பனை செய்வதற்கு வரிச்சலுகைகள் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் பல சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் பிரதமர்

06



## எரிபொருள் தட்டுப்பாடு இல்லை வீண் அச்சத்தை தவிர்க்கவும்

**விலை குறைந்ததால் சில நிறுவனங்கள் கொள்வனவை தவிர்த்துள்ளன**

03

## பாணந்துறையில் இளைஞர் வாளால் வெட்டப்பட்டு கொலை

**நள்ளிரவில் நடு வீதியில் சம்பவம்**

பாணந்துறை வெகட பிரதேசத்தில் இளைஞனொருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் புதன்கிழமை (31) இரவு இடம்பெற்றுள்ளது. வாள்வெட்டுத் தாக்குதலுக்குள்ளான இவ்விளைஞன், பாணந்துறையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு முன்பாக ஓடியுள்ளார்.

எனினும், இவ்விளைஞனைப் பின்தொடர்ந்த கொலையாளி,

06

60 வயதில் கட்டாய ஓய்வு

## சட்ட மாஅதிபரின் ஆட்சேபனை நிராகரிப்பு



அறுபது வயதில் விசேட வைத்தியர்களின், கட்டாய ஓய்வு தொடர்பான அமைச்சரவையின் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி, சட்ட மாஅதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இது தொடர்பான மனு, மேன்முறையீட்டு

06

## தொற்றா நோய்களின் பரவல் அதிகரிப்பு

**சுகாதார அமைச்சு மக்களுக்கு எச்சரிக்கை**




நாட்டில் தொற்றா நோய்களின் பரவல் அதிகரித்துள்ளதால் சர்க்கரை, உப்பு, கொழுப்பு உணவுகளை உட்கொள்வதில் அவதானம் தேவையென சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. பெற்றோர் தமது குழந்தைகளின் போஷாக்கு குறித்து அக்கறைகொள்ள

06

## ரூ. 50 இலட்சத்துடன் மாயமான சாரதி

**பொலிஸாரால் கைதாகி விசாரணை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அவிசாவளை நகரிலுள்ள தனியார் வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்காக கொண்டு செல்லப்பட்ட, ஐம்பது இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்தவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கெப் வண்டியில் வந்த சாரதியே, இப்பணத்தை கொள்ளையடித்து தப்பிச் சென்றார். தகவலையறிந்த பொலிஸார் இவரை,

06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



## ஹங்கேரி பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்பு



ஹங்கேரி பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்லூரிகளில் இலங்கை மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் ஆர் குரூப் இன்டர்நெசனல் நிறுவனத்தின் ரொனன் குரூப் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஹங்கேரி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் உயர்தரமான சேவைகள் மற்றும் தரமான கல்வி என்பவற்றை இலங்கை மாணவர்களுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்ற உன்னத நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை அறிமுகப் படுத்த உள்ளதாக ரொனன் குரூப் தலைவர் ரொஹான் நானயக்கார தெரிவித்தார்.

கொழும்பு, கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். உயர்தரம் கல்வி கற்ற மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி இன்றி வெளிநாடுகளில் தொழில்சார் கல்வி நடவடிக்கைகளை எதிர்பார்க்கும் மாணவர்கள் ஹங்கேரி பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிலையங்களில் கல்வி கற்பதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முடியும்.

வெளிநாடுகளில் கல்வி கற்க எதிர்பார்க்கும் மாணவர்கள் சர்வதேச சந்தையில் அதிகளவான பணத்தை விரயம் செய்யாமல் குறைந்த செலவில் பட்டமொன்றை பெறுவதற்கான வாய்ப்பு ஹங்கேரி பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை பற்றிய ஜப்பானின் சந்தேகம் ஜனாதிபதியின் விஜயத்தினால் நீக்கம்

### காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன

**வெலிகம தினகரன் நிருபர்**

கடந்த காலத்தில் எமது நாடு தொடர்பாக ஜப்பான் நாட்டுக்கு இருந்த சந்தேகம், நம்பிக்கையின்மை போன்றவற்றை நீக்கி மீண்டும் நாட்டின் நம்பிக்கையை வலுப்படுத்திய தேசத்தின் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க காணப்படுவதாக காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஜப்பான் நாட்டுக்கு ஜனாதிபதி அண்மையில் விஜயம் செய்திருந்தார். இதன்போது அந்நாட்டு உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன் போதே அந்த நாட்டுக்கு எமது நாடு பற்றி இருந்த சந்தேகங்கள், நம்பிக்கையின்மை, போன்றவற்றை ஜனாதிபதியினால் அகற்ற முடிந்தது.



கடந்த காலத்தில் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த, வங்கரோத்து நிலை அடைந்த எமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப இன்று வரை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இன்று ஜனாதிபதி உலக நாட்டின் தொடர்புகளை வலுப்படுத்த நாட்டை மேம்படுத்திக் கொண்டிருக்கிறார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சகலரும் ஒன்றிணைந்து எமது நாட்டை சர்வதேச அரங்கில் மேல் மட்டத்துக்கு இட்டுச் செல்ல முயற்சிக்க வேண்டும். கட்சி, நிறம் போன்றவற்றை மறந்து சகல தரப்பினரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். எமது ஜனாதிபதி உலக நாடுகள் ஏற்றுக் கொண்ட தலைவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சர்வதேச அரங்கில் எமது நாட்டுக்கு கௌரவத்தை பெற்றுக் கொடுக்க கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதிமாத்திரமே . வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை குறுகிய காலத்தில் மேம்படுத்த அவரால் முடிந்துள்ளது. இது எமது நாட்டுக்கு கிடைத்த வெற்றியாகும்.

உலக நாடுகளை நோக்கும் போது, வீழ்ச்சியடைந்துள்ள நாடுகள் இன்னும் முன்னேற்றம் அடையாமல் உள்ளதை காணமுடிகிறது என்றார்.

## இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் ஏற்பாட்டில் விசேட நடமாடும் சேவை







தமிழக புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்களுக்கு பிறப்புச் சான்றிதழ், குடியுரிமைச்சான்றிதழ் வழங்கும் விசேட நடமாடும் சேவையொன்று சென்னை பிரதி உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் (31) நடைபெற்றது. இதன்போது 13 தமிழக புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்களுக்கு பிறப்புச்சான்றிதழ், குடியுரிமை சான்றிதழ்களை இலங்கையின் பிரதி உயர் ஸ்தானிகர் டொக்டர் வெங்கடேஷ்வரன் துரைசாமி வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

### அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீதின்

## "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" நாளை நூல் அறிமுக விழா



உலக அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் எழுதிய "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" நூலின் அறிமுகவிழா "வெண்பா நூல் மனை" யின் ஒருங்கிணைப்பில், நாளை (3) சனிக்கிழமை (நோன்மதி தினம்) கொழும்பு 7, புல்லர்ஸ் வீதி (பௌத்தாலோக்க மாவத்தை) திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள புரொபஸர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தையில் உள்ள "நாடா " அரங்கில்" மாலை 3 மணிக்கு நடைபெறும்.

மூத்த ஒலிபரப்பாளர் (இ.ஒ.கூ தாபனம் மற்றும் லண்டன் பி.பி.சி.) விமல் சொக்கநாதன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் சிறப் பதிதிகளாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். வீரகேசரி முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன் நூலை வெளியிட்டு வைக்கிறார். சிறப்புரையை பேராதனை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் நிகழ்த்த நூல் நயவுரையினை பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் ஸ்ரீபிரசாந்தன், பேராசிரியர் எம்.சீ. ரஸ்மின் ஆகியோர் நிகழ்த்துவர்.

முன்னாள் பிரதி பரீட்சை ஆணையாளர் மூத்த வானொலி அறிவிப்பாளர் ஜீ. போல் அந்தனி, "தகவம்" செயலாளர் இலக்கியச் செயற்பாட்டாளர் திருமதி.வசந்தி தயாபரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

## ஜாமிஆ நளீமிய்யாவின் பொன்விழா எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பில்

### விழாவில் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்பு

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் புத்திஜீவிகள் கல்விமான்களது ஆலோசனைகளையும் ஆதரவையும் பெற்று 1973 ஆம் ஆண்டு பேருவளையில் பிரபல கொடைவள்ளலும் சமூக சேவகருமான மர்ஹூம் நளீம் ஹாஜியார் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஜாமிஆவின் கல்வி பயணத்துக்கு 50 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பொன்விழா நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உலமாக்கள் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புகளது பிரதிநிதிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அந்த நிகழ்வைத் தொடர்ந்து ஜாமிஆ நளீமிய்யாவில் தமது ஏழு வருட கற்கை நெறியை நிறைவு செய்த சுமார் 240 பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழாவும் நடைபெறவிருக்கிறது.

கடந்த அரை நூற்றாண்டுகளாக இஸ்லாமிய கல்வித் துறையில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, சமூகத்துக்கு அறிவுத் தலைமைத்துவம் வழங்கிய இக்கலாநிலையம் சர்வதேச மட்டத்தில் பல பல்கலைக் கழகங்களது தொடர்பைக் கொண்டிருக்கின்றது. மேலும் இதுவரை 1000க்கும் மேற்பட்ட பட்டதாரிகளையும் அது உருவாக்கியிருக்கிறது. இஸ்லாமிய தஃவா, கல்வி மற்றும் சமூகப் பணிகளில் அதன் பட்டதாரிகள் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர்.

அதன் பழைய மாணவர்களின் கணிசமான தொகையினர் அரச, மற்றும் தனியார் துறைகளில் நிர்வாக பொறுப்புகளை வகித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அவர்களில் சுமார் 25க்கும் மேற்பட்டோர் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் கலாநிதி பட்டங்களை பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாத்தளையின் சில பகுதிகளில் நீர் வெட்டு

**(பேருவளை விசேட நிருபர்)**

மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் எதிர்வரும் 05ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 8 மணி முதல் பி.ப. 6 மணி வரையிலான 10 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இரத்தோட்டை பிரதான வீதி மற்றும் அதனை அண்டிய கிளை வீதிகள், ஹைநெக்க கியுல வீதி ஹீல்ஸ் ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

## மாணவிக்கு வட்சப் ஊடாக ஆபாசப்படம் அனுப்பிய ஆசிரியருக்கு விளக்கமறியல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தம்புத்தேகம நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலையில் தரம் 09 ல் கல்வி பயின்று வரும் 14 வயது மாணவி ஒருவருக்கு தனது கையடக்க தொலைபேசி வட்சப் ஊடாக ஆபாசப் படங்கள் மற்றும் செய்திகளை அனுப்பிய குற்றச்சாட்டின் பேரில் அதே பாடசாலையின் ஆசிரியரை எதிர்வரும் (07) ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தம்புத்தேகம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தம்புத்தேகம மலியதேவபுர பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய திருமணமான ஆசிரியர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தம்புத்தேகம நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 08, 09 பொறுப்பாசிரியரான சிங்கள பாடம் கற்பித்து வரும் குறித்த ஆசிரியர், தரம் 09 ல் கல்வி பயின்றுவரும் 14 வயது மாணவிக்கு வட்சப் ஊடாக ஆபாசப் படங்கள் அனுப்புவதாக குறித்த மாணவியின் பெற்றோர் நன்னடத்தை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

### நடமாடும் விபசார விடுதி முற்றுகை

## கைதான 4 பெண்களும் பிணையில் விடுதலை

### இரு சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

**(மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)**

நடமாடும் விபசார விடுதி முற்றுகையில் கைதுசெய்யப்பட்ட நான்கு இளம் பெண்களையும் பிணையில் விடுவிக்குமாறும் பிரதான சந்தேக நபரையும் மேலும் இருவரையும் எதிரவரும் 15ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறும் ஹொரணை பிரதான மஜிஸ்திரேட் சந்தன கலன்ஸூரிய நேற்று (1 ) உத்தரவிட்டார்.

குருநாகல், அம்பாறை, மொறட்டுவ போன்ற இடங்களைச் சேர்ந்த இவ்விளம் பெண்களையே தலா ஐந்து லட்சம் ரூபாய் சரீரப்பிணையில் விடுவிக்குமாறு மஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்குமாறு சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான மூன்று சட்டத்தரணிகளும் நீதிமன்றில் கேட்டுக்கொண்டபோதும், இக்கோரிக்கையை நிராகரித்த மஜிஸ்திரேட் இளம் பெண்கள் நால்வரையும் சரீரப்பிணையில் விடுவித்தார்.

பொரலஸ்கமுவ பகுதியில் பணப்பை ஒன்றினை திருடிய குற்றத்திற்காக ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபரை எதிர்வரும் ஆறாம் திகதி நுகேகொட நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் அரசியல் வாதி ஒருவரை முக நூல் மூலம் கொலை அச்சுறுத்தல் செய்ததாகவும் இவர் மீது மேலும் ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. இதற்காக எதிர்வரும் ஐந்தாம் திகதி கடுவெல மாஜிஸ்திரேட் முன்ஆஜர்படுத்தவும் நீதவான் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி விடுதியை நடத்தியவர்கள் பாவித்த கார் கல்கிசை பகுதியை சேர்ந்த ஒரு பெண்மணிக்கு சொந்தமானது என்றும் அப்பெண்மணியிடமும் வாக்கு மூலம் பெறப்பட்டதாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

## எவோட்ஸ் –2023 கட்டுரைப் போட்டி

கலை இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள இளம் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில் புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் நடத்திவரும் எவோட்ஸ் 2023 கலாசாரப் போட்டித் தொடரின் 4ஆவது போட்டியாக கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான நிபந்தனைகள் வருமாறு..

1) 'வலை விரிக்கும் போதை வஸ்துப் பரவலும் சிக்கித் தவிக்கும் இளம் சமூகமும்" என்ற கருப்பொருளில் கட்டுரை எழுதப்பட வேண்டும். 2) ஒருவர் ஒரு பிரதியை மட்டுமே அனுப்பி வைக்கமுடியும் அவை கட்டாயம் தட்டெழுத்தில் அனுப்பிவைக்கப் படவேண்டும்.

3) பேனாவால் எழுதும் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4) கட்டுரை 750 சொற்களுக்கு குறையாமலும் 2000 ஆயிரம் சொற்களுக்கு மேம்படாமலும் இருத்தல் வேண்டும்.

5) கட்டுரை puthiyaalaikalaivaddam1980@gmail.com என்ற மெயில் முகவரிக்கும் 0754880172 என்ற வட்ஸப் இலக்கத்துக்கும் அனுப்பலாம்.

6) கட்டுரை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்க கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

7) முடிவுகள் ஜூலை நடுப்பகுதியில் அறிவிக்கப்படும்.

8) அண்மையில் நடந்து முடித்த மூன்று போட்டிகளுக்கு நடந்த பரிசளிப்பு போன்று எதிர்வரும் மூன்று போட்டிகளுக்கும் ஒன்றாக பரிசளிப்பு நடைபெறும்.

பரிசு விபரங்கள் வருமாறு முதலாம் பரிசு ரூபா 10.000 சான்றிதழ் இரண்டாம் பரிசு ரூபா 7.500 சான்றிதழ் மூன்றாம் பரிசு ரூபா 5.000 சான்றிதழ் மேலதிக விபரங்களைப் பெற 076 2002701, 077 6274099, 077 7412604, 077 711905.

### பொருளாதார மத்திய நிலையம்

## காய்கறிகளின் விலையில் திடீர் அதிகரிப்பு நிலை

**திறப்பனை தினகரன் நிருபர்**

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் காய் கறிகளின் விலைகளில் அதிகரிப்பு நிலை காணப்படுவதாக அங்குள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் பிரகாரம் காய்கறிகளின் மொத்த விலை 40 சத வீதம் வரை அதிகரித்துள்ளமை தெரிய வருகின்றது.

இந் நாட்களில் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு வழங்கப்படும் மரக்கறிகளின் மொத்த விலை அதிகரித்து, மொத்தமாக காய்கறிகளை வாங்கும் வீதமும் குறைவடைந்துள்ளதாக அங்குள்ள மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் படி கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது அதிகமான மரக்கறி வகைகளின் விலைகளில் அதிகரிப்பு காணப்படுவதற்கான காரணம் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையாகும். இதனால் பயிர்கள் சேதமடைந்ததன் காரணமாகவே இவ் விலை அதிகரிப்பு ஏற்பட்டதாகவும் இது ஒரு தற்காலிகமான நிலமை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு பச்சை மிளகாய், பீன்ஸ், கறி மிளகாய், கரட், வெள்ளரி, வெண்டைக்காய், உருளை கிழங்கு, பூசணி ஆகியவற்றின் விலைகளிலேயே அதிகரிப்பு நிலை காணப்படுவதாக அங்குள்ள தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜுன் 2 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.32
லுஹர் - 12.10
அஸர் - 03.36
மஃரிப் - 06.24
இஷா - 07.40

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் வைகாசி 19
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## பஸ் மற்றும் முச்சக்கர வண்டி கட்டணங்களில் மாற்றமில்லை

**இரண்டு சங்கங்களும் நேற்று அறிவிப்பு**

பெற்றோல் விலை குறைக்கப்பட்டாலும் முச்சக்கர வண்டி கட்டணம் குறைக்கப்பட மாட்டாதென முச்சக்கரவண்டி சங்கங்கங்கள் தெரிவித்துள்ளன.

முச்சக்கர வண்டிகளுக்கான கட்டண மீளாய்வு குழுவொன்று உடனடியாக நியமிக்கப்பட வேண்டுமென அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேக்கர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டீசல் விலையில் திருத்தம் செய்யப்படாமையால், பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட மாட்டாதென அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (31) நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்தே இச்சங்கங்கள் இவ்வாறான அறிவித்தலை விடுத்துள்ளன.

# நிதிக் கொள்கையை தளர்த்த மத்திய வங்கி தீர்மானம்

**விரைவில் பணவீக்கம் தனி இலக்கமாகும். வெளிநாட்டு கையிருப்பு 3.1 பில்லியன் டொலர்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நிதிக் கொள்கையை தளர்த்துவது தொடர்பில், இலங்கை மத்திய வங்கி தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

நிதிச்சபை அமர்வில் இது குறித்து ஆலோசிக்கப்பட்டு இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிரந்தர வைப்பு வசதிக்கான வீதத்தை நூற்றுக்கு 13 வீதமாகவும், நிரந்தர கடன் வசதிக்கான வீதத்தை நூற்றுக்கு 14 வீதமாகவும் குறைப்பதற்கு மத்திய வங்கியின் நிதிச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.




எதிர்வரும் மாதங்களில் பணவீக்கம் வெகுவாக குறைவடையுமென தெரிவித்துள்ள மத்திய வங்கி, பணவீக்கம் ஒரு இலக்கத்துக்கு வருவதற்கான காலத்துக்கு முன்பதாகவே, தனி இலக்கத்தின் இலக்கை எட்ட முடியுமென்றும் தெரிவித்துள்ளது.

மே மாத இறுதியில் நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது. இதில் சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி பரிமாற்ற கடன் ஒத்துழைப்பும் உள்ளடங்குவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.



இந்தியாவின் மிகப்பெரிய டிஜிட்டல் ஊடக தளங்களில் ஒன்றான 'மோஜோ ஸ்டோரி' நேற்று (01) இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவை நேர்காணல் செய்தது. இந்தியாவின் விருது பெற்ற தொலைக்காட்சி ஊடகவியலாளரான பர்கா தத் உயர்ஸ்தானிகரை நேர்கண்டார். மோஜோ ஸ்டோரி 6,30,000க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களைக் கொண்ட பிரபலமான செய்தி ஊடக தளமாகும்.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழக அறிஞரின் சிறப்பு நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக்குழுச் செயலாளர் தெ.மதுசூதனன் தலைமையில் நாளை (03) சனிக்கிழமை தமிழக அறிஞரின் சிறப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச் சங்கம் இந்நிகழ்வை நடத்துகிறது.

இந்நிகழ்வில், "பின்னைக்காலனியம் ஒப்பிலக்கியக் கோட்பாடுகள்" என்னும் தலைப்பில், தமிழ்நாடு காந்தி கிராம நிகர்நிலைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் பா. ஆனந்தகுமார் உரை நிகழ்த்தவுள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாடு இல்லை வீண் அச்சத்தை தவிர்க்கவும்

**விலை குறைந்ததால் சில நிறுவனங்கள் கொள்வனவை தவிர்த்தன**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் மக்கள் வீண் பயம் கொள்ளத் தேவையில்லையென்றும்,நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பு உள்ளதாகவும் எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் ஆகியவற்றில் போதுமானளவு எரிபொருள் உள்ளதால், எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் கிடையாதென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சில பிரதேசங்களில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. எரிபொருளுக்கான விலையில் திருத்தங்களை மேற்கொள்ளப்பட்டதையிட்டு சில எரிபொருள் நிலையங்களின் உரிமையாளர்கள், பெற்றோலியக்கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை பெற்றுக்

06



# போதைப் பொருளுடன் சந்தேக நபர்கள் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

போதைப்பொருள் வைத்திருந்த இருவர், மஹரகம பகுதியில் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினும் மீட்கப்பட்டதாக பொலிஸ் விசேட செயலணிப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மஹரகம, நாவின்ன பிரதேசத்தில் அதிசொகுசு மாடிவீட்டுத் தொகுதியில் மேற்படி போதைப் பொருளை பொதி செய்துகொண்டிருந்த நிலையில், இவர்கள் கைதாகினர். இவர்களிடமிருந்து, 203 கிராம் மற்றும் 170 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள், நான்கு கையடக்கத் தொலைபேசிகள், டிஜிட்டல் தராசு மற்றும் உபகரணங்களும் மீட்கப்பட்டன.

பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 34 வயதுடையவர்களான இவர்கள்,சூட்டான் மற்றும் கிச்சா என்றழைக்கப்படுவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் தற்போது போதைப் பொருள் குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாணந்துறை கமல் மற்றும் தெஹிவளை, கல்கிசை, இரத்மலானை பகுதிகளில் பாரிய போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள படோவிட்ட நளின் ஆகியோரின் கைக்கூலிகள் என்றும் தெரிய வந்துள்ளது.

குறித்த அதிசொகுசு வீட்டுத் தொகுதியில் வைத்து போதைப் பொருள் பொதி செய்யப்பட்டு,அப்பிரதேசங்களி லுள்ள வீடுகளுக்கு காரில் கொண்டு

06

# பெருந்தோட்ட பிரச்சினைகளை தீர்க்க பிரித்தானியாவின் பங்களிப்பும் அவசியம்

**பிரித்தானிய தூதுவரிடம் அமைச்சர் ஜீவன் கோரிக்கை**

மலையக பெருந்தோட்ட சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, ஐக்கிய இராச்சியத்தின் பங்களிப்பு அவசியமென,அமைச்சர் ஜீவன்தொண்ட மான் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவுக்கு விஜயம் மேற்கொண்ட பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் நேற்று (01) அமைச்சர் ஜீவன் தொண்டமானை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இச்சந்திப்பிலே, அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்:நாட்டின் நெருக்கடியான காலகட்டத்தில் பிரித்தானியா வழங்கிய ஒத்துழைப்புக்களை மறக்க முடியாது. மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரித்தானியாவின் பங்களிப்பு பிரதானம்.

எனவே, இந்த ஒத்துழைப்பை பெற்றுத்தருவது அவசியம்.மலையக மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புக்களை உருவாக்கும் வழிமுறைகள் மற்றும் அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டன.



## இலங்கை – துருக்கி நேரடி விமான சேவை

இலங்கை மற்றும் துருக்கியின் தலைநகர் ஸ்தான்புல் நகருக்கிடையில் விமான சேவைகளை நடாத்த கட்டுநாயக்க விமான நிலையம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் இலங்கைக்கான துருக்கிய தூதுவருக்கும், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தற்போது துருக்கி ஏர்லைன்ஸ் இலங்கைக்கு விமானப் பயணத்தை மேற்கொண்டாலும், அது மாலைதீவினூடாகவே பயணிக்கின்றது.

துருக்கிய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரும்போது, இது ஒரு அசௌகரியமாக உள்ளதுடன், கூடுதலான நேரத்தையும் செலவிட வேண்டியுள்ளது.

இந்த நேரத்தை குறைக்கும் நோக்கிலேயே இவ்விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்புதிய சேவை, ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளுக்கு நன்மை பயப்பது மட்டுமன்றி, இலங்கைக்கு வருகை தர, அவர்களை ஊக்குவிக்குமென்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## மூன்று கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் கற்பிட்டி பகுதியில் நேற்று ஏழு பேர் கைது

**கைதானவர்களில் ஒரு இந்தியப் பிரஜையும் உள்ளடக்கம்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மூன்று கிலோ ஐஸ் போதைப் பொருளுடன் கற்பிட்டி பகுதியில் ஏழு பேரை நேற்று அதிகாலை கைதுசெய்துள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய பிரஜையொருவரும் உள்ளதாகவும் அவர் கடந்த 12 வருட காலமாக இவ்வாறு போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகவும் விசாரணைகளில் தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள மேற்படி இந்திய பிரஜை, ஐஸ் போதைப்பொருளை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எடுத்துவந்துள்ளாரென்ற சந்தேகம் நிலவுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த

06

## சீமெந்தின் விலையை குறைக்க ஓரிரு தினங்களில் தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஓரிரு தினங்களில் சீமெந்தின் விலையை குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளதாவது.

50 கிலோ சீமெந்து மூடையொன்றின் விலையை 300 ரூபாவால் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருவதையடுத்து கட்டட நிர்மாணங்களுக்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கவனம் செலுத்தியுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் இந்த பொருட்களை சாதாரண விலையில்

06




## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 193.22 | 204.57 |
| கனடியன் டொலர் | 217.21 | 229.84 |
| யூரோ | 318.48 | 335.40 |
| ஜப்பான் யென் | 2.1257 | 2.2352 |
| சிங்கப்பூர் டொலர் | 218.95 | 231.23 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 366.55 | 384.93 |
| சுவிஸ் பிராங்க் | 326.12 | 345.79 |
| அமெரிக்க டொலர் | 297.60 | 310.95 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 804.37 | கட்டார் ரியால் | 83.23 |
| குவைத் டினார் | 986.01 | சவூதி ரியால் | 80.86 |
| ஓமான் ரியால் | 787.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 82.58 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321
சோபகிருது வருடம் வைகாசி மாதம் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 12

### குறள் தரும் சிந்தனை



ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு

வஞ்சக எண்ணங்கொண்ட பொதுமகள் ஒருத்தியிடம் மயங்குவதை அறிவில்லாதவனுக்கு ஏற்பட்ட மோகினி மயக்கம் என்று கூறுவார்கள்.

## குறைந்த வருமானம் பெறுவோரின் பொருளாதார நலன்களில் கரிசனை

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக வேலைத்திட்டங்கள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டுக்கும் மக்களுக்கும் பயனளிக்கத் தொடங்கின.

இவ்வாறான முன்னேற்றங்களை அடைந்து கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் பெரிதும் உதவியுள்ளன. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதை இலக்காகக் கொண்டு சர்வதேச நாணயத்திடமிருந்து கடன் மறுசீரமைப்புக்கான ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒத்துழைப்பு நாட்டில் நம்பிக்கை தரும் முன்னேற்றங்கள் ஏற்பட பக்கதுணையாக அமைந்துள்ளது.

இந்நிலையில் இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகமுரெ, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது, 'பொருளாதாரப் பாதிப்பிலிருந்து மீள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் வரவேற்கத்தக்கவை. குறுகிய காலப்பகுதிக்குள் சமூக மட்டத்தில் அடிப்படைக் கட்டமைப்பு ரீதயில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது' என்று குறிப்பிட்டுள்ள சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி, பொருளாதார ரீதியில் பாதிக்கபட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு வழங்கப்படும் நலன்புரித்திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்ட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டுதான் அனைத்துத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாயண நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு அமைய இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்நடவடிக்கைகளின் பிரதிபலன்கள் நம்பிக்கை தரக்கூடிய வகையிலும் ஆக்கபூர்வமான முறையிலும் அமைந்துள்ளன. குறிப்பாக சமூக மட்டத்தில் அடிப்படைக் கட்டமைப்பு ரீதியில் மாற்றங்கள் ஏற்பட இவ்வேலைத் திட்டங்கள் வழிவகுத்துள்ளன. அதனால் பொருளாதார சுபீட்சத்தை நாடும் மக்களும் அடைந்து கொள்ளக்கூடிய சமிக்ஞை வெளிப்படக்கூடியதாக உள்ளது.

அதேநேரம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுவோருக்காக முன்னெடுக்கப்படும் நலனோம்புதல் திட்டங்களை விரிவுபடுத்துவதிலும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய 'அஸ்வெசும' (ஆறுதல்) நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டம் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறும் 33 இலட்ம் பேரை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் இடைநிலை, பாதிக்கப்படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு நான்கு பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளதோடு, அங்கவீனமானவர்கள், முதியவர்கள், சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கும் இத்திட்டத்தின் கீழ் நலன்புரி கொடுப்பனவுகள் பெற்றுக்கொடுக்கப்படவிருக்கின்றன. இத்திட்டத்திற்கமைய தற்காலிக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் நான்கு இலட்சம் பேருக்கு ரூ. 2500.00 மாதாந்த கொடுப்பனவு 2023 டிசம்பர் 31 வரையிலும், பாதிக்கப்படக்கூடிய நான்கு இலட்சம் பேருக்கு ரூ. 5000.00 கொடுப்பனவு 2024 ஜுலை 31 வரையிலும் வழங்கப்படவுள்ளது.

மேலும் வறியோர் என்று அறியப்பட்ட பயனாளிகள் எட்டு இலட்சம் பேருக்கு ரூ 8500.00 கொடுப்பனவும் மிக வறுமையானவர்களுக்காக மாதாந்தம் ரூ. 15,000.00 கொடுப்பனவு 2023 ஜுலை 01 முதல் மூன்று வருடங்களுக்கும் காலத்திற்கு வழங்கப்பட உள்ளது.

அத்தோடு தற்போது நலன்புரிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் 72 ஆயிரம் மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் ரூ 5000.00 வீதமும், சிறுநீரக பாதிப்புக்கான நிவாரணங்களைப் பெறும் 39,150 பேருக்கு ரூ. 5000.00 வீதமும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெறும் 416,667 பேருக்கு ரூ 2000.00 என்ற அடிப்படையிலும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களை இலக்காகக் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளன. அதேநேரம் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம் கொடுத்திருந்த மக்களுக்கும் ஏற்கனவே பல நலனோம்புதல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சுமையாக அமைவதை தவிர்ப்பதை இலக்காகவே இத்திட்டங்கள் அமைந்திருந்தன. ஆகவே பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்காக முன்னெடுக்கப்படும் நலனோம்புதல் திட்டங்கள் மூலம் உச்ச பிரதிபலன்களை அடைந்து கொள்வதில் பயனாளிகள் கவனம் செலுத்த வேண்டும். அதுவே அத்திட்டங்களை அர்த்த பூர்வமாக்கும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த ஐந்து ஆண்டுகளுக்கான விசேட திட்டங்கள்



## நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய நிலைமாற்றத்துக்கான திட்டவரைபடத்தை நாட்டுக்கு முன்வைத்து ஜனாதிபதி விசேட உரை

இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைக்கு நாட்டை மீண்டும் இட்டுச் செல்ல யாரையும் அனுமதிக்க மாட்டோம் என்று வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2048ஆம் ஆண்டு அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்குவதே தமது போராட்டமாகும் என்று தெரிவித்தார்.

'தேசிய நிலைமாற்றத்திற்கான திட்டவரைபடத்தை' நாட்டுக்கு முன்வைத்து நேற்று விசேட உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக கடந்த 09 மாதங்களில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி இதன் போது விரிவாக விளக்கினார்.

அத்துடன், எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கான செயல்பாட்டு முன்மொழிவுகளையும் ஜனாதிபதி நாட்டுக்கு முன்வைத்தார்.

அரச நிதி மறுசீரமைப்பு, முதலீட்டு ஊக்குவிப்பு, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆகிய பிரதான 04 தூண்களில் நாட்டின் எதிர்காலம் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக நிலைமாற்றும் செயற்பாட்டுக்கு அவசியமான தொழிநுட்ப மற்றும் நிலையான முயற்சிகளை அமுல்படுத்த தனியார் துறையிடமிருந்து முன்மொழிவுகளை பெற்றுக் கொள்ளும் கூட்டாய்வு முறையொன்று அறிமுகப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நவீன உலகுக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்காவிட்டால் நாடு பின்நோக்கிச் செல்லும் என்றும், அதன் முடிவாக நாடு, பொருளாதார காலனித்துவமாக மாறிவிடும் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எனவே நாம் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்ததோடு, அதற்கு அவசியமான துரித பொருளாதார மறுசீரமைப்புக்களை செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஒழுங்குபடுத்தல், கொள்முதல் மற்றும் அரசியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஊழலை முற்றிலுமாக நிறுத்துவதற்கும், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க பொறிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான நடைமுறைகளை செயல்படுத்துவதற்கும் ஒரு விசேட செயலணி நிறுவப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த 05 ஆண்டுகளில் நாம் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்துவதோடு, அடுத்த 25 ஆண்டுகளில் இலங்கையை உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்பும் பணி அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்கப்படும் எனவும், அதற்காக இளைஞர்களை தயார்படுத்துவதாகவும் தெரிவித்தார். அந்தப் பணியை மேற்கொள்ளும் திறன் எமது இளைஞர்களிடம் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

கடினமான பயணத்தின் போது அனைத்து துன்பங்களையும் சகித்துக் கொண்ட நாட்டு மக்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, இந்தப் பாதையில் தொடர்ந்து செல்வதன் மூலம் சிரமங்களையும் துன்பங்களையும் குறைத்து நாட்டுக்கு சிறந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்றும் தெரிவித்தார். ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய முழுமையான உரை வருமாறு:

''நமது நாட்டின் பொருளாதாரத்தை கையாளும் பொறுப்பை நான் ஏற்றது முதல், பொருளாதாரம் குறித்த உண்மையான தகவல்களை அவ்வப்போது உங்களுக்கு வெளிப்படுத்தி வருகிறேன். பொருளாதாரத்தின் உண்மையான தோற்றத்தை எப்போதும் வெளிப்படைத்தன்மையுடன் உங்கள் முன்வைக்க விரும்பினேன். நாட்டின் உண்மை நிலை, அந்த சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கான வழி மற்றும் நாட்டுக்காக நாம் அனைவரும் ஆற்ற வேண்டிய பங்கு தொடர்பாக நான் உங்களை தெளிவுபடுத்தினேன்.

நெருக்கடியான பொருளாதாரத்தால் பல இன்னல்களை சந்தித்து வந்த நாம் தற்போது மெதுமெதுவாக சாதகமான நிலையை அடைந்து வருகிறோம். நலிவடைந்து, வீழ்ச்சியடைந்த நமது பொருளாதாரம், ஓரளவுக்கு ஸ்திரமாகி வருகிறது.

கடந்த காலத்தில் நாம் கையாண்ட சரியான நடைமுறைகளினால் இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது.அதே போன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டோம். அந்தச் சவால்களை எதிர்கொள்ளும்போது பல்வேறு சிரமங்களை சந்தித்தோம்.

தாய் நாட்டிற்காக இந்தக் கஷ்டங்களைத் தாங்கிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வழியில் இன்னும் சில காலம் தொடர்ந்து செல்வதன் மூலம் கஷ்டங்களையும் துன்பங்களையும் குறைத்து, சிறந்தவொரு பொருளாதாரத்தை எமக்கு ஏற்படுத்த முடியும். இலங்கை இப்போது முன்னேற்றகரமான மற்றும் வளமான பயணத்தை மேற்கொள்ள தயாராகியுள்ளது.

அந்தப் பயணத்தை நாம் எவ்வாறு தொடர வேண்டும்? அதற்கு நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ன? என்பது முக்கியமானது.

எதிர்காலத்தில் நாங்கள் பின்பற்றும் நடவடிக்கைகள் குறித்து இன்று நான் உங்களுக்கு விளக்கப் போகிறேன். எங்கள் எதிர்கால திட்டவரைபடம் இது.

எமது முன்னோக்கிய பயணத்தில் வெற்றியடைவதற்கு இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் முழுமையான மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நான் இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளேன். இந்த பொருளாதார சீர்திருத்தங்கள், மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கலை 2023 பட்ஜெட்டில் நான் குறிப்பிட்டேன். சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப இந்த நடவடிக்கையை நாம் இப்போதே எடுக்க வேண்டும்.

பாரம்பரிய அரசியலில் ஈடுபடும் சில குழுக்கள் பொருளாதார மறுமலர்ச்சியைத் தடுக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பொருளாதார மறுசீரமைப்புக் குறித்து மக்களிடம் தவறான அச்சத்தை உருவாக்க முயற்சிக்கின்றன. எப்போதும் கூறும் “நாட்டை விற்கப் போகின்றார்கள்” என்ற கோஷத்துடன் தொடர்ந்தும் மக்களைத் தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றன.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் முன்வைக்கும் கோஷம் இதுதான். ஐம்பதுகளிலும் கூட நாடு விற்கப்படுகிறது என்று சொல்லி மக்களை ஏமாற்றினார்கள். அறுபதுகளிலும் நாட்டை விற்பதாகச் சொல்லி மக்களைத் தவறாக வழிநடத்தினார்கள். எழுபதுகளிலும் நாடு விற்கப்படுகிறது என்று மக்கள் மத்தியில் ஒரு அசாத்திய பயத்தை உருவாக்கினார்கள். எண்பதுகளில் கூட நாடு விற்கப்படுகிறது என்று சொல்லி மக்களை அச்சத்தில் ஆழ்த்தினர். அன்று முதல் இன்று வரை இந்தக் குழுக்கள், நாட்டை விற்கப் போகின்றார்கள் என்ற கோசத்தை முன்வைத்து பொருளாதார சீர்திருத்தங்களை சீர்குலைக்க முயன்று வருகின்றன.

## ‘நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் இளைஞர் சமூகம் மீது பெரும்நம்பிக்கை வைத்திருக்கிறோம்’

இனி, இது போன்ற கோஷங்களுக்கு நீங்கள் ஏமாற மாட்டீர்கள் என்று எங்களுக்கு தெரியும். நாட்டை முன்னேற்ற நாம் அனைவரும் கடுமையாக உழைத்து, நம்மை அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. 2048 ஆம் ஆண்டுக்குள் உலகில் வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டும் என்ற நமது இலக்கை அடைய வேண்டும். நவீன உலகத்துக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நமது பொருளாதாரத்தை வடிவமைக்காவிட்டால், பின்னோக்கிச் செல்ல வேண்டி ஏற்படும். இத்தகைய விலகலின் விளைவு, நாடு பொருளாதார காலனித்துவமாக மாறுவதுதான்.

நாம் முன்னோக்கிச் செல்வோம். போட்டி நிறைந்த உலகை எதிர்கொள்ளும் வகையில் நமது பொருளாதாரத்தை உருவாக்குவோம். நாட்டுக்குத் தேவையான பொருளாதார மறுசீரமைப்புகளை முறையாக நிறைவேற்றுவோம்.

நாட்டை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கையை நாம் முதலில் ஆரம்பித்தோம். நாடு கடுமையான நிதிக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டது. இந்த நெருக்கடியிலிருந்து மீள ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது மட்டுமே என்பதை நாங்கள் முன்கூட்டியே அறிந்தோம். எனவே நாம் அவர்களுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தோம். பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியை வழங்க ஒப்புக்கொண்டது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பிற நிதி நிறுவனங்களுடன் இணைந்து, நாட்டிற்கு கடன் உதவி பெறும் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

இதன்போது, அண்டை நாடான இந்தியா எங்களுக்கு நிறைய உதவிகளைச் செய்தது. பங்களாதேஷ் ஆதரவளித்தது. ஜப்பான் மனிதாபிமான உதவிகளை வழங்கியது. சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற எங்களின் முக்கிய கடன் வழங்குநர்கள் மற்றும் பெரிஸ் கிளப் ஆகியவை எமது கடன் மறுசீரமைப்புக்கு ஒப்புக்கொண்டன. இந்த அனைத்து நாடுகளுக்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் ஒரு இலக்குடன் சரியான பாதையில் செல்வதன் விளைவுகளை இன்று நாம் அனைவரும் அனுபவிக்கிறோம். 70 சதவீதமாக உயர்ந்திருந்த பணவீக்கம் தற்போது 25.2 சதவீதமாக குறைந்துள்ளது. இதனால் வாழ்க்கைச் சுமை படிப்படியாகக் குறைந்து வருகிறது. ஒட்டுமொத்த சமூகமும் இந்த ஆறுதலை உணர ஆரம்பித்துள்ளது.

அடுத்து, நாங்கள் எப்படி முன்னோக்கிச் செல்லப்போகின்றோம் என்று நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். எமது அடுத்த நடவடிக்கை அல்லது திட்ட வரைபடத்தில் நான்கு முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நாம் நமது எதிர்காலத்தை நான்கு முக்கிய தூண்களில் கட்டியெழுப்புகின்றோம்.

அரச நிதி மற்றும் நிதி மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்துக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றோம்.

வரிக் கொள்கை, வருமான நிர்வாகம் மற்றும் செலவு முகாமைத்துவம் ஆகிய துறைகளில் நாம் மறுசீரமைப்புக்களைத் தொடங்கியுள்ளோம்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கில், 2022 மே மாதம் முதல் பல்வேறு செலவுக் கட்டுப்பாடுகளுக்கான சுற்றறிக்கைகளை அமுல்படுத்தியுள்ளோம்.

தேவையற்ற செலவுகளை மேலும் குறைக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அரச செலவினங்களை முடிந்தவரை மட்டுப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளோம்.

1) தேவையற்ற செலவுகளை நிறுத்துதல்.
2) செலவினங்களைக் குறைத்து, அரசாங்க செயல்பாடுகளை எளிமையாக்குதல்.
3) செலவினங்களைக் குறைத்து அரசாங்க செயற்பாடுகளை திட்டமிடுதல்.
4) செலவுகளைக் குறைப்பதற்கும் தரமான சேவைகளை வழங்குவதற்கும் தானியங்கு மற்றும் டிஜிட்டல் முறைகளைப் பின்பற்றுவது குறித்து எமது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முதலீட்டை ஊக்குவிப்பது மிக முக்கியமான காரணியாகும். அரச துறை மற்றும் தனியார் துறையின் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் பொருளாதார வளர்ச்சியை நோக்கிய நமது பயணத்தை வலுப்படுத்த முடியும்.

தென் கொரியா, சிங்கப்பூர் போன்று, நமது நாட்டையும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக உருவாக்குவதே எமது அபிலாஷையாகும்.

கூட்டாய்வு நடைமுறை செயல்முறை மூலம் மூன்று முக்கிய நோக்கங்களை அடைய நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

1) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக முன்மொழிவுகள் மற்றும் திட்டங்கள் மூலம் நமது பொருளாதாரத்தின் மீட்சியை துரிதப்படுத்தல்.
2) புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.
3) வேலைத்திட்டங்களுக்கு உள்ள தடைகளை நீக்கும் வகையில் சுதந்திர பொறிமுறைகள் மூலம் எதிர்கால திட்டங்களை செயல்படுத்தி, அரச பொறிமுறையை மேலும் செயற்திறன் மிக்கதாக மாற்றுதல்.
4) இலங்கையின் வர்த்தக நடைமுறைகள் கடுமையான பாதுகாப்பு தடைகள் மூலம் கட்டமைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்த அனைத்தையும் விடுவிப்பதற்கான காலம் வந்துவிட்டது. முதலீட்டாளர்களை உதாசீனப்படுத்தும் வகையிலும் பலவீனப்படுத்தும் வகையிலுமே பல நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையை நாம் மாற்றுவோம். அதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான ஒரு நாட்டை உருவாக்குவோம்.

சமூகப் பாதுகாப்பிற்காக நாங்கள் கூட்டாய்வு செயல்முறையை பின்பற்றுகிறோம். அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள், முகவர் நிலையங்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்களை இந்த சமூகப் பாதுகாப்பு கூட்டாய்வு செயல்பாட்டில் ஈடுபடுத்தவும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

பல வருடங்களாக இந்த நாட்டு மக்கள் எங்களிடம் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

அவை,

1) சமூகத்தின் ஏழை மற்றும் ஆதரவற்ற பிரிவினரைப் பாதுகாப்பது.
2) ஊழலைக் கட்டுப்படுத்துவது.
3) அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்து தொடர்ந்தும் பொதுமக்கள் கருத்துக்களை கேட்டறிவது. ஆகிய மூன்று விடயங்கள் ஆகும். இந்த மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

நான்காவது தூண் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு

தற்போது, பொருளாதாரத்தின் 33 துறைகளில், 430 அரச நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 06 வீதமான இலங்கையர்கள் பணிபுரிகின்றனர்.

அரச துறைக்கு சந்தையின் ஏகபோக உரிமை வழங்குவதன் விளைவு, தனியார் முதலீடுகள் வீழ்ச்சியடைவதுதான். விலை நிர்ணயம், திறமையற்ற முகாமைத்துவம் மற்றும் மோசமான நிதிச் செயல்பாடுகள் காரணமாக, இந்த தொழில்முயற்சியாளர்கள் தொடர்ந்து நட்டத்தை சந்தித்து வருகின்றனர். இந்த நிறுவனங்கள் அரசாங்கத்தின் வரிப்பணத்தை நம்பி பிச்சை எடுக்கும் நிறுவனங்களாக மாறிவிட்டன.

2021 ஆம் ஆண்டில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன் ஆகியவற்றின் செயற்பாட்டு இயக்கத்தினால் ஏற்பட்ட இழப்பு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.6 சதவீதமாகும். இந்தக் கடன் சுமையை இருபத்தி இரண்டு மில்லியன் மக்கள் மீது சுமத்துவது நியாயமற்றது.

இந்தத் தோல்வியடைந்த நிறுவனங்களை நிர்வகிக்க பெருமளவிலான மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்த நிறுவனங்கள் அரசாங்கத்துக்கும் சுமையாக உள்ளன. நாட்டுக்கு சுமை. மக்களுக்கு சுமை. எனவே, இவற்றை வெற்றியடையச் செய்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களையும் மறுசீரமைப்புகளையும் நாம் செய்ய வேண்டும்.

அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் திட்டத்தை நாம் ஏற்கனவே தயாரிக்கத் தொடங்கியுள்ளோம். இந்தத் திட்டத்தின் மூலம் இந்த நிறுவனங்கள் வெற்றிபெற முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

### பொதுமக்கள் பங்களிப்பு

கூட்டாய்வு நடவடிக்கைகளுக்கு மக்களின் பங்களிப்பைப் பெறவும் நாங்கள் செயற்பட்டு வருகிறோம். 06 வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள், பகுப்பாய்வு மற்றும் முடிவுகளின் அடிப்படையில், பல்வேறு வேலைத்திட்டங்கள் குறித்து தயாரிக்கப்பட்ட திட்டங்கள், பொதுமக்கள் சந்திப்பு தினத்தில் அறிவிக்கப்படும். அந்த திட்டங்கள் அனைத்தும் மக்களிடம் முன்வைக்கப்படும். அதன் மூலம் மக்கள் தங்கள் கருத்துக்களையும் பதில்களையும் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படும். கூட்டாய்வு செயல்முறை மூலம் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மக்களின் ஆலோசனைகளினால் மேலும் செம்மைப்படுத்திய பின்னர் அமுல்படுத்தப்படும்.

இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டு முடிவதற்குள் கூட்டாய்வு செயல்முறையை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். மூன்றாவது காலாண்டில், இணைப்புச் செயல்முறை மற்றும் தற்போது பொருளாதாரம் தொடர்பான விசேட செயலணிகளின் செயற்பாடுகள் திறந்த மற்றும் வெளிப்படையாக பொதுமக்களுக்கு முன்வைக்கப்படும்

இந்தச் சீர்திருத்தங்கள் ஒட்டுமொத்த மக்களுக்கும் ஒரு சேர பயன் தரும் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் நீங்கள் உட்பட முழு நாடும் முன்னேற்றம் அடையும். உங்களினதும் முழு நாட்டு மக்களினதும் வாழ்க்கைத் தரம் இதன் மூலம் உயர்வடையும்.

இது சமூகத்தின் ஒரு பிரிவினரை மட்டும் இலக்காகக் கொண்ட திட்டம் அல்ல. இது நாடு தழுவிய திட்டம் ஆகும்.

அப்போதுதான், இளைஞர்களின் வளப் பயன்பாட்டின் மூலம், இலங்கையின் ஏற்றுமதிக்காக சர்வதேச போட்டித்தன்மையை அதிகரிக்கவும், மனித மூலதன வளர்ச்சியின் அடித்தளத்தை விரிவுபடுத்தவும் வாய்ப்புகளை உருவாக்கவும் முடியும்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாம் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்துவோம். அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும். அதுவே எங்களின் நோக்கமாகும்.

இது, எங்கள் அனைவரின் எதிர்காலத்தையும் கட்டியெழுப்பும் ஒரு வேலைத்திட்டம் ஆகும். நமது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை மேம்படுத்தும் திட்டமாகும்.

எனவே, இந்தப் பணிகளின் வெற்றிக்கு நீங்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2048 அபிவிருத்தி அடைந்த ஒரு நாடு. அதுவே எங்களின் இலக்கு. இந்த இலக்கை அடைவதே எங்கள் போராட்டம்.

நாம் ஒன்றாக நமது எதிர்காலத்தை உருவாக்குவோம். சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவோம். இப்பணியில் இணையும் உங்கள் அனைவருக்கும் நன்றி.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

**இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைக்கு நாட்டை மீண்டும் இட்டுச்செல்ல யாரையும் அனுமதிக்க மாட்டோம்!**

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# ஹஜ்: உலகளாவிய முஸ்லிம் ஐக்கியத்தின் அடையாளம்

**இஸ்லாத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாக ஹஜ்ஜை ஹிஜ்ரி 9ஆம் ஆண்டில் அல்லாஹுதஆலா முஸ்–லிம்களின் மீது விதியாக்கினான். ஹஜ் என்பது நாடிச் செல்லல் என பொருள்படும். மக்காவிலுள்ள கஃபாவை நாடிச் செல்வதை இது குறிக்கும். இஸ்லாம் விதியாக்கியுள்ள இபாதத்–களை எங்கும் நிறைவேற்றலாம் ஹஜ்ஜை தவிர. அது புனித மக்கா–வில் குறிப்பிட்ட இடங்களுக்கு சென்றே நிறைவேற்ற வேண்டும். இது ஹஜ்ஜின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதாகும்.**

ஹஜ்ஜு என்னும் புனித யாத்திரை செல்லும் ஒருவர் தனது இறைநம்பிக்கையை முழுமையாக்குவதுடன் எல்லாம் வல்ல இறைவனுக்கு உண்மையாகவே அடி பணிந்து இருப்பதை வெளிப்படுத்தியும் காட்டுகிறார். சாதாரணமான புனித தலங்களுக்கு சென்று வருவதைப் போன்றல்லாமல் ஹஜ்ஜானது அல்லாஹ்வுக்காக நிறைவேற்றப்படும் கிரியையாகும். அது ஆன்மீக வளர்ச்சியின் இறுதிக் கட்டத்திற்கு ஓர் முக்கிய அடையாளமாகவும் அமைகின்றது. ஹஜ்ஜானது தக்வாவுடன் நிறைவேற்றப்படல் வேண்டும். வெறும் பேரும் புகழுக்குமாக செய்யப்படும் இபாதத் அல்ல ஹஜ். இதனை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்.

**'ஹஜ்ஜுக்காக தயார் செய்யப்பட வேண்டியவற்றில் மிகச் சிறந்தது. தக்வா என்னும் இறைபக்தியே. ஆகவே நல்லறிவுடையவர்களே என்னையே பயந்து தக்வாவுடன் நடந்து கொள்ளுங்கள். (அல்பகரா:197)**

**ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள்,**

**'சரியான முறையில் ஹஜ்ஜை நிறைவேற்றியவர் அன்று பிறந்த பாலகனை போன்று மீள்கிறார்'** என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

மனிதன் இம்மையிலும் மறுமையிலும் விமோசனம் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான விதிகளையும் வழிமுறைகளையும் இஸ்லாம் வகுத்துத் தந்துள்ளது. மனிதன் துறவற வாழ்வுக்குப் பதிலாக ஈருலகிலும் விமோசனம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இஸ்லாத்தின் இலக்காகும்.

அதேநேரம் உலகப் பற்றை நிர்வகித்து முகாமை செய்வதற்கு தேவையான வழிகாட்டல்களை இஸ்லாம் வழங்கியே இருக்கிறது. மக்காவிற்குச் சென்று ஹஜ் செய்யும் முறைமை முஹம்மது (ஸல்) அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. இப்பழக்கமும் முறையும் தொன்று தொட்டு வந்த ஒன்றாகும். மனிதன் இறைகட்டளைக்கு முழுமையாக கீழ்படிந்து எள்ளளவும் குறைபாடின்றி வாழவென ஹஜ் நல்லதொரு பயிற்சியை அளிக்கின்றது.

அதாவது இறைவன் ஒருவனே என்பதற்கு மத்திய இடமாக நிறுவபட்டுள்ள புனித கஃபாவிலே உலகெங்கிலும் இருந்தும் வரும் இறை விசுவாசங் கொண்ட முஸ்லிம்கள் அனைவரும் ஒருமித்துக் கூடி நிற்கிறார்கள். அங்கு ஹஜ்ஜாஜிகளின் ஆடைகள், வாழ்க்கை முறை, இஹ்ராம் கட்டும் ஒழுங்கு, பிரார்த்தனைகள், இறைவணக்கம் என எல்லாவற்றிலும் ஒற்றுமையைக் காணலாம்.

ஹஜ்ஜின் போது சமத்துவம் முழுமை அடைவது நன்கு நிரூபிக்கப்படுகிறது. சமத்துவத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக ஹஜ் விளங்குகிறது.

அதேநேரம் ஷவ்வால், துல்கஃதா ஆகிய இரண்டு மாதங்களும் துல்ஹஜ் மாதத்தில் முதல் 09 நாட்களும் மிகப் புனித நாட்களாக யாத்திரிகர்களால் கருதப்படுகின்றது. ஹஜ்ஜுக்காக செல்வோர் எல்லாவித விலக்கப்பட்ட செயல்களையும் இக்காலத்தில் தவிர்த்துக் கொள்வர். இது குறித்து அல் குர்ஆன், 'ஹஜ்ஜு (அதற்கெனக் குறிப்பிட்ட ஷவ்வால், துல்கஃதா, துல் ஹஜ்ஜு ஆகிய) மாதங்கள்தான். ஆகவே அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜைத் (தன்மீது) கடமையாக்கிக் கொண்டால் துல் ஹஜ்ஜு (மாதம் பத்தாம் நாள்) வரையில் உடலுறவு கொள்ளல், தகாத வார்த்தைகளைப் பேசுதல், சண்டைச் சச்சரவுகள் செய்தல் ஆகியவற்றைத் தடுக்க வேண்டும். நீங்கள் என்ன காரியத்தைச் செய்தாலும் அவற்றை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கின்றான். இன்னும் ஹஜ்ஜு யாத்திரைக்குத் தேவையான உணவுப் பண்டங்களை முன்கூட்டியே சித்தப் படுத்திக் கொள்ளுங்கள். இறைவனுடைய கட்டளைக்கு முழுமையாக அடி பணிந்து நடக்க வேண்டும் என்பதே ஹஜ்ஜு நமக்கு கற்றுத்தரும் பாடம். ஏனெனில் இது இறைவன் நமக்கு இட்ட கட்டளை. அதற்கும் நாம் அடி பணிய வேண்டும் என்ற ஒரே நோக்குடையவனாக அவன் செயல்படுகிறான். ஹஜ்ஜாஜி கஃபாவை வலம் வருவதில் இருந்தும் 'ஹஜ்ஜருல் அஸ்வத்' என்ற கல்லை முத்தமிடுவதில் இருந்தும் ஸபா, மர்வா எனும் இரு மலைக்குன்றுகளிடையே தொங்கோட்டம் ஓடுவதில் இருந்தும் 'ஜம்ரா' எனும் பகுதியில் கற்களை எறிவதில் இருந்தும் தனக்கிடப்பட்டுள்ள கட்டளைகளைப் பற்றி துருவி ஆராய நாடாமலேயே இறைவன் உத்தரவுக்கு அப்படியே பணிபுரிந்து அவன் செயல்படுகிறான்.

புனித ஹஜ் யாத்திரையானது உலகத் தொடர்புகள் அனைத்தையும் அறுத்து விட்டு மறுமைக்காக ஆயத்தமாகும் இறைவனின் திருச்சந்திப்பை பெறுவதற்குமான ஓர் அடையாளமாகும்.

ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது மாபெரும் நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன. அவை சமூகம், பொருளாதாரம், மதம், அரசியல் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டிருப்பதைக் காணலாம்.

முதலாவதாக ஹஜ்ஜு யாத்திரையை மேற்கொள்ள நாம் ஆயத்தமாகும் போது அப்பிரயாணத்தில் நமக்கு ஏற்படக்கூடிய அவசியமான செலவுகளுக்குள்ள பணத்தைச் சேகரித்து அதனை எடுத்துச் செல்கிறோம்.

ஹஜ்ஜுக்காக செல்லும் போது நாம் வழியில் பல நாடுகளைக் கடந்து செல்கிறோம். பல நாட்டு மக்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பும் நமக்கு கிடைக்கிறது. இப்புது அனுபவங்கள் நமது அறிவை வளர்க்கிறது. மேலும் பிரயாணம் செய்யும் பழக்கத்தையும் நமக்கு உண்டாக்கித் தருகின்றது.

அரேபியாவை அடைந்தும் இஸ்லாத்தின் பிறப்பிடத்தைப் பார்ப்பதனால் நம் இதயங்கள் பேருவகை கொண்டு ஆனந்தப் பெருக்கெடுத்து ஓடுகிறது. மக்கா நகரை நோக்கிச் செல்லும் போது தேவையற்ற எல்லா எண்ணங்களையும் நாம் நம் மனதை விட்டும் அகற்றி விடுகிறோம். நம் எண்ணம் எல்லாம் நல்லவற்றையே முற்றாக நாடி அவற்றை கொண்டே நிரப்பி விடுகிறோம் நாம் 'இஹ்ராம்' என்னும் யாத்ரீகனின் ஹாஜியின் உடையை அணிந்ததும் நம் உள்ளத்தில் இயற்கையாகவே ஓர் எளிய வாழ்க்கையின் உணர்வும், எளிய தன்மையும் ஏற்பட்டு விடுகிறது.

மேலும் எல்லா முஸ்லிம்களும் ஒரே விதமான எளிய உடையை அணிந்திருப்பதைப் பார்க்கும் போது முஸ்லிம்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் எல்லோரும் சகோதரர்களே என்ற நல்லுணர்வை நாம் பெறுகிறோம். அதே போன்று எல்லா முஸ்லிம்களும் ஒருவர் பின் ஒருவராய் கஃபாவைச் சுற்றி வலம் வரும் போது உலகிலிருந்து அங்கு வந்திருக்கும் முஸ்லிம்கள் அனைவரும் ஒரே விதமான உடையை அணிந்து கொண்டு ஒரே விதமான செயல்களையே செய்து கொண்டிருப்பதை நாம் கண்கூடாய்ப் பார்க்கின்றோம். அப்போது இஸ்லாத்தின் முன் எல்லா முஸ்லிம்களும் சமமே என்பதனையும் நாம் தெளிவாக உணர்கிறோம்.

ஹஜ்ஜின் ஊடாக ஒருவரை ஒருவர் நல் முறையில் அறிந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் தத்தம் அனுபவங்களை சொல்லி தம் உலக அறிவை விசாலப்படுத்திக் கொள்ளவும் முடிகிறது. இதன் ஊடாக முஸ்லிம் சகோதரத்துவத்தில் வளர்ச்சியும் நல்லெண்ணமும் ஏற்படுகின்றன.

எனவே ஹஜ் எண்ணற்ற நற்பயன்களையும் ஆன்மீக வளர்ச்சிக்கும் உலக பெரு வாழ்விற்கும் அது உறுதுணையாக இருப்பதையும் எம்மால் கண்டு கொள்ள முடியும்.

மௌலவி
எம்.யூ.எம்.வாலிஹ்...
(அல் அஸ்ஹரி), வெலிகம

# ஹஜ்ஜின் முக்கியத்துவம்

ஹஜ் இஸ்லாத்தின் கடமைகளில் ஒரு முக்கிய கடமையாகும். இதைக் கொண்டே இஸ்லாமிய கடமைகளின் வரிசையும் நிறைவு பெறுகிறது. இம் மேலான கடமையை நிறைவு செய்வதில் குறைபாடு விடலாகாது.

'மேலும் அல்லாஹ்விற்காக (அவனை சந்தோஷப்படுத்த) ஹஜ் செய்வது, எவர்கள் அங்கு செல்ல சக்தி பெற்றிருக்கிறார்களோ அத்தகையவர்கள் மீது கடமையாகும். எவரேனும் (இக் கடமை நிறைவேற்றுவதை) நிராகரித்தால் அதனால் அல்லாஹ்விற்கு ஒன்றும் கஷ்டமில்லை, நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தார்களை விட்டும் தேவையற்றவனாக இருக்கின்றான். (அவனுக்கு அதனால் என்ன தேவையுள்ளது?)' (அல்குர்ஆன் 3: 97)

ஹஜ் கடமையின் ஆரம்பம் மேலுள்ள ஆயத்து இறங்கியதிலிருந்து ஏற்பட்டதென உலமாக்கள் எழுதியுள்ளார்கள். இந்த ஆயத்தில் பல வலியுறுத்தல்கள் இருக்கின்றன. முதலாவது 'வில்லாஹி' இல் உள்ள 'லாம்' என்பது அல்லாமா ஜானி (ரஹ்) அவர்களின் கூற்றுக்கு இணங்க, கடமையாதல் என்ற கருத்தைத் தருகிறது. இரண்டாவது 'அலன்னாஸி' எனும் சொல் தவிர்க்க முடியாத கடமை என்பதை ஊர்ஜிதப்படுத்துகிறது. அதாவது பொருளாதார வசதி படைத்தவர்களின் மீது இக்கடமை சுமத்தப்பட்டிருக்கின்றது என்பதாகும். இந்த ஆயத்தில் பல விடயங்கள் அரபி இலக்கணம் சம்பந்தமானதாக உள்ளன. அவற்றை இங்கு குறிப்பிடுவதன் நோக்கம் இந்த ஓர் ஆயத்தில் மட்டும் பலவகையான முக்கிய வலியுறுத்தல்கள் இடம்பெற்று இருப்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

'மேலும் நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் செலவழியுங்கள், உங்கள் கைகளாலேயே உங்களை அழிவில் போட்டுக் கொள்ளாதீர்கள்.' (அல்குர் ஆன் 2:195)

இந்த ஆயத்தில் அல்லாஹ்விற்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் செலவழித்தலும் இடம்பெற்றுள்ளது. செலவழிக்காதவர்கள் இவ்வசனத்தின் ஊடாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர் என்பது குர்ஆன் விரிவுரையாளர்களின் கருத்தாகும்.

உண்மையில் ஹஜ் போன்ற மிக முக்கியமான கடமையில் மனிதன் அல்லாஹ்வினால் தனக்கு அளிக்கப்பட்ட செல்வத்தை செலவழிக்கவில்லையானால் அவன் தனது கைகளினால் தன்னையே அழிவில் போட்டுக் கொள்கின்றான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஹாஜியானி கலாநிதி
தம்பி சாஹிப் சித்தி பரீதா...
புத்தளம் வீதி, சிலாபம்.

# இஸ்லாத்தின் பார்வையில் பாவங்கள்

'நீங்கள் முடியை விட மெல்லியதெனக் கருதும் ஒரு பாவச்செயலை நாங்கள் நபி(ஸல்) அவர்கள் காலத்தில் எம்மை நாசமாக்கவல்லது (கேடுவிளைவிக்கக் கூடியது) என்றே அறிந்திருந்தோம்' (நூல்: புஹாரி)

இவ்வாறு நபி (ஸல்) அவர்களின் தோழர் ஒருவர் அறிவித்துள்ளார். எந்தெந்தத் தவறுகள் சாதாரணமானவை, அற்பமானவை என்று கருதப்பட்டனவோ, அவை மலையையொத்த பாவங்கள் என்றே சஹாபாக்கள் பார்த்தார்கள். அல்லாஹ்வின் மீதான இறையச்சம் அதிகரிக்கும் போது இவ்வாறான மனநிலை மேலோங்கும். அதுவே ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும்.

ஆனால் பாவத்தின் பாரதூரம் குறித்து கவனம் செலுத்தாது சிறு சிறு பாவங்களைத் தொடர்ந்து செய்தால் அவை பெரும் பாவங்களாகி விடலாம் என்பது இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும். அதனால் பாவங்களைத் தவிர்த்துக்கொள்வதில் எப்போதும் கவனத்தில் கொண்டு செயற்படுவது அவசியம்.

ஒரு தடவை அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரழி) அவர்கள், 'முஃமின் என்பவன் பாவச்செயல்களைச் செய்ய நேருவதை மலையைவிடப் பாரமானதாகக் கருதுவான். மலைக்கு அடிவாரத்தில் இருக்கும் தன் மீது அம்மலை சரிந்து விழப்போவது போன்று உணருவான். ஆனால் ஒரு ஃபாஸிக் தீயவனின் கண்ணோட்டத்தில் பாவம் என்பது மூக்கின் மீது அமரும் ஈயைப் போன்று கருதுவான்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

'முஃமின்' என்பவன் பாவக்கறை படியாத வகையில் தம் செயற்பாடுகளை அமைத்துக் கொள்வான். என்றாலும் அவ்வாறான பேணுதல் கொண்டவர்களும் பாவம் மற்றும் தவறுகளுக்கு உள்ளாகவே செய்கின்றனர். ஆனால் அவர்கள் தவறான செயல்கள் குறித்து பிடிவாதமாகவோ, கர்வம் கொண்டவர்களாவோ இருக்க மாட்டார்கள். ஓர் அடியான் மனித பலவீனங்களின் விளைவாக சில சமயங்களில் பாவ காரியங்களில் ஈடுபடுவானாகில் அதனை அவன் பாரிய மலையின் பாரத்தால் அமுக்கப்படுவதாகவே கருதுவான்.

அத்தோடு அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படும் போது பாவச்செயல்களுக்கான தண்டனையை அடைய நேருமே என்ற பயத்தால் நிலை குலைந்து கண்ணீர் விட்டழுவான். அத்தோடு அவன் மனமுருகி, வெட்கமுற்று அடிக்கடி அல்லாஹ்வின் முன் சிரம் சாய்ந்து, அல்லாஹ்வை நெஞ்சாரப் புகழ்ந்து, மிகுந்த பணிவுடன் பாவமன்னிப்பு கோரி பிரார்த்தனை செய்வான். 'வாரி வழங்கும் கொடையாளனே, என்னை நீ மன்னித்துவிடு! இனி ஒருபோதும் உனக்கு மாறு செய்யமாட்டேன். எனக்கு மன்னிப்பை அருள்வாய் யா அல்லாஹ் என்று கோருவான். ஆனால் பாஸிக்கின் பண்பும் செயற்பாடும் இதற்கு மாற்றமாக இருக்கும். அவன் ஒரு போதும் பாவத்தை பாவமாகக் கருதவும் மாட்டான். அதனைப் பாரதூரமானதாக நோக்கவும் மாட்டான்.

அதேநேரம் அறச்செயல் மற்றும் பாவம் குறித்து நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, 'அறச்செயல் என்பது நல்லொழுக்கம், தூய நடத்தை என்பதைக் குறிக்கும். பாவம் என்பது 'எதனைச் செய்வதால் உனது மனதில் உறுத்தலும், நெருடலும் ஏற்படுமோ அது மக்களுக்கு தெரிந்து போவதை நீர் விரும்ப மாட்டீரோ அதுதான் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

இந்நபிமொழி எல்லா மக்களுடனும் நல்லமுறையில் நடந்து கொள்வதையே எடுத்துக்காட்டுகிறது. ஒவ்வொருவருடனும் முகமலர்ச்சியுடன் அணுக வேண்டும். பேச்சில் பெருந்தன்மையையும், நிதானத்தையும் பேண வேண்டும். வாய்மையாகவும் தெளிவாகவும் பேச வேண்டும். கோபம் வரும் போது அடக்கிக் கொள்ள வேண்டும். பெற்றோருடன் நல்ல முறையில் நடந்திட வேண்டும்.

தொகுப்பு: அப்துல் காதிர்...



# ஹஜ்ஜுக்கான கூலி சுவர்க்கம்

இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றே ஹஜ். அதனைப் பொருளாதார வசதியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு தடவை நிறைவேற்றுவது கட்டாயமானது. அதனை வருடத்தில் குறிக்கப்பட்ட காலத்தில் ஒரு தடவை தான் நிறைவேற்ற முடியும். இக்கடமையை நிறைவேற்றவென இலட்சோப இலட்சம் முஸ்லிம்கள் உலகின் பல திசைகளில் இருந்தும் புனித மக்கா நகரத்தை நோக்கி புனித பயணத்தை மேற்கொள்கிறார்கள், அங்கு எல்லா முஸ்லிம்களும் சகோதர பாசத்தோடும், நேசத்தோடும், தோளோடு தோள் நின்று ஒன்றாக இக்கடமையை நிறைவேற்றுகின்றனர்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, 'இரும்பில் உள்ள துருவை கொல்லனின் உலை நீக்குவது போன்று வறுமையையும் பாவங்களையும் ஹஜ்ஜும் உம்ராவும் நீக்கிவிடும்' என்றுள்ளார்கள்.

(ஆதாரம்: நஸாயி)

மற்றொரு சந்தரப்பத்தில், 'அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜுக்குரிய கூலி சுவர்க்கம் அல்லாமல் வேறில்லை' என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

இந்த நபிமொழிகள் ஹஜ்ஜின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் எடுத்துக்காட்டக்கூடியனவாக உள்ளன. அதனால் பொருளாதார வசதி உள்ள முஸ்லிம்கள் ஹஜ்ஜை நிறைவேற்றுவதோடு நபி (ஸல்) அவர்களின் ரௌழா சரீபையும் மதீனா சென்று தரிசிப்பதும் மிக முக்கியமானது.

'பணவசதி இருந்தும் ஹஜ்ஜை நிறைவேற்றாதவர்கள் யஹுதியாகவோ நஸாராகவோ மரணிக்கட்டும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'நான் காலமான பின்னர் ஹஜ்ஜை நிறைவேற்றிவிட்டு எனது ரௌழா சரீபைத் தரிசிப்பவர் நான் உயிருடன் இருக்கும் போது என்னைச் சந்தித்தவர் போலாவார்' என்று கூறியுள்ளார்கள். நபி (ஸல்) அவர்களின் 'ரௌழா சரீபைத் தரிசிப்பது முஸ்லிமான ஆண் பெண் இருபாலாருக்கும் ஸுன்னத்தாகும். இதனை 'ஸியாரத்துல் ரௌழத்துந்நபி' எனக் கூறப்படுகிறது.

அதேநேரம் மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹராமில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஒரு இலட்சம் தொழுகைக்குச் சமமானது என்றும் மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஆயிரம் தொழுகைக்கு சமமானது என்றும் ஜெரூஸலத்திலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை ஐநூறு தொழுகைக்குச் சமமானது என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

'எனது அடக்கஸ்தலத்தை தரிசிப்பவருக்கு எனது சபாஅத் உறுதியாகிவிட்டது' எனவும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதனால் ஹஜ் கடமையை நிறைவேற்றுபவர்கள் மதீனா சென்று நபி (ஸல்) அவர்களின் ரௌழா சரீபைத் தரிசிப்பதில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய ஹஜ் கடமையை நிறைவேற்றும் ஒவ்வொருவரும் அன்று பிறந்த பலகர் போலாவார் எனவும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அதனால் அந்தப் பாக்கியத்தை அடைந்து கொள்வதில் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்வோம்.

ஏ.ஸீ.எம்.ஹனீபா...
மஸ்ஸல, பேருவளை

## எரிபொருள் தட்டுப்பாடு... 03ஆம் பக்கத் தொடர்

கொள்வதை தாமதப்படுத்தியிருந்தனர். அதுவே அந்தத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விற்பனை முகவர்களினால் 50% எரிபொருள் தொகை எப்போதும் வைக்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறு செயற்படாத எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதற்கான அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு, தாம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரூ. 50 இல. போதைப்... 03ஆம் பக்கத் தொடர்

செல்லப்பட்டு இவை,விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்தன.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலே இவர்கள் கைதாகினர்.

## மூன்று கிலோ ஐஸ்... 03ஆம் பக்கத் தொடர்

தகவலையடுத்து பஸ்ஸொன்றை நிறுத்தி சோதனையிட்ட போது, போதைப்பொருள் அடங்கிய மூன்று பொதிகளை கைப்பற்ற முடிந்துள்ளதாகவும் அத்துடன் சந்தேகநபர்களை கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த நபரிடமிருந்து பெறுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கிணங்க, அந்த இந்திய பிரஜையையும் வானொன்றிலிருந்து சந்தேகத்தின் பேரில் கைதுசெய்ய முடிந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சீமெந்தின் விலையை... 03ஆம் பக்கத் தொடர்

சம்பந்தப்பட்ட துறையினருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இதன்படி, சீமெந்தின் விலையை ஓரிரு தினங்களில் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## நாட்டில் 111 மருந்து...

கொள்வது தொடர்பிலும் அந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் தட்டுப்பாடாகும் மருந்துகளின் எண்ணிக்கையை 70 ஆக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திடம் போதிய நிதி உள்ளதா? என அவரிடம் எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர், கடந்த ஆண்டை விட, நாட்டின் பொருளாதார நிலைமை பலமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## NSB யின் 2022ஆண்டறிக்கை...

வங்கியின் செயற்திறன், மூலோபாயம், நிறுவன நிர்வாகம் உள்ளிட்ட தேசிய சேமிப்பு வங்கி தொடர்பில் விரிவான பகுப்பாய்வு இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் பீரிஸும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

## ஆறு அத்தியாவசிய...

05 ரூபாவாலும், வெள்ளை நாட்டரிசி ஒரு கிலோ 04 ரூபா வாலும் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கோதுமை மா ஒரு கிலோவின் புதிய விலை 210 ரூபாவாகவும் பெரிய வெங்காயம் ஒரு கிலோவின் புதிய விலை 115 ரூபாவாகவும் மைசூர் பருப்பு ஒரு கிலோ 314 ரூபாவாகவும் வெள்ளை சீனி ஒரு கிலோ 229 ரூபாவாகவும் கடலை ஒரு கிலோ 545 ரூபாவாகவும் வெள்ளை நாட்டரசி ஒரு கிலோ175 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாணந்துறையில் இளைஞர்...

அந்த இளைஞனை வாளால் வெட்டினார். இச்சம்பவம் அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளது.

பாணந்துறை மோதரவில அடுக்கு மாடி குடியிருப்பில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞனே இச்சம்பவத்தில் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்ட மாஅதிபரின்...

நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ.மரிக்கார் முன்னிலையில் விசாரணைக்கு

எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, இம்மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. வைத்தியர்கள் ஓய்வு பெறுவதை தடுக்கும் வகையில், நீதிமன்றம் முன்பு பிறப்பித்த தடை உத்தரவு எதிர்வரும் (06) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

60 ஆவது வயதில் விசேட வைத்திய நிபுணர்களுக்கு ஓய்வளிக்கும் அரசாங்கத்தின் முடிவை,இரத்து செய்யுமாறு 176 வைத்தியர்கள் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

## எரிபொருள் விலைகளில்...

புதிய விலை 245 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளது.

அத்துடன், கைத்தொழில் துறைக்கான மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 60 ரூபாவால் குறைவடைந்துள்ளதாகவும் அதன் புதிய விலை 270 ரூபா என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பெற்றோல் ஒக்டேன் 95 லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவாலும் சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. முறையே பெற்றோல் ஒக்டேன் 95 லீற்றர் ஒன்றின் புதிய விலை 385 ரூபாவாகவும் சுப்பர் டீசலின் புதிய விலை 340 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

லங்கா டீசல் லீற்றரொன்றின் விலை மாற்றமின்றி தொடர்ந்தும் 310 ரூபாவாகவே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரூபாவின் பெறுமதி...

அதிகரித்துள்ளது. இதற்கு முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த மூன்று வாரங்களாக மீண்டும் அதிவேக வளர்ச்சியை பதிவு செய்து வந்தது. எனினும், கடந்த (30) அமெரிக்க டொலர், யூரோ, பிரிட்டன் ஸ்ரேளிங் பவுண் உள்ளிட்ட பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி சடுதியாக உயர்ந்தது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினமும் நேற்றும் ரூபாவின் பெறுமதி கணிசமாக உயர்வடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று (01) வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 297.23 ரூபாவாகவும், கொள்வனவு விலை 283.87 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 319.36 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 302.24 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. அதேசமயம், ஸ்ரேளிங் பவுணின் விற்பனை பெறுமதி 370.94 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 352.30 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

## ரூ. 50 இலட்சத்துடன்...

அவிசாவளை குருகல்ல பிரதேசத்தில் கைது செய்ததாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர். இச்சந்தேகநபரான சாரதி, பணிக்கு வந்து 15 நாட்களே ஆகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபருடன் சுமார் முப்பது இலட்சம் பணம் மற்றும் பணம் வைத்திருந்த பை, இரண்டு கைத்தொலைபேசிகள், நான்கு காசோலைகள் மற்றும் அந்த பணத்தில் அவர் வாங்கிய ஆடைகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவருக்கு உதவியதாகக் கூறப்படும் சந்தேக நபரின் மனைவியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் (26) அவிசாவளை ரன்வல பிரதேசத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றின் காசாளர் ஒருவர், ஒரு கோடி ரூபாவுக்குமதிகமான பல காசோலைகளை, இரண்டு பைகளில் வைத்து வங்கியில் வைப்பிலிடுவதற்காக கெப் வண்டியில் சென்றுள்ளார்.

வங்கியில் , ஒரு பகுதியை வைப்பிலிடச் செல்லும் போது, காசாளர் சாரதியை அழைத்து, வாகனத்தில் பணப் பை இருப்பதாகவும், விரைவில் வருவதாகவும் கூறிவிட்டு சென்ற போது சாரதி பணத்துடன் மாயமானதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அவிசாவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் நல்லிணக்க மாநாடு

**ஓமந்தை விசேட நிருபர்**

இலங்கை சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் வடமாகாணத்துக்கான நல்லிணக்க சர்வமத மாநாடு, ஓவியா விருந்தினர் விடுதியில் நேற்று வியாழக்கிழமை (01) நடைபெற்றது.

நல்லிணக்கம் தொடர்பாக மதத் தலைவர்களின் பங்குபற்றுதலுடனும், மாவட்ட சர்வமதக் குழுவின் பங்களிப்புடனும் இம்மாநாடு நடைபெற்றது.

நல்லிணக்கம், சகோதரத்துவம், சமாதானத்தை வலியுறுத்தி சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இம்மாநாடு அமைந்திருந்தது.

இதன்போது, 'பாதை கூறும் வெள்ளித்தாரகைகள்' புத்தக வெளியீடும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தெஹிவளையில் BISD திறப்பு விழா

தெஹிவளை காலி வீதியில் அமைந்துள்ள, BISD நிறுவனத்தின் திறப்பு விழா எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.

இந் நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாகவும், திருமதிகளான பவாஸா தாஹா, ரெபேக்கா பிரியதர்ஷினி, நிறுவனத்தின் பணிப்பாளர்களான ரஸ்மீனா ரமீசுதீன், நஸ்ரா ருஷானுதீன் மற்றும் காமிலா நியாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## 2048இல் முழுமையான...

திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக நிலைமாற்றும் செயற்பாட்டுக்கு அவசியமான தொழிநுட்ப மற்றும் நிலையான முயற்சிகளை அமுல்படுத்த தனியார் துறையிடமிருந்து முன்மொழிவுகளை பெற்றுக் கொள்ளும் கூட்டாய்வு முறையொன்று அறிமுகப்படுத்தப்படுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நவீன உலகுக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்காவிட்டால் நாடு பின்நோக்கிச் செல்லும் என்றும், அதன் முடிவாக நாடு, பொருளாதார காலனித்துவமாக மாறிவிடும் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எனவே நாம் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்ததோடு, அதற்கு அவசியமான துரித பொருளாதார மறுசீரமைப்புக்களை செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஒழுங்குபடுத்தல், கொள்முதல் மற்றும் அரசியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஊழலை முற்றிலுமாக நிறுத்துவதற்கும், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க பொறிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான நடைமுறைகளை செயல்படுத்துவதற்கும் ஒரு விசேட செயலணி நிறுவப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்த 05 ஆண்டுகளில் நாம் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்துவதோடு, அடுத்த 25 ஆண்டுகளில் இலங்கையை உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்பும் பணி அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்கப்படுமெனவும், அதற்காக இளைஞர்களை தயார்படுத்துவதாகவும் தெரிவித்தார். அந்தப் பணியை மேற்கொள்ளும் திறன் எமது இளைஞர்களிடம் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டம், இலகுவான பணி இல்லையென்றாலும் நாட்டிற்கு சிறந்த விடயங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாம் எடுக்கும் தீர்மானங்கள் எவ்வளவு கடினமான மற்றும் வேதனையானதாக இருந்தாலும், எதிர்கால சந்ததியினருக்காக அந்தக் கடினமான பாதையில் சரியான கொள்கைகளின்படி முன்னேறுவதன் மூலம் மாத்திரமே நாட்டை மீண்டும் உயர்வடையச் செய்ய முடியும் என்றும் தெரிவித்தார்.

கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் ஒரு இலக்குடன் சரியான பாதையில் செல்வதன் விளைவுகளை இன்று நாம் அனைவரும் அனுபவிப்பதாகவும், 70% வரை உயர்ந்திருந்த பணவீக்கத்தை தற்போது 25.2% வரை குறைக்க முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதனால் வாழ்க்கைச் சுமை படிப்படியாகக் குறைந்து வருவதோடு, ஒட்டுமொத்த சமூகமும் இந்த பயனை உணர ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கடினமான பயணத்தின் போது அனைத்து துன்பங்களையும் சகித்துக் கொண்ட நாட்டு மக்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, இந்தப் பாதையில் தொடர்ந்து செல்வதன் மூலம் சிரமங்களையும் துன்பங்களையும் குறைத்து நாட்டுக்கு சிறந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

## உள்நாட்டு இறைவரி...

தனியார் கம்பனி, பரந்தன் கெமிக்கல்ஸ் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 11 நிறுவனங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று டாக்டர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், வங்கி, கட்டடக் கலைஞர்கள் உள்ளிட்ட சில துறை சார்ந்தவர்கள் நேற்று முதல் தேசிய வருமானவரி திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவது கட்டாயமெனவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதி, பொருளாதார, மறுசீரமைப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

தேசிய வருமானவரி ஆணையாளரிடம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டியவர்கள் தொடர்பில் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கமைய இலங்கை

மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட டாக்டர்கள் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வாளர் நிறுவன உறுப்பினர்கள், பொறியியலாளர் நிறுவன உறுப்பினர்கள், வங்கியாளர் சங்கத்தின் உறுப்பினர்கள், இலங்கை கட்டடக் கலைஞர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள், தரநிர்ணய மதிப்பீட்டு நிறுவனத்தின் உறுப்பினர்கள், உச்ச நீதிமன்ற சட்டத்தரணிகள், பிரதேச செயலாளரின் கீழ் வர்த்தகங்களை பதிவு செய்துள்ள நபர்கள், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் வாகனங்களை பதிவு செய்துள்ள நபர்கள் (முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், சிறிய உழவு இயந்திரம்) சொத்துக்கள் கொள்வனவு செய்து அல்லது கைப்பற்றப்பட்டுள்ள உறுதிப்பத்திரங்களை பரிமாற்றம் செய்துள்ள நபர்கள், மாதாந்தம் 1,00,000 அல்லது வருடாந்தம் 12,00,000 கொடுப்பனவு பெற்றுக் கொள்வோரும் இதில் உள்ளடங்குகின்றனர்.

இதற்கு மேலதிகமான 2023 டிசம்பர் 31ஆம் திகதி 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள அல்லது 2024 ஜனவரி 01ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் 18 வயதாகும் அனைத்து நபர்களும் இந்த புதியமுறைமைக்குள் உள்ளடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதங்களுக்கிடையே ஐக்கியத்தை...

செயற்பாடுகள் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மத முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு தற்போது இருக்கும் அமைதி நிலையை குழப்பும் நோக்கத்தில் செயற்படுபவர்களுக்கு எதிராக, அரசிலமைப்பின் 09ஆவது அத்தியாயம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் 291 (அ), (ஆ) பிரகாம் சட்டத்தை கடுமையாக செயற்படுத்த பின்வாங்கப்போவதில்லை.

மத முரண்பாடுகளை ஏற்படுத்தி, அமைதியைக் குழப்பும் நோக்கில் செயற்படும் பல்வேறு நோக்கங்களையுடைய குழுங்கள் தொடர்பாக நாங்கள் கவனம் செலுத்தி இருக்கிறோம்.

கடந்த காலங்களில் அனுபவித்த பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு முயற்சிக்கும் இச்சந்தர்ப்பத்தில், பல்வேறு தரப்பினர் நாட்டுக்குள் மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

எனவே, யாராவது தனி நபர் அல்லது திட்டமிடப்பட்ட குழுவொன்று இவ்வாறான குறுகிய நோக்கத்துக்காக செயற்பட முயற்சிக்குமானால், அவர்களுக்கு எதிராக தராதரம் பாரக்காமல் சட்டத்தை நிலைநாட்ட பின்வாங்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## 10 வருடங்களின் பின் ...

இத்தண்டனை விதிக்கப்பட்டது.

வவுனியா, மருக்காரம்பளை பகுதியிலுள்ள முச்சக்கர வண்டி சாரதி ஒருவரின் வீட்டில் 2013,01,28 இல் புதுமனை புகுவிழா நடைபெற்றது. இந்நிகழ்வில் நடந்த இரவு விருந்துபசாரத்தில் கைகலப்பு ஏற்பட்ட பின்னர், மறுநாள் (29) ரயில் கடவையில் சடலமொன்று கிடந்துள்ளது.

இச்சடலம் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டபோது, முச்சக்கர வண்டியொன்றில் இரத்தக்கறை காணப்பட்டமை உறுதியானது.

இதனையடுத்து முதலாம் எதிரியான வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த முச்சக்கரண்டி சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டு , இரண்டாம் சந்தேக நபரான மற்றுமொரு முச்சக்கர வண்டி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.பின்னர் தடுப்புக்காவலிலிருந்து இவ்விருவரும் விடுவிக்கப்பட்டனர்.

எனினும், கடந்த 2018 இல், இக்கொலைச் சம்பவம் தொடர்பில் முதலாம் மற்றம் இரண்டாம் எதிரிகளுக்கு எதிராக சட்ட மாஅதிபர் திணைக்களத்தால் வவுனியா மேலம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில், முதலாம் எதிரிக்கு மரணதண்டனை வழங்கப்பட்டு, இரண்டாம் எதிரியான சந்தேக நபர் விடுதலையளிக்கப்பட்டார்.

## இலங்கையில் முதலீடு...

குறிப்பிட்டுள்ளார்.

பாங்கொக்கிலுள்ள இலங்கை தூதரகத்தில் தாய்லாந்தின் தொழில் கூட்டமைப்பு, தாய்லாந்தின் சுற்றுலா கவுன்சில், தாய்லாந்தின் முதலீட்டு சபை, தாய்லாந்தில் உள்ள சர்வதேச வர்த்தக சம்மேளனம் உள்ளிட்டவற்றின் பங்குபற்றலுடன் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் தாய்லாந்துக்கிடையில் வலுவான மத கலாசார மற்றும் சமூகப் பிணைப்புக்கள் காணப்படுவதால் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நிலையான வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காக உயர்மட்ட வர்த்தகம் செய்யும் முதலீட்டு நட்பு நாடாக இலங்கை மாறுவதற்கு அரசாங்கம் முன்னுரிமையை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள பிரதமர் , தாய்லாந்தின் முதலீட்டு சமூகத்தை இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வரவேற்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசன்ஜித் விஜயதிலக மற்றும் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் ரேவன் விக்கிரமசூரிய ஆகியோர் இலங்கை முதலீட்டு சபையினால் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் மற்றும் சலுகைகள் குறித்து இதன்போது தெளிவுபடுத்தினார்.

## தொற்றா நோய்களின்...

வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பாக சந்தையில் விற்கப்படும் குளிர்பானங்கள் ஆபத்தை விளைவிக்கலாமெனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் போஷாக்குப் பிரிவு பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான லக்மினி நயனா மகோதரத்ன ஊடகங்களுக்கு (31) கருத்துத் தெரிவிக்கையில் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் போல உணவு வகைகளைப் பிரித்துக்கொள்ள வேண்டும். பச்சை சிறந்த தெரிவாகவும் மஞ்சள் அவதானத் தெரிவாகவும் சிவப்பு கட்டுப்பாட்டுத் தெரிவாகவும் கொள்ள வேண்டும். பச்சை வகை உணவுகள் ஊட்டச்சத்துகளின் ஆதாரங்கள். மஞ்சள் உணவு, பானங்களைத் தெரிவுசெய்யும்போது அவதானம் தேவை. அத்துடன் சிவப்பு நிற உணவு, பானங்கள் அவசியமற்றவை.

அவற்றைக் கட்டுப்பாட்டுடன் பெற்றுக்கொள்ள வேண்டும். நாட்டில் பல பாகங்களிலும் தொற்றா நோய்கள் பரவுவதால் சர்க்கரை, கொழுப்பு, உப்பு உணவுகளில் மிகுந்த அவதானம் தேவை. சிறுவர்கள், இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் உணவு வகைகளை உண்ணவேண்டியது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்



# ஈரான் தலைநிமிர்ந்து நிற்பதற்கு வித்திட்ட இமாம் கொமெய்னி (ரஹ்)



## 44 ஆவது நினைவு தினம் நாளை (03.06.2023)

ஈரானின் மறைந்த ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் ரூஹுல்லாஹ் மூசவி கொமெய்னி (ரஹ்) அவர்களின் 44 வது நினைவு தினம் நாளை (03.06.2023) ஆகும். ஈரானில் இஸ்லாமிய புரட்சியை வழிநடத்தி, வெற்றிக்கு இட்டுச்சென்ற இமாம் ரூஹுல்லாஹ் மூசவி கொமெய்னி(ரஹ்), இஸ்லாமிய குடியரசை நிறுவி இஸ்லாமிய அரசியலை உலகுக்கு அதனை எடுத்துக்காட்டிச் சென்றவராவார்

அவர் தமது பத்தாண்டுகால ஆட்சியின் போது முகம்கொடுக்க சவால்கள் கொஞ்சநஞ்சமல்ல. இஸ்லாமிய விரோத சக்திகளின் உள்நாட்டு பயங்கவாதம், குண்டு வெடிப்புகள், வெளிநாட்டு சதித் திட்டங்கள், திணிக்கப்பட்ட யுத்தம், பொருளாதாரத் தடைகள் என்று பலவிதமான சவால்களுக்கு அவர் முகம்கொடுத்தார். அந்த சவால்களை அவர் தமது ஆற்றல்கள் மற்றும் செயற்றிறன்கள் மூலம் வெற்றி கொண்டார். ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கு அவர் உறுதியான அடித்தளத்தை இட்டார்.

1989 ஜுன் 3 ஆம் திகதி அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்த போதிலும், ஈரான் இஸ்லாமிய குடியரசை ஸ்தாபித்து உலக அரசியலில் அவர் ஏற்படுத்திய தாக்கங்கள் இன்றளவிலும் பிரதிபலிக்கக் கூடியனவாக உள்ளன.

மேற்கத்திய ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் வலுவான கோட்டைகளில் ஒன்றாகக் கருதப்பட்ட ஈரானில், இமாம் கொமெய்னி ஏற்படுத்திய மாற்றங்கள் வரலாற்றில் அழியாத்தடம் பதித்துள்ளன.

இராணுவ அச்சுறுத்தல்கள், சட்டவிரோத பொருளாதாரத் தடைகள் என்பவற்றுக்கு பல தசாப்தங்களாக முகம் கொடுத்த போதிலும், எவருக்கும் அடிமைப்படாத, வலிமையையும் செல்வாக்கையும் பெற்றுள்ள ஒரு சுதந்திர நாடாக விளங்குகிறது ஈரான். கல்வி, விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம், பாதுகாப்பு போன்ற அனைத்துத் துறைகளிலும் ஈரான் முன்னேற்றங்கள் அடைந்து வருகின்றது. இமாம் கொமெய்னி முஸ்லிம் உலகின் அனைத்து சிந்தனைப் பள்ளிகளையும் கடந்த பரந்த இஸ்லாமிய ஒற்றுமையை நாடி நின்றார். அவரது வாழ்க்கைப் போராட்டத்தின் ஒரு குறிப்பிடத்தக்க காலகட்டமான 1963 இல் அவர் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தார். அங்கு ஹஜ் செய்ய வந்திருந்த பேரறிஞரான மௌலானா மௌதூதியை அவர் சந்தித்தார். அவருடன் இஸ்லாமிய உலகின் தற்போதைய நிலை பற்றி நீண்ட உரையாடலில் ஈடுபட்டார், மௌலானா மௌதூதி, இமாம் கொமெய்னி ஆகியோரின் சிந்தனை ஒரே மாதிரியாக இருந்தது. அறிஞருக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து மரியாதையையும் இருவரும் பரஸ்பரம் வழங்கினர்.

இந்நிலையில் 1979 இல் ஈரானில் இஸ்லாமியப் புரட்சி வெற்றியடைந்தது. அதனைத் தொடர்ந்து, இஸ்லாமிய குடியரசு அரசியலமைப்பிற்கான ஆலோசனைகளை பெறுவதற்காக தமது இரு தூதுவர்களை லாகூரில் உள்ள மௌலானா மௌதூதியிடம் இமாம் கொமெய்னி அனுப்பி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வருட பிற்பகுதியில் மௌலானா மௌதூதி சுகவீனமுற்றிருந்த நிலையில், பஃபேலோவில் உள்ள மருத்துவரான அவரது மகனால் அமெரிக்காவிற்கு அழைத்து வரப்பட்டிருந்தார். சுமார் 25 முஸ்லிம்கள் அடங்கிய குழு ஒன்று மௌலானா மௌதூதியை அவரது மகனின் இல்லத்தில் சந்திக்கச் சென்றது, அவர்களில் இஸ்லாமிய சிந்தனையாளரான ஸபர் பங்காஷியும் ஒருவராவார். மௌலானா மௌதூதி உடனான உரையாடலின் போது, 'ஈரானில் வெற்றி பெற்றுள்ள இஸ்லாமியப் புரட்சி மற்றும் குறிப்பாகப் புரட்சியை வழிநடத்திய இமாம் கொமெய்னி பற்றிய அவரது கருத்தைக் கேட்டேன், அச்சமயத்தில், அவர் இமாம் கொமெய்னி மீது வைத்திருந்த உயர் மரியாதையை வெளிப்படுத்தினார், இஸ்லாமிய புரட்சி பற்றி சிலாகித்து பேசியதோடல்லாமல் ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிகள் மற்றும் தாக்குதல் ஆகியவற்றிற்கு முகம்கொடுக்கும் வலிமையை ஈரான் இஸ்லாமிய அரசுக்கு அல்லாஹ் வழங்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்' என்று ஸபர் பங்காஷி தமது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானை அனைத்துத்துறைகளிலும் தனித்துவ அடையாளங்களுடன் தலைநிமிர்ந்து நிற்கும் நாடாகக் கட்டியெழுப்புவதில் இமாம் கொமெய்னி அதிக அக்கறை எடுத்துக் கொண்டார். இன்று, உலக முஸ்லிம்கள் அனைவரும் பெருமையடையக்கூடிய விதத்தில் ஈரான் முன்னேற்றம் கண்டுள்ளதென்றால் அதற்கு இமாம் கொமெய்னி தமது பரந்துபட்ட பார்வையுடன் வித்திட்ட அடித்தளமே மூலகாரணமாகும். அதன் பயனாக அவர் மறைந்து நான்கு தசாப்தங்கள் கடந்தும் கூட இன்றும் இஸ்லாமிய உள்ளங்களால் நினைவு கூறப்படக்கூடியவராக உள்ளார் என்றால் அது மிகையாகாது.

**தாஹா முஸம்மில்...**

# இலங்கையில் நாளாந்தம் 55 பேரின் உயிரைப் பறிக்கும் புகையிலை!

உலக புகையிலை எதிர்ப்பு தினம் கடந்த 31 ஆம் திகதி கொழும்பில் பௌத்த சமய அமைச்சின் அனுசரணையுடன் பௌத்த கலாசார அமைச்சின் கேட்போர் கூடத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

பௌத்த அமைச்சின் மேலதிக செயலாளர், பொலிஸ், மற்றும் இத்துறை சார்ந்த முப்படை அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர், கொழும்பில் உள்ள பாடசாலை மாணவர்கள் ,இளைஞர் யுவதிகள் மும்மதத் தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.





இங்கு பிரதான உரையை ஆற்றிய பேராசிரியர் கலாநிதி என்.ஆர். அமரசிங்க தெரிவித்தாவது:

இலங்கையில் புகைத்தலினால் நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் ரூபா விரயமாகின்றது. இந்நிதியை நாம் மீதப்படுத்தினால் எமது நாட்டு இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பேட்டை நடத்தி அதன் ஊடாக நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ முடியும்.

இலங்கையில் தினமும் 55 பேர் புகையிலை உட்கொண்டு புற்றுநோய், இதயநோய், சுவாசநோய் போன்றவற்றால் பீடிக்கப்பட்டு மரணிக்கின்றனர் .ஒரு வருடத்திற்கு 20 ஆயிரம் பேர் வரை இலங்கையில் மரணமடைகின்றனர். உலகில் வருடத்திற்கு 1.2 மில்லியன் பேர் புகைத்தலினால் இறக்கின்றார்கள்.

இளம் பெண்கள் தங்களது எதிர்கால கணவனைத் தேர்ந்தெடுக்கும் போது முதலில் அவன் சிகரட் புகைப்பவராக இருந்தால் அவரை நீங்கள் திருமணம் முடிக்காதீர்கள். புகைப்பவரை மணந்தால் உங்களது வாழ்க்கை நாசமாகிவிடும்.

புகைப்பிடிப்பவரிடமிருந்து உங்களுக்கு பிறக்கும் குழந்தைகள் கூட நோய் வாய்ப்பட்டு விடும். அவர் பெறுகின்ற வருமானத்தினால் கூட உங்களது வாழ்க்கையை கட்டிக் காக்க முடியாது. இதுவே உண்மையாகும்.

சிகரட் புகைப்பவரின் உடம்பில் 7200 நஞ்சுப் பொருட்கள் உள்ளன. அவரது ஆயுள் குறைந்து கொண்டே செல்கிறது.

இலங்கையில் பொதுஇடங்களில், பஸ் நிலையங்கள், புகையிரத நிலையங்கள், அரச கட்டடங்கள், அரச சிற்றுண்டிச்சாலைகளில் புகைக்க முடியாது. அதற்கான சட்ட திட்டம் இலங்கை அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரச நிறுவனங்களின் கட்டடங்களின் புகைப்பதற்கு வசதி செய்திருப்பின் அல்லது சிகரெட் விற்பனை செய்வாராயின் அவருக்கு எதிராக 2 வருட சிறைவாசம், தண்டப்பணம் விதிக்க முடியும். அதற்காக நீதிமன்றில் வழக்குகளும் உங்களால் தாக்கல் செய்ய முடியும்.

அதேபோன்று சிகரட் புகைப்பவரை விளம்பரப்படுத்தினால் அதற்கும் 2 மில்லியன் ரூபா தண்டப்பணம் விதிக்க முடியும் எனவும் பேராசிரியர் அமரசிங்க தெரிவித்தார்.

இன்று உலக புகை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு அவர் அங்கு ஆற்றிய விரிவுரையில் தெரிவித்தார்.

நாம் சுனாமி,கொவிட் காரணமாக உயிரிழந்வர்களை வருடா வருடம் நினைவு கூருகின்றோம். ஆனால் வருடா வருடம் புகைத்தலினால் 20 ஆயிரம் பேர் இறப்பதை நாம் தடுத்தல் வேண்டும். புகைத்தலை நிறுத்தியவர்களை நாம் பாதுகாத்தல் வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்வின் போது மதுசாரம் போதைப் பொருள் நிறுவனம், மேல் மாகணாத்தின் சமூகசேவை சுற்றாடல் சம்பந்தமான பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

**அஷ்ரப் ஏ சமத்...**

# கனடா தமிழ் இலக்கியத்தோட்டத்தின் இயல் விருது விழா நாளைமறுதினம்

ஒவ்வோர் ஆண்டும் உலக அளவில் சிறந்த தமிழ் இலக்கிய சேவையாளர் எனக் கருதும் ஒருவருக்கு, 'இயல் விருது' எனும் வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பினால் வழங்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருதினை இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட இலக்கிய படைப்பாளியும் தற்போது அவுஸ்திரேலியாவில் வதிபவருமான எழுத்தாளர் லெ. முருகபூபதியும், இந்தியாவில் பெங்களூரில் வதியும் பிரபல எழுத்தாளர் – மொழிபெயர்ப்பாளர் பாவண்ணனும் பெறுகிறார்கள்.

இயல்விருது விழா நாளைமறு தினம் 04 ஆம் திகதி ஞாயிறன்று மாலை கனடா டொரன்டோ – ஸ்காபரோவில் The Estate Banquet and Event Centre மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வாழ்நாள் விருது ஒரு படைப்பாளிக்கோ, கல்வியாளருக்கோ, நூல்வெளியீட்டாளருக்கோ, விமர்சகருக்கோ, வேறு ஏதேனும் ஒரு வகையில் சிறந்த தமிழ் தொண்டாற்றியதாக கருதுபவர்களுக்கோ 2001 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்படுகிறது.

இதுவரையில் வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனைக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது பெற்றவர்கள்:




இந்தியாவிலிருந்து சுந்தரராமசாமி, வெங்கட் சாமிநாதன், அம்பை, எஸ். ராமகிருஷ்ணன், நாஞ்சில் நாடன், தியோடர் பாஸ்கரன், கோவை ஞானி, ஜெயமோகன், ஐராவதம் மகாதேவன், என். சுகுமாரன், வண்ணதாசன், இமையம், சு. வெங்கடேசன், இரா. வெங்கடாசலபதி, ஐக்கிய அமெரிக்காவிலிருந்து ஜோர்ஜ் எல். ஹார்ட், இலங்கையிலிருந்து கே. கணேஷ், டொமினிக் ஜீவா, இ. மயூரநாதன், இங்கிலாந்திலிருந்து தாஸீஸியஸ், பத்மநாப அய்யர், லட்சுமி ஹோம்ஸ்ட்ராம், அவுஸ்திரேலியாவிலிருந்து எஸ். பொன்னுத்துரை ஆகியோர்.

ஜுன் 04 ஆம் திகதி நடைபெறும் இயல் விருது விழாவுக்கு பிரதம விருந்தினராக தமிழ் இலக்கிய ஆர்வலர் அறிஞர் தோமஸ் ஹிடோஷி ப்ரூக்ஸ்மா அவர்களும், பிரபல எழுத்தாளரும் நாவலாசிரியையுமான கிம் எச்லின் அவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை புனைவு எழுத்துக்கான விருது 'மன்னார் பொழுதுகள்' நாவல் எழுதிய வேல்முருகன் இளங்கோவுக்கும் அபுனைவு விருதுக்கு 'மூவந்தியில் சூலுறும் மர்மம்' என்ற படைப்புக்காக சாம்ராஜுக்கும், கவிதைக்கான விருது கவிஞர் சுகிர்தராணிக்கும், இலக்கிய ஆய்வு மற்றும் மொழி பெயர்ப்பு இலக்கியத்துக்கான விருது எழுத்தாளர் சிவசங்கரிக்கும் இலக்கியச் சாதனைக்கான விருது கனடாவிலிருந்து நீண்டகாலமாக பதிவுகள் இணைய இதழை நடத்திவரும் வ.ந. கிரிதரனுக்கும் வழங்கப்படுகிறது.

## டொரன்டோவில் நடைபெறவுள்ள விழாவில் எழுத்தாளர்கள் லெ. முருகபூபதி, பாவண்ணன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

எழுத்தாளர் முருகபூபதியின் சிறுகதை தொகுதிகள் ஏழும், புதின, சிறுவர், பயண இலக்கியம் மூன்றும், கடித இலக்கியம், நேர்காணல் தொகுதி இரண்டும், கட்டுரை தொகுதிகள் பதினேழும் இதுவரையில் வெளிவந்துள்ளன.

இரண்டு தடவை இலங்கையில் தேசிய சாகித்திய விருது பெற்றிருக்கும் முருகபூபதி, அவுஸ்திரேலியா தினத்தின்போது சிறந்த பிரஜைக்கான விருதும், விக்ரோரியா மாநில பல்தேசிய கலாசார விருதும் பெற்றிருப்பவர். முன்னர் வீரகேசரியில் துணை ஆசிரியராகவும் பணியாற்றியிருப்பவர்.

எழுத்தாளர் பாவண்ணனின் கவிதைத் தொகுதிகள் மூன்றும், சிறுகதை தொகுதிகள் 21 உம் , நாவல்கள் மூன்றும், குறுநாவல்கள் மூன்றும், கட்டுரை தொகுப்புகள் 34 , சிறுவர் இலக்கியத் தொகுப்புகள் ஒன்பதும், மொழிபெயர்ப்புகள் (கன்னடத்திலிருந்து) 24 நூல்களும், (ஆங்கிலத்திலிருந்து) ஐந்து நூல்களும் (எல்லாமாக நூறு நூல்கள் ) இதுவரை வெளியாகியுள்ளன.

பாவண்ணன், ஏற்கனவே புதுச்சேரி அரசினதும், தமிழ்நாடு இலக்கியச் சிந்தனை அமைப்பு மற்றும் கதா அமைப்பு, இந்திய சாகித்திய அகாதெமி விருது, தமிழக அரசின் விருது, இந்திய அமெரிக்க வாசகர் வாழ்நாள் சாதனை விருது, விளக்கு அமைப்பு புதுமைப்பித்தன் விருது உட்பட பல விருதுகள் பெற்றிருப்பவர்.

கலை, இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், மற்றும் இதழாசிரியர்கள் பரிபாலன சபை உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் செயலாளராக பிரபல எழுத்தாளர் அ. முத்துலிங்கம் இயங்கி வருகின்றார்.

கொவிட் பெருந்தொற்றுக்காலத்தில் இந்த வருடாந்த இயல்விருது விழா மெய்நிகரில் நடந்தது.

இம்முறை மண்டபத்தில் இந்த விழா நாளைமறுதினம் 04 ஆம் திகதி ஞாயிறன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
புதன்கிழமை 2023.05.31
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

| | | | |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5131 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் | 7 8 7 1 5 7 | |
| Mega Power | சீட்டிழுப்பு இலக்கம் 1479 | அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 326,013,138.00 |
| ஆங்கில எழுத்து F | சுப்பர் இலக்கம் 23 | வெற்றி இலக்கங்கள் 30 32 53 58 | அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 |
| ராசி சுப பலன் Handahana | சீட்டிழுப்பு இலக்கம் 440 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 2,889,322.80 |
| வெற்றி இலக்கினம் சிம்மம் | வெற்றி இலக்கங்கள் 04 14 23 32 | விசேட இலக்கினம் சிம்மம் | |
| கொவிசெத Govisetha | சீட்டிழுப்பு இலக்கம் 3373 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 108,602,194.24 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் | 01 47 69 77 | |
| தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1161 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 92,356,252.80 |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் | 13 56 60 67 | |
| ஜாதிக சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 1586 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 11,621,741.20 |
| வெற்றி இலக்கினம் மிதுனம் | வெற்றி இலக்கங்கள் | 3 8 0 7 2 3 | |


# சிங்களமொழிப் பயிற்சி சான்றிதழ் வழங்கும்விழா



அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான 150 மணித்தியாலங்களைக் கொண்ட 25 நாள் சிங்கள பயிற்சி வகுப்பின் இறுதிநாள் சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது மட்டக்களப்பு காவத்தமுனை அல்அமீன் வித்தியால பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் போதனாசிரியர் ஏ.கே.எம்.றிம்ஸான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்கா கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வின் விஷேட அதிதிகளாக அல்அமீன் வித்தியாலயத்தின் அதிபர் ஏ.பீ.எம்.அலியார், அரச கரும மொழிகள் திணைக்களத்தின் போதனாசிரியர்களான எம்.எம்.செய்னுதீன், எம்.ஐ.பாறூக், இப்பயிற்சி வகுப்பின் இணைப்பாளர் ஏ.ஜே.எம்.சாஜித் நழீமி மற்றும் அரச உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட தமிழ்மொழி பேசும் ஆசிரியர்கள் அரச ஊழியர்களினால் கண்கவர் கலை கலாசார நிகழ்வுகள் சிங்கள மொழியில் நிகழ்த்தப்பட்டன.

இப்பயிற்சி வகுப்பின் மூலம் ஆசிரியர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் சிங்கள மொழி ஆற்றலை விருத்தி செய்து கொள்வதுடன் தங்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளையும் இலகுபடுத்திக் கொள்ள முடிகின்றது.





தேசிய இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தல், சிங்களமொழி மூலம் வேலைகளை திறம்பட மேற்கொள்ளுதல் எனும் நோக்கத்துடனேயே இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் போது நிகழ்வின் ஏற்பாட்டாளர்களினால் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்கா நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**எம்.ரீ.எம்.பாரிஸ்...**

# கிழக்கின் குரல்



# சுற்றுலாத்துறை, காணி அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்

## கிழக்கு ஆளுனருடனான சந்திப்பில் முஷாரப் எம்.பி

**(அட்டாளைச்சேனை விசேட, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்)**

கிழக்கு மாகாணத்தில் கல்வி, சுற்றுலாத்துறை, சுகாதாரம், காணி அபிவிருத்தி போன்ற விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்துமாறு, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் புதன்கிழமை (31) இடம்பெற்ற சந்திப்பின் போது கேட்டுக்கொண்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், பல சவால்களை எதிர்கொண்டு நாட்டை மீட்டுவரும் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஆளுநரின் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். சிறுபான்மையினக் கட்சி ஒன்றின் தலைவரான தாங்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பதையிட்டு தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும், கிழக்கு மக்களும் இதனை பெரிதும் ஆதரித்துள்ளதாகவும் இதன்போது அவர் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் நீண்டகாலமாக தற்காலிக, பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றிவரும் ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

இக்கோரிக்கையை நானும் விரும்புகின்றேன். அதற்கான அனுமதி மத்திய அரசாங்கத்தினால் கிடைக்கும்போது அதனை விரைவாகச் செய்வேன். இதற்கான அனுமதி கிடைப்பதற்கு நீங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை பாராளுமன்ற உறுப்பினரிடம் கிழக்கு மாகாண ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

ஆளுநர் செந்தில் தொண்டமானுடனான சந்திப்பு திருப்திகரமாக அமைந்ததாகவும், மக்களுக்கான பணியில் மிக வேகமாக செயல்படுவார் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளதாகவும் முஷாரப் எம்.பி இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.



அக்கரைப்பற்று பிரதேச செயலக மட்டத்திலான சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவு ஏற்பாடு செய்த, சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்வு புதன்கிழமை (31) அக்கரைப்பற்றில் நடைபெற்ற போது.
(படம்: அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தின நிகழ்வின் போது. (படம்: திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# உலக வங்கி பிரதிநிதிகள் திருகோணமலைக்கு விஜயம்

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**

திருகோணமலை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்டு வரும் குளங்களை பார்வை இடுவதற்காக உலக வங்கி பிரதிநிதிகள் வியாழக்கிழமை (01) திருகோணமலைக்கு விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளனர்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம் என்ற திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் மொரவெவ, கோமரங்கடவல மற்றும் பதவிசிறிபுர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு டாக்டர் ஆரியதாச தெரிவித்தார்.



இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் 29 குளங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 குளங்களும், அம்பாறை மாவட்டத்தில் 20 குளங்களும் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் கீழ், நீர் முகாமைத்துவத்திற்கான விவசாய குழு, குறித்த அபிவிருத்தி திட்டங்களை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளதுடன், விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு மானிய அடிப்படையிலான மோட்டார் பம்ப் மற்றும் விதைகள், விவசாய உபகரணங்கள் தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சாகாமம் பகுதியில் யானை தாக்கி ஒருவர் பலி

**திருக்கோவில் தினகரன் நிருபர்**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அம்பாறை, திருக்கோயில் பிரதேசத்தின் அமைப்பாளராக செயற்பட்ட கங்காதரன் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாகாமம் பகுதியில் வயல் காவலில் ஈடுபட்டிருந்த போதே அவரை யானை தாக்கியுள்ளது. இவர் தம்பிலுவில் 2 பிரதான வீதியை வசிப்பிடமாகக் கொண்ட 62 வயது ஓய்வுநிலை விவசாய போதானாசிரியராக (AI) இருந்தவர்.

திருக்கோவில் சாகாமம் பகுதியில் உள்ள வயல் காணியில் காவலுக்கு நின்ற போது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் இடம்பெற்ற புகைத்தல் எதிர்ப்பு தின நிகழ்வின் போது.
(படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

## ஆரையம்பதி இலங்கை வங்கியில் கொள்ளை முயற்சி முறியடிப்பு

**(மட்டக்களப்பு குறூப், ஆரையம்பதி தினகரன், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)**



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி இலங்கை வங்கியை உடைத்து கொள்ளையிடும் பாரிய முயற்சி வங்கி முகாமையாளரின் துரித நடவடிக்கையால் தடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

வியாழக்கிழமை (01) அதிகாலை 3.00 மணியளவில் வங்கியை உடைத்து உள் நுழைந்த கொள்ளையர்கள், பிரதான பாதுகாப்பு பெட்டகம் (லொக்கர்) வைக்கப்பட்டிருக்கும் அறையை உடைக்க முயற்சித்த போது, வங்கி முகாமையாளர் லொக்கரின் கைப்பிடியில் தனது தொலைபேசி இலக்கத்தை இணைப்புச் செய்திருந்தமையால், லொக்கரைத் தொட்டவுடன் வீட்டிலிருந்த அவரது தொலைபேசியில் எச்சரிக்கை மணி ஒலிக்க, முகாமையாளர் உடனடியாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து பொலிசாரை அழைத்துக் கொண்டு வங்கிக்கு சென்றபோது கொள்ளையர்கள் தப்பியோடி விட்டனர்.

ஸ்தலத்திற்கு விரைந்த தடையவியல் பொலிசார் மோப்பநாயின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

வங்கியின் சில பகுதிகள் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன.

பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் தலசீமியா தின விழிப்புணர்வு ஊர்வலம்

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**



சர்வதேச தலசீமியா தின ஊர்வலம் ஹறிதாஸ் ஏகட் நிறுவன தலைவர் அருட் தந்தை ஜே.ஜேசுதாசன் அடிகளாரின் தலைமையில், தலசீமியா செயற்திட்ட இணைப்பாளர் ஆர்.கே மேரியில் ஒழுங்கமைப்பில் செவ்வாய்க்கிழமை (30) மட்டக்களப்பில் இடம் பெற்றது.

தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையினால், இந் நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இவ் ஊர்வலம் காந்தி பூங்காவில் இருந்து ஆரம்பமாகி சால்ஸ் மண்டபத்தினை வந்தடைந்தது.

இதன் போது வைத்திய அதிகாரிகளினால் தலசீமியா நோய் பற்றிய விழிப்புணர் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன், இந் நோய் எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படாத வகையில் பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு போதனா வைத்திய சாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் வாத்லட் மைதிலி, சிறுவர் நல விசேட வைத்திய நிபுணர் கே.சித்திரா, சிறுவர் நல விசேட வைத்திய நிபுணர் திருக்குமார் விஜி, மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டதுடன்,

இந் நோய் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மர நடுகை நிகழ்வு செவ்வாய்க்கிழமை (30) பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது ஆயுர்வேத வைத்திய அதிகாரி எஸ். எம்.றிஷாட், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலர் கொண்டனர். (படம்: கல்முனை குறூப் நிருபர்)

## விசேட தேவையுடையவர்களுக்கான தொழிற்சந்தை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்திலுள்ள விசேட தேவையுடையவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்வுஅண்மையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

விசேட தேவையுடையவர்களுடைய திறன்களை இனங்கண்டு அவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கி சமூகத்தில் நல்லதொரு நிலைக்கு அவர்களை கொண்டு வருவதே இவ்வேலைத்திட்டத்தின் மூல நோக்கமாக காணப்படுகின்றது.

இதில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த 11 பிரதேச செயலகத்தைச் சேர்ந்த விசேட தேவையுடையவர்கள் கலந்து கொண்டனர்.

### சனத்தொகை, வீட்டுவசதிகள் தொகை மதிப்பீடு

# அரச உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்தும் நடவடிக்கை

**(ஏறாவூர் சுழற்சி நிருபர்)**

சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு நடவடிக்கைகளுக்காக அரச உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்துவது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் தொகைமதிப்பு அத்தியட்சகருமான பீ.எம். பீ.அநுரகுமார சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பின் கள நடவடிக்கைகள் நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்று நிலைமைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பிற்போடப்பட்டு வந்த நிலையில், இவ்வருட ஜூலை மாதம் தொடக்கம் அக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் நாட்டிலுள்ள அனைத்து கட்டடங்களையும் நிரற்படுத்தும் கள நடவடிக்கையினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாகவும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக பொருத்தமான அரச உத்தியோகத்தர்களை இதற்கு நியமிக்குமாறு அனைத்து பிரதேச செயலாளர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இந்த தொகைமதிப்பு நடவடிக்கைகளின் போது நிரற்படுத்தும் உத்தியோகத்தர், வட்டார உத்தியோகத்தர் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர் என பல்வேறுபட்ட பதவிகளுக்கான நியமனம் செய்ய வேண்டிய தேவையுள்ளது என அவர் அறிவித்துள்ளார். இறுதியாக, குடிசன வீட்டு வசதிகள் தொகைமதிப்பானது 2012 ஆம் ஆண்டு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன் விற்பனை; வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன்களை விற்பனை செய்பவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

பொதுச் சந்தைகள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை செய்யும் வியாபாரிகள் மீன்களை புதிதாகக் காட்டுவதற்காக மணல் கலப்படம் செய்து வருவதாக பொது மக்களிடமிருந்து அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருவதாக தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட சுகாதார வைத்தியதிகாரி அலுவலகங்களுக்குட்பட்ட மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் மீன் வியாபாரிகளுக்கு இது தொடர்பான அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன்களை விற்பனை செய்பவர்களுக்கெதிராக, சட்ட நடவடிக்கை, கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலுக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மீன் விற்பனை நிலையங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மீன்களை புதிதாகக் காட்டுவதற்காக மணல் கலப்படம் செய்து விற்பனை செய்து வந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## கல்முனையில் திண்மக் கழிவகற்றல்

**(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் முகம்மட் றிபாஸ் தலைமையில் திண்மக் கழிவகற்றல் வேலைகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் டெங்கு பரவுவதை கட்டுப்படுத்தும் முகமாக கல்முனை மாநகர சபையால் இவ் வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்ககதாகும்



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக
சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. வித்தியாசமான உருக்களின் தொகுதியை கொண்ட கூட்டத்தின் கீழ் கோடிடுக.

i.  ii.  iii. 

பின்வரும் தொடர்புகளை அவதானித்து விடை எழுதுக.

 = 500 ml

 = 100 ml எனில்

2.  = ?

i. 900 ml ii. 600 ml iii. 800 ml

3.  = ?

i. 600 ml ii. 500 ml iii. 400 ml

4. ஒன்றின் இயல்பை அறியுமுன் அதனைச் செய்யத் தொடங்காதே. எனும் கருத்தை தரும் பழமொழி
i. ஆழமறியாது காலை விடாதே
ii. மின்னுவதெல்லாம் பொன்னல்ல
iii. பாலுக்கு பூனை காவலா?

5. 1835ஆம் ஆண்டுடன் 75ஆம் ஆண்டை கூட்டினால் கிடைக்கும் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு?
i. 19ஆம் நூற்றாண்டு ii. 20ஆம் நூற்றாண்டு iii. 21ஆம் நூற்றாண்டு

6. பின்வரும் ஆங்கில எழுத்துக்களில் செங்கோணங்களை மாத்திரம் கொண்ட எழுத்துக்களின் தொகுதி
i. NTL ii. KLT iii. TLH

7. 
இவ்வுருவிலுள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 9
ii. 10
iii. 12

8. 


இவ்விரண்டு செவ்வகங்களின் நீளம், அகலம் ஆகியவற்றை கூட்டி ஒரு சதுரமாக மாற்ற வேண்டுமாயின் அச்சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?
i. 8 cm ii. 10 cm iii. 12 cm

9. ஜனவரி மாதம் 01ஆம் திகதி சனிக்கிழமை எனில் அந்த மாதத்தில் எத்தனை சனிக்கிழமைகள் உள்ளன?
i. 3 ii. 4 iii. 5

10. ஒரு எண்ணும் அதன் 7 மடங்கும் 48 எனில் அவ்வெண் யாது?
i. 6 ii. 7 iii. 8

11. ஒரு கடையிலுள்ள பழங்களின் 3/8 பங்கு அழுகி விட்டன. 1/8 பங்கு 20 பழங்கள் எனில் நல்ல பழங்கள் எத்தனை?
i. 200 ii. 150 iii. 100

12. பருமன் குறைந்து செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடையின் கீழ்க் கோடிடுக.
i. பூனை, கரடி, முயல், யானை
ii. நுளம்பு, பூனை, முயல், மாடு
iii. யானை, மாடு, கரடி, பூனை

13. 






i. 30 ii. 31 iii. 32




14. A என்றவர் எத்தனை தடவை வடக்கு பக்கம் நோக்கி பயணித்தார்?
i. 3 ii. 1 iii. 2

15. B என்பவர் எத்தனை தடவை தெற்கு நோக்கி திரும்பினார்?
i. 2 ii. 3 iii. 4

16. இருவரும் கிழக்கு நோக்கி பயணித்த மொத்த தடவைகள் எத்தனை?
i. 10 ii. 9 iii. 8

17. 
இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 9
ii. 8
iii. 7

18. ஒரு மரத்தில் 2500 பூக்கள் பறிக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு 100 சரங்கள் கட்டப்பட்டால் ஒரு சரத்திலுள்ள பூக்களின் எண்ணிக்கை யாது?
i. 25 ii. 250 iii. 50

19. **7 x 6 x 2 x 0 = ?**
i. 84 ii. 42 iii. 0

20. 
இதில் நிழற்றப்பட்ட பகுதி என்ன பங்கு?
i. ½
ii. 6/8
iii. ¼

21. 6, 18, 54,….?......
i. 162 ii. 170 iii. 184

22. பின்வருவனவற்றுள் எப்போதும் உண்மையான கூற்று
i. காற்று பலமாக வீசுகிறது.
ii. மழைபெய்தால் மின்னல் உண்டாகும்.
iii. சூரியன் கிழக்கில் உதிக்கும்.

23. 
தரப்பட்ட படத்துடன் தொடர்பற்ற சொல்லைத் தெரிக.
i. ஒளி
ii. ஒலி
iii. வெப்பம்

24. 120 மாம்பழங்களில் 2/8 பங்கில் 20ஐ கழித்து வரும் விடையை உரோமன் இலக்கத்தில் எழுதினால்
i. X ii. XX iii. XXX

25. 5 கொப்பிகள் வாங்கினால் ஒரு அழிறப்பர் இலவசம் எனில் ஐந்து அழிறப்பர்களை இலவசமாகப் பெற எத்தனை கொப்பிகள் வாங்க வேண்டும்?
i. 20 ii. 25 iii. 30

26. 8 பிள்ளைகளைக் கொண்ட 5 குழுக்கள் காணப்படுகின்றன. இதனை 10 பிள்ளைகளைக் கொண்ட எத்தனை குழுக்களாக மாற்றலாம்?
i. 8 குழுக்கள் ii. 6 குழுக்கள் iii. 4 குழுக்கள்

27. இந்த கூட்டல் அட்டைகளில் அடுத்துவரவேண்டிய அட்டை எது?

| 2 + 2 | 4 + 1 | 5 + 3 | 8 + 2 | ? |

i. | 8 + 4 | ii. | 10 + 2 | iii. | 9 + 1 |

28. 20 தொடக்கம் 35 வரையுள்ள எண்களில் 7 ஆல் மிகுதியின்றி வகுபடக்கூடிய எண்கள் எத்தனை?
i. 3 ii. 4 iii. 2

29. கோகுல் காலையில் பாடசாலைக்கு சென்றபோது அவனது நிழல் அவனது பின்னே விழுந்ததெனில் அவன் சென்ற திசை யாது?
i. கிழக்கு ii. மேற்கு iii. வடக்கு

30. **அரசன்** ஏழை எளியோருக்கு **தர்மம்** செய்தான். தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கு ஒத்தகருத்து சொற்கள் எழுதுக.
i. மன்னன், வீரம் ii. மன்னன், அறம் iii. மன்னன், அன்பு

31. 6m அகலமும் 8m நீளமும் உள்ள செவ்வகத்தை 4 சமபங்காக வெட்டினால் பெறப்படும் செவ்வகத்தின் நீளப்பக்கத்தின் அளவு யாது?
i. 10m ii. 8 m iii. 4 m

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

32.



இவ்விரு அளவு நாடாக்களைக் கொண்டு 4m நீளமுள்ள துணியொன்றை சரியாக அளக்க முடியுமா?
i. முடியும்   ii. முடியாது   iii. கூறமுடியாது

33. கடிகாரமுகமொன்று நேரம் 4.15 ஐ காட்டுகிறது. எனவே இதில் சின்ன முள்ளுக்கும் பெரிய முள்ளுக்கும் இடைப்பட்ட உள் கோணமானது?
i. விரிகோணம்   ii. செங்கோணம்   iii. கூர்ங்கோணம்

34. 750g சீனி ரூபாய் 240.00 எனில் 1 kg 250g சீனி எவ்வளவு ரூபாய்?
i. ரூபாய் 420.00   ii. ரூபாய் 400.00   iii. ரூபாய் 380.00

35. கட்டுக்கதை என்ற சொல்லை இரகசியக் குறியீட்டினால் எழுதினால் வரவேண்டிய இலக்கக் குறிகள்?
i. 721475   ii. 712457   iii. 712754

36.



இதன்படி 2க்கு எதிர்பக்கம் இருக்கவேண்டிய இலக்கம் யாது?
i. 6   ii. 4   iii. 5

37. காலை 9 மணிக்கு திறந்து மாலை 6 மணிக்கு மூடப்படும் கடையானது ஒரு வாரத்தில் 6 நாட்கள் திறந்திருக்கும் எனில் 6 நாட்களில் அது திறந்திருக்கும் மொத்த மணித்தியாலங்கள் எத்தனை?
i. 54 மணித்தியாலங்கள்   ii. 52 மணித்தியாலங்கள்
iii. 48 மணித்தியாலங்கள்

38.



i. 10   ii. 15   iii. 20

39.



இவ்வட்டத்திலுள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடியமிகப்பெரிய எண்ணுக்கும் மிகச்சிறிய எண்ணுக்கும் இடையேயான வேறுபாடு யாது?
i. 57951   ii. 47951   iii.94951

40. ஒரு மைதானத்தில் இரு கம்பங்களுக்கு இடையில் 4 கொடிகள் தொங்கவிடப்பட்டன. மைதானத்தை அலங்கரிக்க 12 கம்பங்கள் நடப்பட்டதெனில் மொத்த கொடிகள் எத்தனை?
i. 40 கொடிகள்   ii. 44 கொடிகள்   iii. 42 கொடிகள்

## கடந்த வார (26.05.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

**I.**
1. நீலவானில்
2. எழுந்து எழுந்து
3. பார்
4. நீல, எழில்
5. i. ஆகாயம்   ii. மதி / சந்திரன்
   iii. மனம்   iv. தாமரை
6. நிலா

**II.**
7. நறுமணம்
8. மகிழ்ச்சி
9. அகராதி
10. வலை
11. சுயநலவாதி

**III.**
12. தண்ணீர்
13. அலறும்
14. வடலி

**IV.**
15. தொழுகின்; எல்லாம்

**V.**
16. படிக்காத பாமர மக்களிடையே கூட வானொலி நிகழ்ச்சிகள் எளிதில் சென்று விடுகிறது.
17. i. வெம்மை   ii. பழைமை   iii. கீழிறங்கி

**VI.**
18. i. தயவுசெய்து தினமும் பாடசாலைக்கு வாருங்கள்
19. i. Library   ii. Playground
20. i. கிளி   ii. மஞ்சள் நிறம்
    iii. புத்தகம் வாசியுங்கள்

**VII.**
21. i. அம்மா கடைக்குச் சென்று மா, பலா, வாழை என்பவற்றை வாங்கி வந்தார்.
    ii. எனக்கு “தலை வலிக்கிறது” என இராமன் கூறினார்.
22. i. ஒட்டகம்   ii. வட்டம்   iii. வலை
23. i. சொன்ன சொல் தவறுதல்
    ii. குழந்தை தூங்குதல்

**VIII.**
24. ரூபாய் 10,000
25. 960
26. 15
27. 35 m
28. 10
29. i. 0.5   ii. 3

**IX.**
30. 3
31. 1
32. 3
33. 2
34. 3
35. 1
36. 3
37. 2
38. 3
39. 3
40. 2

41. 3
42. 1
43. 1
44. 1
45. 2
46. 2
47. 3
48. 1
49. 3
50. 1
51. 3
52. 1
53. 2
54. 2
55. 1
56. 1
57. 2
58. 3
59. 2

# தமிழகத்தின் வரலாற்றில் எக்காலமும் அழிக்க முடியாத அடையாளம் கலைஞர்

**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்ததின நூற்றாண்டு விழா நாளை சனிக்கிழமை (03) வெள்ளவத்தை–யில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்வி–ழாவில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் பலரும் கலந்து சிறப்–பிக்க உள்ளனர். இலங்கை_ இந்திய தொடர்பா–ளர் மணவை அசோகன் நிகழ்ச்சி ஏற்பாட்டாளராக செயற்படுகிறார்.**

நாகபட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளை என்ற ஊரில் 1924 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி கருணாநிதி பிறந்தார். அஞ்சுகம் அம்மையாருக்கும் முத்துவேல் அவர்களுக்கும் மூன்றாவது மகனாக இசை வேளாள சமூகத்தில் பிறந்தவர் கலைஞர் கருணாநிதி. இவருக்கு முன்னால் இரண்டு சகோதரிகள் இருந்தார்கள்.

கருணாநிதியின் இயற்பெயர் தட்சிணாமூர்த்தி. இவர் பள்ளிப்படிப்பை திருக்குவளையிலும், பின்னர் திருவாரூரிலும் பயின்றார். இளம் வயதில் பல்வேறு தமிழ்த் தலைவர்களின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டார் கருணாநிதி.

திருக்குவளை என்னும் சிறு கிராமத்தில் பிறந்த கருணாநிதி, தனது 14வயதிலேயே பல்வேறு சமூக இயக்கங்களில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டு அரசியலில் நுழைந்தார். தமிழகத்தில் இந்தி திணிப்புக்கு எதிரான பல்வேறு போராட்டங்களுக்கு மூலகாரணமாக இருந்தவர் கருணாநிதி.

இவரால் தொடங்கப்பட்ட 'மாணவநேசன்' என்னும் இதழ் தற்போது 'முரசொலி' என்னும் நாளிதழாக உருவெடுத்துள்ளது. முரசொலி பத்திரிகை பின்னாளில் தி.மு.க கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையானது.

ஒருபுறம் முழுநேர அரசியல்வாதியாக இயங்கிக்கொண்டிருந்தாலும், தமிழ் திரையுலகிலும் கவனம் செலுத்தி பல்வேறு திரைப்படங்களில் வசனகர்த்தாவாக தனது திராவிட சித்தாந்தங்களைப் பரப்பினார்.

இவரது முதல் படமான 'இராஜகுமாரி' 1947 இலும், கடைசிபடம் 'பொன்னர் சங்கர்' 2011 இலும் வெளியானது. திருக்குறள் உரை, சங்கத்தமிழ், குறளோவியம், தென்பாண்டி சிங்கம், ரோமாபுரி பாண்டியன் உள்ளிட்ட 100 இற்கும் மேற்பட்ட உரைநடை மற்றும் இலக்கிய நூல்களை எழுதியுள்ளார். தூக்கு மேடை, மணிமகுடம், நானே அறிவாளி உள்ளிட்ட மேடை நாடகங்களிலும் நடித்துள்ளார். 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரியில் நிறுவியவர். வயோதிக பிரச்சினைகளால் 07 ஓகஸ்ட் 2018 இல் தனது 94 ஆவது வயதில் காலமானார் கருணாநிதி.

கருணாநிதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக சுமார் 50 ஆண்டுகள் பதவி வகித்தார். தமிழகத்தின் முதல்வராக நான்கு தசாப்தங்களில் ஐந்து முறை பதவிவகித்துள்ளார். 1957 இலிருந்து13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இவர், இதுவரை தோல்வியடைந்ததே இல்லை. 1971 மற்றும் 2006 என இருமுறை கௌரவ டொக்டர் பட்டம் பெற்றுள்ளார். இவரது 'தென்பாண்டி சிங்கம்' புத்தகத்திற்காக தமிழ் பல்கலைக்கழகம் 'ராஜராஜன்' விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

### கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை காலை 9 மணிக்கு கருணாநிதி பிறந்தநாள் நூற்றாண்டு விழா





கலைஞருக்கு அருகில் காணப்படுகின்றார் கட்டுரையாளர் மணவை அசோகன்

கலைஞர் கருணாநிதி என்றும் தமிழக மக்களின் மனதில் எங்கும் நீங்காத இடம் பிடித்தவர். கருணாநிதி திராவிட அரசியலின் முத்தாக, முதுகெலும்பாக 50 ஆண்டுகள் நிலைத்து நின்றார்.

திருவாரூரில் ஒரு சுயமரியாதைக் கூட்டத்தில் பங்கேற்ற பட்டுக்கோட்டை அழகிரியின் பேச்சில் ஈடுபாடடைந்து தன்னையும் திராவிட இயக்கத்திற்குள் இணைத்துக் கொண்டார் மு. கருணாநிதி.

அவர் மீது கொண்ட அன்பின் காரணமாகத் தான் அழகிரி என்று தன்னுடைய மகனுக்கு பெயர் சூட்டினார் கலைஞர். மாணவர் அணி செயலாளரில் தொடங்கி பத்திரிகையாளராக அழகிரியின் பேச்சினால் அதிகம் கவரப்பட்ட கருணாநிதி பின்னாளில் தன்னுடைய திருவாரூர் நண்பர்களுடன் சேர்ந்து மாணவர்கள் அணி ஒன்றையும் கையெழுத்துப் பிரதி பத்திரிகை (மாணவ நேசன்) ஒன்றையும் 1941 இல் நடத்த ஆரம்பித்தார். அது ஒரு மாத இதழ் ஆகும்.

குடிசைப் பகுதிகளில் சென்று அங்கு வாழும் மக்களின் நிலை குறித்து கேட்டறிந்து அதை எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அந்த கையெழுத்துப் பிரதி துண்டுப்பிரசுரம்தான் பின்னாட்களில் முரசொலியாக உருவெடுத்தது.

ஒரு நாள் பகவான் சாய்பாபா அவர்கள் நாத்திகனான கலைஞர் கருணாநிதி அவர்களை அவரது கோபாலபுரம் இல்லத்தில் நேரில் சந்தித்தார். அவ்வேளை ஆத்திகர்கள் பலர் சாய்பாபாவிடம் 'நாத்திகனான கலைஞர் அவர்களை தாங்கள் சந்திக்கக் காரணமென்ன?' என்று வினவினர். அதற்கு சாய்பாபா, 'கலைஞர் அவர்களை நான் ஒரு இராஜராஜ சோழனாகத்தான் காண்கிறேன். எனவே நான் கலைஞர் சந்தித்தது தவறில்லை'என்று பதிலளித்தார்.

1957 இல் காங்கிரஸ் கட்சியினர் மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி செய்தார்கள். அந்தக் காலத்தில் இந்தி மொழித் திணிப்பு ஒரு பெரும் சவாலாக இருந்தது. ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி 1957 ம் ஆண்டு கருணாநிதி தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

கல்லக்குடியில் இருக்கும் ரயில் தண்டவாளத்தில் தலையை வைத்து இவர் நடத்திய போராட்டம் பின்னர் கட்சியில் இவருக்கு முக்கியமான இடத்தை அளித்தது. 1963 ஆம் ஆண்டு அண்ணாதுரையுடன் இணைந்து இந்தி எதிர்ப்பு மாநாட்டினை சென்னையில் நடத்தி அதற்காக இருவரும் சிறை சென்றார்கள்.

1957 இல் சுயேச்சை வேட்பாளராக குளித்தலை தொகுதியில் நின்று வெற்றி பெற்றார் கருணாநிதி. அச்சமயம் அவருக்கு வயது 33 ஆகும். பின்னர் அதனைத் தொடர்ந்து 12 முறை எம்.எல். ஏயாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்திய அரசியல்வாதிகள் யாரும் செய்திடாத சாதனை இது என்பது குறிப்பிடத்தக்கது. 1984 இல் மட்டும் அவர் தேர்தலில் போட்டியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1967 இல் முதன்முறையாக தி.மு.க அரசியல் களம் கண்டது. அப்போது கட்சியில் பொருளாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

தமிழகத்தில் ஐந்து முறை கலைஞர் முதலமைச்சராக பதவி வகித்துள்ளார். தன்னுடைய 45 ஆவது வயதில் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றார். ஒரு கட்சியை உயிர்ப்புடன் வைத்திருப்பது அத்தனை எளிதான காரியமில்லை. ஏற்ற இறக்கங்களையும் சவால்களையும் தாண்டியே இன்று திராவிட முன்னேற்றக் கழகம் பயணித்துக் கொண்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாக எம்.ஜி.ஆர் ஆட்சி செய்த 13 வருடம் என்பது மிகப்பெரும் இடைவெளி. மற்றொரு கட்சியாக இருந்திருந்தால் தி.மு.க என்பது வாழ்ந்த தடம் தெரியாமல் அழிந்து போயிருக்கும் என்பதில் துளியும் சந்தேகம் இல்லை.

'தூக்குமேடை' நாடகத்தின் போது எம். ஆர். ராதா இவருக்கும் கலைஞர் என்ற பட்டம் அளித்தார். 1947 இல் ராஜகுமாரி படத்திற்கு முதன்முதலாக வசனகர்த்தாவாக பணியாற்றினார் கலைஞர்.

கலைஞரின் வசனத்தில் கடைசியாக வெளியான திரைப்படம் பொன்னர் சங்கர் (2011) ஆகும்.



மணவை அசோகன்

# இக்கட்டான சூழலில் முஸ்லிம்களை மீண்டெழ செய்த ஆர்.பி.எஸ்.எல் கொன்ஸோடியம்

## ஆர்.பி.எஸ்.எல் கொன்ஸோடியம் அமைப்பின் உப தலைவர் வசீர் முக்தார் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி







**மீள் சமாதான இலங்கைகான அமைப்பின் உருவாக்கம் தொடர்பான முன்னைய அனுபவங்கள் பற்றி பகிர்ந்து கொள்வீர்களா?**

2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை,அச்சம், பாதுகாப்பு, கெடுபிடிகள் போன்ற காரணங்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.இந்த தாக்குதலின் மறுநாள் கண்டியிலுள்ள புனித அந்தோனியார் ஆலயத்திற்கு கண்டி நகர் முன்னாள் ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவரும்,முன்னாள் வக்பு சபை உறுப்பினருமான மௌலவி பஸுலுர்ரஹ்மான் தலைமையில் துறைசார்ந்த ஒரு குழுவினர் பிரதான போதகரைச் சந்தித்து தாக்குதல் தொடர்பில் அனுதாபம் தெரிவித்துக் கொண்டதோடு பரஸ்பரம், நல்லெண்ணம், சகவாழ்வு பற்றி கலந்துரையாடினர்.

இதற்குப் பின் கண்டி மாவட்டத்திலுள்ள ஒருங்கிணைந்த சமாதான அமைப்பின் தலைவர் காமினியுடனான சிறிய சந்திப்பொன்றை சகோதரர் சயிப்டீன் ஹனிபா இல்லத்தில் நடத்தினோம்.அந்த ஒன்று கூடலின் போது பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது. ஏனைய சமூகத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இடையே ஒரு நல்லுறவை வளர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் கண்டியிலுள்ள புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள், பல துறை சார்ந்த பல தரப்பட்டவர்கள் சகோதரர் சயிப்டீன் ஹனிபாவின் இல்லத்தில் மீளவும் ஒன்று கூடினர். அதன் அடிப்படையில் தான் இந்த விடயங்களை தீர ஆராய்ந்தனர்.குறிப்பாக முஸ்லிம் சமூகம் பற்றி உயிர்த்த தாக்குதலுக்குப் பின்பு பெரும்பான்மையின சமூகத்தவர்கள் பெரும் தப்பபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர். ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் தீவிரவாதக் கண்ணோட்டத்துடன் நோக்கினர். சில ஊடகங்களும் திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லிம் மக்களை பாரியளவில் பீதிகொள்ளச் செய்தன. அந்த வகையில் இலங்கையில் மீளவும் சமாதானத்தை கட்டியெழுப்புவோம் என்ற பெயரில் வாட்சப் குழுமத்தை ஆரம்பித்தோம். இதனை கண்டியிலுள்ள புத்திஜீவிகள் துறைசார்ந்தவர்கள் சேர்ந்து ஆரம்பித்தோம்.

**பொதுப் பரப்பில் ஒரு இக்கட்டான சூழலில் மீளவும் சிங்கள, முஸ்லிம் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபடும் போது அதனை வினைத்திறன்மிக்க செயற்பாடுகளுடன் நகர்வினை மேற்கொள்வதற்கு பின்புலமாக இருந்தவர்கள் பற்றிக் கூறுவீர்களா?**

இக்கால கட்டத்தில் தினசரி கண்டி மீராமக்காம் பள்ளிவாசலில் ஒன்று கூடலை செய்தோம். அன்றைய களநிலவரங்கள், இனவன்முறைகள்,கலவரங்கள் போன்றவற்றின் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுவதற்கு கண்டி மீராமக்காம் பள்ளி பயன்படுத்தப்பட்டது.அன்று கண்டி மீராமக்காம் பள்ளிவாசலின் தலைவராக இலாஹி ஆப்தீன் எங்களோடு இணைந்து பணியாற்றினார்.அவ்விடத்தைத் தந்துதவியமைக்காக நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வர்த்தகப் பிரமுகர் சயிப்டீன் ஹனிபாவை நாம் மறக்க முடியாது. ஏனென்றால் அந்தச் சந்தர்ப்பம் முஸ்லிம்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டிருந்த காலம். முஸ்லிம்கள் ஒன்று கூடுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றைக் கூட காவல்துறையினர் வழங்கவில்லை. இப்படியான சந்தர்ப்பத்தில் எந்தவிதமான பிரச்சினைகள் வந்தாலும் பரவாயில்லை என்று தனது வீட்டைத் தந்துதவியவர் சயிப்டீன் ஹனிபா.அதனால்தான் முதலாவது கூட்டத்தை அவரது இல்லத்தில் நடத்தினோம்.

அதேவேளை வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி (அப்பொழுது அவர் அரசியலில் இருக்கவில்லை) அவர் எங்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார். கண்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பினை வசிப்பிடமாகவும் கொண்ட தொழிலதிபர் சமூக சேவையாளர் முஸ்லிம் சலாஹுதீன் ஆரம்பத்தில் இணைந்து கொண்டார்.நண்பர் சட்டத்தரணி சிஹார் ஹஸன் தேவையான சட்ட ஆலோசனைகளையும் அறிவுரையும் வழங்கினார்.

இதன் ஸ்தாபகத் தலைவர்களாக பின்வருவோர் இருந்து செயற்பட்டனர்.பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்,

Mr. Saif Hanifa Director of Sara Travels, Mr Wazeer Mukthar (Member of Yatinuwara Pradeshiya Sabha & Director of Lanka Guardian Commodities Pvt ltd), Prof Mohamed Aslam (University of Sabaragamuwa), Mr Ali Shabri PC, Mr Muslim Salahuddeen, Mr Fauzer Shereefdeen (Former Director General of consumer affairs ministry of commerce), Mr Shaheed M Rizmy (President of the ACYMMA), Dr Mohamed Niyaz (Former president of the union of Central province Surgeons), Dr Mohamed Wazil (Nephrologist General hospital of Kandy) Dr Katchchi Mohamed Zahir GP, Mr Ilaahi Abdeen (Former Deputy Mayor of Kandy MMC), Mr Mohamed Gazali (President of the YMMA Kandy branch) , Prof Siddeek (Dental faculty of the university of Peradeniya), Dr Naufal (Member of the delimitation committee), Mr Gazali Shaheed (Former president of 6Ys Kandy district), Mr Fauz Mohamed (Business Consultant) Major Andul Rahuman, As Sheikh Mafaz Najumudeen (President of the youth front of ACJU Udunuwara), Mr. Shihar Hassan (Attorney at law).

ஒரு இக்கட்டான சூழலில் முஸ்லிம்களை மீண்டெழச் செய்வதற்கும் மீளவும் சமூகமயப்படுத்துவதற்கும் கண்டி கெட்டம்பயிலுள்ள ஓக்ரோ ஹோட்டலில் நடத்திய கூட்டம் பிரதான வகிபாகத்தைக் கொண்டிருக்கிறது என்று கூறலாம்.முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள்,அதற்கான என்னென்ன வகையிலான தீர்வுகளைப் பெறுவது என்பது பற்றி கலந்தாலோசித்தோம்.

இதன் நிமித்தம் கண்டி ஓக்ரோ ஹோட்டலில் சமாதானத்தை வலியுறுத்தி பெரும்பான்மையின மக்களுக்கான பாரியதொரு தெளிவூட்டல் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தோம். டியூடர் சில்வா, விக்டர் ஐவன், மௌலவி அம்ஹர் ஹக்கம்டீன், பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர், தற்போதைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வினை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தோம். அது ஒரு பாரிய வெற்றியை ஈட்டித் தந்தது.இந்நிகழ்வு ஒன் லைன் ஊடாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் அதேவேளை இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் வாயிலாகவும் முஸ்லிம்கள் மீது கொண்டுள்ள அச்சம், பயம், பீதி, சந்தேகம் என்பவற்றை போக்குவதற்கான ஒரு நிகழ்வாக அமைந்தது,

இந்த நிகழ்வு இலங்கையின் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக நாம் கருத வேண்டியுள்ளது. இந்த செய்தியைப் வெளிக்கொணர்வதில் ஊடகவியலாளராக இக்பால் அலி முக்கிய பங்களிப்பை நல்கினார்.இந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த நிகழ்வில் அதிகமானளவு பிறமத சகோதரர்கள் கலந்து கொண்டனர். முஸ்லிம்கள் பற்றிய தெளிவையும், நாட்டினுடைய பாதுகாப்பு சம்பந்தமான விளக்கங்களையும் இராணுவப் புலனாய்வாளர்களால் வழங்கப்பட்டன. குறிப்பாக முஸ்லிம் சமூகம் ஓர் இக்கட்டான அவல நிலையில் இருந்து மீள்வதற்கான ஒரு கூட்டமாக இது அமைந்தது எனலாம். இது எமது அமைப்பினருக்கு கிடைத்த முதலாவது வெற்றியே.

**இப்பிரச்சினைகளை நுணுக்கமாக அவதானித்து உங்கள் அமைப்பினர் முன்னெடுத்த பணிகள் பற்றி**

.அன்றிருந்த அமைச்சர் பைசர் முஸ்தபா இந்த அமைப்பின் நடவடிக்கைகளுக்கு மிகவும் ஒத்துழைப்பாக இருந்து செயற்பட்டார். அவர் தேசிய பாதுகாப்புச் செயலகத்தில் எங்களுடைய பிரச்சினைகளை முன்வைப்பதற்கு முக்கியமான ஏற்பாடொன்றை செய்து தந்தார். பிரதிப் பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் இராணுவ உயர் அதிகாரிகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தலைமையேற்று செயற்பட்ட காவல் துறையின் உயர் அதிகாரிகள். விசேட அதிரடிப்படையின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் லத்தீப் உட்பட முக்கிய அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதன்போது முஸ்லிம்கள் அக்கால கட்டத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டன. குர்ஆன், இஸ்லாமிய மார்க்க சஞ்சிகைகள், அறிவு சார் நூல்கள் வைத்திருந்தவர்கள் அநியாயமான முறையில் கைது செய்யப்பட்டார்கள். அவர்களை விடுவிடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு நாங்கள் வேண்டுகோள்களை முன் வைத்தோம். அதற்கு அவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இனிமேல் இப்படியான கைது நடவடிக்கைகள் இடம்பெறாது எனவும் அந்தச் சந்திப்பின் போது பிரதிப் பாதுகாப்புச் செயலாளர் எமக்கு வாக்குறுதி வழங்கினார். அப்பொழுது முஸ்லிம்கள் வாழும் ஒவ்வொரு பிரதேசங்களிலும் இராணுவம் குவிக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடைபெற்றது. பாண் வெட்டுவதற்கு வைத்திருந்த கத்தியைக் கூட வீசின ஒரு காலம். வீட்டில் சமையலுக்காக வைத்திருந்த கத்திகளை பள்ளியில் ஒப்படைத்து பின்னர் இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டிய ஒரு பயங்கரமான சூழல் நிலவியது. இந்தச் சந்திப்பின் மூலம் உடனடியாக இவ்வாறான கைதுகள், பரிசோதனைகள், இராணுவ கெடுபிடிகள் தடுத்து நிறுத்தப்பட்டது. இதற்கு நாம் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் அன்றைய ஜனாதிபதி மைத்திரிப் பால சிறிசேனவினால் ஜனாதிபதி செயலகத்தில் மற்றுமொரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.அதில் முக்கியமாக எங்களது அமைப்பினைச் சேர்ந்தவர்களும் பங்கு கொண்டனர்.வீடுகளில் சமையலுக்காக வைக்கப்பட்டிருந்த சிறிய ரக கத்திகள், தோட்டத்தில் தற்பாதுகாப்புக்காக வைத்திருந்த வாள்கள், வீட்டுப் பாவனைக்குத் தேவையான எந்த உபகரணங்களாக இருந்தாலும் முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டார்கள். இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அப்பொழுது ஜனாதிபதி அங்கு சமுகமளித்திருந்த பொலிஸ் மாஅதிபருடன் வினவி உடனடியாக நிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பித்தார். அதேநேரம் கண்டியில் முஸ்லிம் பாடசாலைகளில் மாணவிகள், ஆசிரியைகளின் ஆடை சம்பந்தமான பிரச்சினைகள் எழுந்தன.இது தொடர்பில் எமது அமைப்பு சார்ப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கவனத்திற்கு கொண்டுவந்தோம்.உரிய உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சுமுகமான முறையில் இப்பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக் கொள்ள ஒத்துழைப்பு வழங்கினார். அந்நாருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேபோன்று இப்பிரச்சினை தொடர்பில் மத்திய மாகாண ஆளுநர், மத்திய மாகாண செயலாளர் ஆகியோர் எங்களுடன் பிரத்தியேகமான முறையில் பரஸ்பரம் கலந்துரையாடலில் ஈடுபட்டு ஒரு சமூக தீர்வினைப் பெற்றுக் கொடுக்க பங்களிப்பு நல்கினர். அவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவை தவிர இக்கால கட்டத்தில் கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கும் தீவிரவாதி சஹ்ரான் வந்து விட்டது சென்றதாக ஒரு பௌத்த தேரர் தலதா மாளிகைக்கு முன்னால் சென்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பில் சம்பந்தப்பட்ட பௌத்த தேரரை அணுகி அவர்களுக்கு தெளிவுகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுட்டன. அவருடைய அக் கூற்றை மீளவும் வாபஸ்பெறச் செய்ததோடு இந்தப் பொய் குற்றச் சாட்டுத் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கைகளில் எமது அமைப்பு முயற்சிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தைத் தொடர்ந்து கம்பஹா, குருநாகல் மாட்டங்களில் பல முஸ்லிம் கிராமங்கள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகின. அந்த தாக்குதலின் போது கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரின் பிள்ளைகளுக்கான கல்வி வசதியினை கொழும்பு சாஹிராக் கல்லூரியில் பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இவ்வாறு எமது முஸ்லிம் சமூகம் தாக்குதலுக்கு உள்ளான சந்தர்ப்பத்தில் எங்களது அமைப்பு இயன்ற பங்களிப்பினை மேற்கொண்டுள்ளது என்று கூற முடியும்.

கொரோனா காலத்தில் பொது மக்களுக்கான தெளிவூட்டல்களையும் வழிகாட்டல்களையும் செய்துள்ளோம். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சமூக வலைத்தளம், ஸூம் ஊடாக எங்களது பிரசார முன்னெடுப்புக்களை மேற்கொண்டோம்.

கொரோனா காலத்தில் முஸ்லிம் உடல்களை தகனம் செய்வதற்காக தீர்மானம் எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் நீதிபதி சலீம் மர்சூப் தலைமையின் கீழ் ஒரு விசேட குழு அமைக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் நடைமுறையிலுள்ள கொரோனா உடல்களை அடக்கம் செய்யக் கூடிய ஆய்வுகளைப் பெற்று துறை சார்ந்தவர்களுடைய அறிக்கையைத் தயாரித்து ஒரு கிழமைக்குள் அமைச்சர் அலி சப்ரியின் ஊடாக ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தோம். அதன் பின்பு அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நல்லடக்கம் செய்வதற்கான இடங்களை பகுப்பாய்வு செய்வதற்கான மண்வள ஆய்வுக் குழுவொன்றை நியமனம் செய்தனர். இந்த விடயத்தில் அவர் முழு மூச்சாக நின்று இயங்கினார். எப்படியாவது இவ்வாய்வு அறிக்கைகளை வைத்து அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக இயங்கியமைக்காக அமைச்சர் அலி சப்ரிக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். ஆனாலும் துரதிருஷ்டவசமாக எமது சமூகம் பலவிதமான சவால்களுக்கு உட்படுத்தப்பட்டனது.

எவ்வாறாயினும் நாங்கள் வழங்கிய ஆய்வறிக்கையினை மையமாகக் கொண்டுதான் கொரோனாவினால் உயிரிழந்த உடல்களை எந்த வகையிலான பொறிமுறையில் நல்லடக்கம் செய்யலாம் என்பதற்கான தீர்மானத்தை எடுத்திருந்தார்கள். நாங்கள் அப்பொழுது முன் வைத்த அறிக்கை சர்வதேச மட்டத்திலும் அங்கீகரிகப்பட்ட ஒன்றாக அது பேசப்படுகிறது.

**உங்களுடைய வாட் சப் குழுமம் ஊடக தோற்றம்பெற்ற அமைப்பு எப்போது உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்டது?**

2022 இல் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளோம். இவ்வமைப்பின் தலைவராக முன்னாள் வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன். உப தலைவர்களாக முன்னாள் யட்டி நுவர பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வசீர் முக்தார், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சுற்றுலா முகாமைத்துவத் துறைப் பேராசிரியர் எம். எம். எம். அஸ்லம், வர்த்தகப் பிரமுகர் சயிப்டீன் ஹனிபா (இவர் இவ்வமைப்பின் ஆலோசகருமாவார்) ஆகிய மூவரும் உப தலைவர்களாக அங்கம் வகிக்கின்றனர். இதன் செயலாளர் கொழும்பு சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிலா தாவூத், பொருளாளர் முன்னாள் இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் பொறியியலாளர் எம். எம். எம். முனவ்வரா. துணைச் செயலாளர் பேராதனை பல்கலைக்கழக புவியல்துறைப் பேராசிரியர் பசிஹா அஸ்மி ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 23 பேரைக் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 27 பேரைக் கொண்ட ஆலோசனைக் குழுவினர்களும் உள்ளனர். இந்த நாட்டில் 250 பேரைக் கொண்ட அங்கத்தவர் கொண்ட குழுவினர்களும் உள்ளனர்.

**இவ்வமைப்பின் மூலம் வேறு எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றீர்கள் ?**

2022 களில் இவ்வமைப்பின் ஒரு பிரிவாக பெண்கள் அணியினரும் இயங்கி வருகின்றனர். இதில் பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. வாலிபர்களுக்கு கல்வி, தொழில் வழிகாட்டல், தலைமைத்துவப் பயிற்சிகள் போன்ற பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வருடம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பொதுக் கூட்டத்தை கொழும்பு சாஹிராக் கல்லூரியில் வெகு விமர்சையாக நடத்தினோம்.

எமது அமைப்பின் முக்கியமான நோக்கம், அனைத்து இனங்களுக்கிடையிலும் சமாதானத்தை ஏற்படுத்தவதற்கான தூர நோக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு இந்த நாட்டில் அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என்ற அங்கீகாரத்தைப் பெற்று சகல அடிப்படை உரிமைகளுடனும் தலை நிமிர்ந்து வாழக் கூடிய ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதாகும். எமது மூதாதையர்களால் பெற்றுத் தந்த சில சலுகைகள் உரிமைகள் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த நிலைமையை கவனத்திற் கொண்டு இலங்கை நாட்டின் ஒரு பிரஜைக்குரிய சகல அடிப்படை உரிமைகளுடன் வாழ்வதற்கான பெற்றுக் கொள்வதற்கான பணிகளில் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம்

இக்பால் அலி...






















RPSL CONSORTIUM

Mr Shabry Haleemdeen
President — AttorneyatLaw,
Chairman Advisory Committee on Muslim Law Reforms & Former Chairman of Waqf Board of Sri Lanka
Mr Saifdeen Hanifa
Patron & VicePresident — Gemologist, Director Sara Travels & Tours
Mr Wazeer Mukthar
Vice President — Entrepreneur, Director Lanka Guardian Commodities Ltd.
Former member of Pradeshiya Sabha
Prof. MSM Aslam
Vice President
Professor of Tourism, University of Sabragamuwa
Dr Shamila Dawood
SecretaryGeneral — Senior Lecturer, Faculty of Law, University of Colombo
Eng. (Ms) MMN Munawara
Treasurer — Former Additional General Manager, CEB
Prof Fazeeha Azmi
Deputy SecretaryGeneral — Professor of Geography, University of Peradeniya
Dr Ghefari Dulapandan
Deputy Treasurer — Transformational Coach
Mr MSM Razik — Senior Lecturer in Geography, University of Peradeniya
Mr MAM Hakeem — Senior Lecturer, Faculty of Law, University of Colombo
Mr Fauzer Sharifdeen — Former Director General CAA
Mr Saheed M Rismy — Former National President of All Ceylon YMMA Conference
Dr AWW Wazil — Nephrologist, General Hospital Kandy
Dr SMM Niyas — Surgeon, General Hospital Kandy and former president of Central province Surgeons association.
Mr Trizviiy Marikkar — Principal, Zahira College Colombo
Mr SA Abdul Latheef — Chairman – Uniken Lanka Ltd
Mr Shiraz Latiff — Director – Hummingbird International (PVT) Ltd
Asheik Mafaz Najmuddeen
Islamic scholar
Secretary to the ACJU Udunuwara & an Entrepreneur
Mrs Shanasz Hakeem — Managing Director – Zai Tun Industrial Projects (PVT) Ltd.
Mr Muslim Salahudeen — CEO, Mushan International
Mr M Gazali Saheed — Director Saheeds Electronics and Events
Prof MMM Najim — Professor in Environmental Conservation & Management, Former Vice Chancellor SEUSL
Dr Ali Ahlam — Senior Lecturer and a consultant.
Mr Fouze A Cader — Chairman Victoria Marketing (PVT) Ltd and a business consultant

### Members of the Advisory Panel of RPSL Consortium

*Dr. Faisz Musthapha PC. – Chancellor of South Eastern University of Sri Lanka*
*Justice (Dr) Saleem Marsoof PC. – Rtd. Judge of the Supreme Court*
*Justice M.M. Abdul Gaffoor – Rtd. Judge of the Court of Appeal*
*Hon. M.U.M. Ali Sabry PC. – Minister of Foreign Affairs*
*Hon. Imthiaz Bakeer Marker – Member of Parliament*
*Hon. Rauff Hakeem MP. – Leader of SLMC & Former Minister*
*Mr. Faiszer Musthapha PC. – Former MP & Minister*
*Mr. Javed Yoosuf – AttorneyatLaw, Former Ambassador,*
*Mr. M.R Lathif – Rtd. Senior DIG & Commandant STF*
*Mr. Nakeeb Moulana – Secretary to the Former Governor of Western Province*
*Mr Muslim Salahudeen – CEO, Mushan International*
*Mrs. Ferial Ashraff – Former MP, Minister and Ambassador*
*Pro. M. Siddique – Former Professor of the University of Peradeniya*
*Deshabandhu Ifthikar Aziz – Chairman of International Business Consultant*
*AshSheikh Agar Mohamed – Rector, Naleemiah Institute*
*Ash Sheikh SHM Faleel – Head, Academic Program, Naleemiah Institute*
*Mr. Saheed Sangany – AttorneyatLaw*
*Mr. Rizvan Sahabdeen – CEO of Shifani Gem and Jewellery*
*Mr. Ilahi Abdeen – Deputy Mayor Kandy*
*Mr. Ifthikar Zaveer – Rtd. Major General*
*Mr. Ilyas Admani PC.*
*Mr. ASM Ghazali – President, YMMA Kandy*
*Dr. Naufhal Samad – Former Senior Lecturer of University of Peradeniya*
*Mr. Afzal Marikkar – Former Consul General of Sri Lanka for Pakistan*
*Mr. Omar Kamil – Former Mayor & Ambassador to Iran*
*Mr. M.N. Ameen – President, Muslim Council of Sri Lanka*
*AshSheikh Arkam Nooramith – Secretary to the ACJU*
*AshSheikh Muizz Buhary – CEO of Sakeenah Institute, Colombo*





யாழ்ப்பாணம், இருபாலை தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து மகோற்சவத் திருவிழா நடைபெற்று, எதிர்வரும் 13ஆம் திகதி இரதோற்சவமும் 14ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (படங்கள்: யாழ். விசேட நிருபர்)

# வடக்கின் உதயம்

## கிளிநொச்சியில் சட்டவிரோதமான மணல் அகழ்வை தடுக்க நடவடிக்கை

### ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்

**பரந்தன் குறூப் நிருபர்**



கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கும் நடவடிக்கையாக, வடக்கு மாகாணத்துக்கு வெளியிலிருந்து கொண்டு வரப்படும் மணலை கிளிநொச்சி மாவட்டத்தினுள் கொண்டு செல்ல தடை செய்யப்படுவதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை (01) நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். வெளிமாகாணங்களின் அனுமதிப்பத்திரங்களை பயன்படுத்தி, கிளிநொச்சி மாவட்டத்தில் அகழப்படும் சட்டவிரோத மணல், பிரதான வீதியால் கொண்டு செல்லப்படுவதால், அவற்றை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து துறைசார் அமைச்சர், துறைசார் திணைக்களத் தலைவருடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளிமாகாணங்களிலிருந்து கிளிநொச்சிக்கு மணல் கொண்டு வருவதை தடை செய்வதாக அறிவித்துள்ளார்.

5 வருடகாலமாக திறக்கப்படாதுள்ள

## வவுனியா பொருளாதார மத்திய நிலைய மின் கட்டணம் ரூ.4 இலட்சத்தை கடந்தது

**வவுனியா விசேட நிருபர்**



திறக்கப்படாமலுள்ள வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தினுடைய மின்சாரக் கட்டண நிலுவை ரூ.4 இலட்சத்தை தாண்டியுள்ளதால், அந்நிலையத்தின் மின்னிணைப்பை இலங்கை மின்சார சபையினர் துண்டித்துள்ளனர். வவுனியா, மூன்றுமுறிப்பில் ரூ.291 மில்லியன் செலவில் 55 கடைத்தொகுதிகளுடன் இப்பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்ட போதும், 5 வருடங்களாக திறக்கப்படாமலுள்ளது.

இப்பொருளாதார மத்திய நிலையத்தை துரிதமாக திறப்பதற்காக இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்டோர் நேற்று முன்தினம் (31) சென்று பார்வையிட்டனர்.

இதன்போது, தனித்தனி கடைகளுக்கான மின் கட்டணமே ரூ.4 இலட்சத்தை தாண்டியுள்ளதாக, அங்கிருந்த இலங்கை மின்சார சபையின் மின்பட்டியல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இப்பொருளாதார மத்திய நிலையம் திறக்கப்படாத போதும், கோவிட் 19 காலத்தில் கோவிட் தொற்றாளர்களின் பராமரிப்பு நிலையமாக சில மாதங்கள் இயங்கியது.

ஆகையினால், இப்பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பதற்கு முன், மின் கட்டண நிலுவையைச் செலுத்தி, மீளிணைப்பை பெற்றுக்கொள்ளவுள்ளதாக, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.



யாழ். அல்லைப்பிட்டி பிரதேசத்தில் VR இன்டர்நெஷனல் பிறைவேட் லிமிடெட் எனும் தனியார் தொழில் முதலீட்டாளரினால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்தை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் புதன்கிழமை (31) திறந்து வைத்தபோது...

## அதிக உஷ்ணமான காலநிலை; நெல்லியடியில் மோர் விற்பனை

**கரவெட்டி தினகரன்நிருபர்**

தற்போதைய வெப்பமான காலநிலையை கவனத்திற்கொண்டு கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மோர் விற்பனையை ஆரம்பித்துள்ளது.

யாழ். நெல்லியடி – பருத்தித்துறை வீதியில், மாலி சந்தி வைரவர் கோயிலுக்கு அருகில் தினமும் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை மோர் விற்பனை செய்யப்படுவதுடன், ஒரு பெரிய பிளாஸ்டிக் கப் மோர் 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக, அச்சங்கம் தெரிவித்தது.

கால்நடை வளர்ப்போரிடமிருந்து பசுப்பாலை கொள்வனவு செய்து, தினமும் மோரை சுத்தமாக தயாரித்து கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் விற்பனை செய்கின்றனர்.

## ஊடகவியலாளர் நடேசனின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

**யாழ். விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்**



ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 19ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு, வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் நேற்று முன்தினம் புதன்கிழமை (31) நடைபெற்றது.

யாழ்ப்பாணம், வவுனியா ஊடக அமையங்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றதுடன், இவரது உருவப்படத்துக்கு மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## யாழ். பொதுநூலகம் எரிப்பு; 42ஆம் வருட நினைவுகூரல்

**யாழ். விசேட நிருபர்**




யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டமையின் 42ஆவது ஆண்டு நினைகூரல் நிகழ்வு, அந்நூலகத்தில் நேற்று வியாழக்கிழமை (01) நடைபெற்றது.

யாழ். பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்த நூலகத்தை உருவாக்க காரண கர்த்தாவாக விளங்கிய செல்லப்பாவுக்கும் நூலகம் எரிக்கப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நூலகம் எரிக்கப்பட்ட வேளையில் சுமார் 97,000 அரிய நூல்களும் பழைமையான ஏடுகளும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். கச்சாயில் சடலம் மீட்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். தென்மராட்சி சங்குப்பிட்டி பாலத்துக்கும் கச்சாய் பிரதேசத்துக்கும் இடைப்பட்ட கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கிய போது, அச்சடலத்தை பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை (31) பிற்பகல் மீட்டுள்ளனர்.

கடலில் இந்த சடலம் மிதந்து வந்து கரையொதுங்கியதை அவதானித்த கடற்றொழிலாளர்கள், இது தொடர்பாக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று சடலத்தை மீட்டுள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மன்னார் முச்சக்கரவண்டி சங்க தலைவர் மீது தாக்குதல்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்ட முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் தலைவர் மீது குழுவொன்றினால் கடந்த செவ்வாய்க்கிழமை (30) தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் பேருந்து தரிப்பிடத்துக்கு முன்பாகவுள்ள முச்சக்கர வண்டிகள் தரிப்பிடத்தில் வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த 44 வயதுடைய அவர், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் படுகாயமடைந்த அவர் தெரிவித்த போது, மன்னார் பேருந்து தரிப்பிடத்துக்கு முன்பாகவுள்ள முச்சக்கர வண்டிகள் தரிப்பிடத்தில் சிலர் முரண்பட்டுக் கொண்டிருந்தனர். மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டிகள் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் முரண்பாடு தொடர்பாக மன்னார் பொலிஸாருக்கு தெரியப்படுத்தும் வகையில் நான் தொலைபேசியூடாக தொடர்பை ஏற்படுத்தினேன். இதன்போது, முச்சக்கரவண்டியில் வைத்து என் மீது தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவித்தார்.

## மத்திய கிழக்கிலுள்ள பணிப்பெண்களுக்கு ஆதரவாக வடக்கில் ஆர்ப்பாட்டங்கள்

**ஓமந்தை விசேட, பரந்தன் குறூப், மன்னார் குறூப், சாவகச்சேரி நிருபர்கள்**




வேலைவாய்ப்புத் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று பல்வேறு காரணங்களினால் இலங்கைக்கு திரும்ப முடியாமலுள்ள பணிப்பெண்களை உடனடியாக நாட்டுக்கு திருப்பியழைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நேற்று வியாழக்கிழமை (01) காலை முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா, வேப்பங்குளத்திலும் கிளிநொச்சி புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும், மன்னார் பஜாரிலும் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், அரசாங்கத்துக்கு மகஜர் கையளிக்கவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். 'மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்' உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

புங்குடுதீவில்

## கசிப்பு அருந்தியவர் இரத்த வாந்தி எடுத்து மரணம்

**யாழ். விசேட நிருபர்**

யாழ். புங்குடுதீவு பிரதேசத்தில் கசிப்பு அருந்திய இளைஞர் ஒருவர் இரத்த வாந்தி எடுத்து உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நிறை போதையில் காணப்பட்ட இந்த இளைஞர் திடீரென இரத்த வாந்தி எடுத்த போது, இவரை உறவினர்கள் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும், இவர் சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை (30) உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கசிப்பு அருந்திய நிலையில் நிறை போதையில் இரத்த வாந்தி எடுத்ததாக மருத்துவ பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## அச்சுவேலியில் இளைஞர் ஒருவர் 4 வாள்களுடன் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், அச்சுவேலி மேற்கு பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து 4 வாள்களை நேற்று முன்தினம் புதன்கிழமை (31) பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் இளைஞரொருவரையும் கைது செய்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அச்சுவேலி மேற்கிலுள்ள இந்த வீட்டை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, 4 வாள்களுடன் இந்த இளைஞரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞருடன், மீட்கப்பட்ட வாள்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## மாணவிகளுடன் சேட்டை புரிந்த இளைஞர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ். நெல்லியடியில் க.பொ.த. (சா/த) பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிய மாணவிகளுக்கு சேட்டை விட்ட இரு இளைஞர்களிடமிருந்து அம்மாணவிகளை காப்பாற்ற முயன்ற மாணவன் மீது தலைக்கவசத்தால் தாக்கியமை தொடர்பாக மோட்டார் சைக்கிளுடன் சந்தேகநபரொருவரை நேற்று முன்தினம் (31) பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், இச்சம்பவத்துடன் தொடர்புடைய மற்றையவரை தேடி வருவதாக, பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு பாதிக்கப்பட்ட மாணவர்கள் தகவல் வழங்கியதையடுத்து, விசாரணை செய்த பொலிஸார், மேற்படி இளைஞரை கைது செய்துள்ளனர்.

# மலைச்சாரல்



## யடவத்த பிரதேசத்தில் குரங்குகள் தொல்லை

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் யடவத்த பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் தினமும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருவதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யடவத்த, நிகொள்ள, பதிங்கஸ், கொட்டுவ, செலகம , மஹவெல, பூமியாவ, கலகம, முறுத்தாவத உள்ளிட்ட பல கிராமங்களில் அண்மைக்காலமாக குரங்குத் தொல்லை அதிகரித்து வருவதாக இப்பகுதி மக்களும் விவசாயிகளும் தெரிவிக்கின்றனர்.



இரவில் அருகிலுள்ள காடுகளில் தங்கி நிற்கும் குரங்குகள் பகல் வேளைகளில் கிராமங்களுக்குள் புகுந்து நாசகார வேலைகளில் ஈடுபடுவதாக தெரிவிக்கின்றனர்.

வீட்டுக்கூரைகளை உடைத்தல், வீட்டுத்தோட்டத்தில் உள்ள பழ மரங்கள், வாழை, மா, கோப்பி, தென்னை போன்ற பயன்தரும் மரங்களுக்கு சேதம் ஏற்படுத்துதல், விவசாய பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் சவாலாக குரங்குகள் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இதனை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## களுகங்கையில் அமைக்கப்படும் இலங்கையின் முதல் நதி தோரணம்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

பொசன் போயா தினத்தை முன்னிட்டு இலங்கையில் முதல் தடவையாக நதியில் தோரணமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இரத்தினபுரி மூவகம களுகங்கையின் இடையே முதல் தடவையாக இவ்வாறு பாரிய தோரணமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இரத்தினபுரி மூவகம சிறி விசுந்தாராம அறநெறி பாடசாலை மற்றும் இரத்தினபுரி இளைஞர் அமைப்பு என்பன இணைந்து மேற்படி தோரணத்தை அமைத்து வருகின்றனர். தோரணம் 25 அடி அகலமும் 30 அடி உயரமும் கொண்ட மிகவும் பாரிய தோரணமாக அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தோரணத்தை எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை பார்வையிட முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இலங்கைக்கான இந்தோனேஷியா உயர்ஸ்தானிகர்- மத்திய மாகாண ஆளுநர் இடையில் சந்திப்பு

**தம்புள்ளை தினகரன், அக்குறணை குறூப் நிருபர்கள்**

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவுக்கும் இலங்கைக்கான இந்தோனேஷியா உயர்ஸ்தானிகர் தேவி குஷ்டினா டொபிங் ( Devi Gustina Tobing) ஆகியோருக்கிடையில் நேற்றுமுன்தினம் (31) கண்டியில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இருநாடுகளுக்கிடையில் நீண்டகாலமாக நிலவும் நட்புரீதியிலான உறவு, பொருளாதார, சமூக, கலாசார தொடர்புகள் பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டன.

49 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மனதை உருக்கும் கவலைக்குரிய மஸ்கெலிய ஏழு கன்னிமலை விமான விபத்து தொடர்பாக நினைவூட்டிய ஆளுநர், 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி இடம்பெற்ற அக்கோர விமான விபத்தில் முஸ்லிம் யாத்திரிகர்கள் 182 உள்ளிட்ட 191 பேர் உயிரிழந்தமையையும் நினைவுப்படுத்தினார்.



மேலும் 2024 ஆம் ஆண்டு இவ்விபத்து ஏற்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்தோனேஷியா பிரஜைகள் அதிகளவானோர் அவ்விடத்திற்கு வருகை தரவுள்ளதாகவும், அது தொடர்பாக வசதிகளை வழங்குவது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## மத்திய மாகாணத்தில் கால்நடை உற்பத்தித் துறையில் பாரிய நெருக்கடி

**எம்.ஏ.அமீனுல்லா**

மத்திய மாகாண கால்நடை வைத்திய திணைக்கள வைத்தியர்களில் பெரும்பாலானோர் வெளிநாடு செல்லவிருப்பதால் கால்நடை உற்பத்தித்துறை பாரிய நெருக்கடியை சந்திக்கவுள்ளதாக கால்நடை மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், மத்திய மாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் ஒன்றியத்தின் செயலாளருமான கலாநிதி சமித் பிரசாந்த குமார தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மத்திய மாகாண கால்நடை வைத்திய திணைக்களத்தில் பணிபுரிந்த கால்நடை வைத்தியர்களில் கணிசமானவர்கள் வெளிநாடு செல்லத் திட்டமிட்டுள்ளனர். எனவே கால்நடை உற்பத்தித்துறை இதனால் பாரிய நெருக்கடியை சந்திக்க வேண்டியுள்ளது.




இந்த நாட்டில் திரவ பால் உற்பத்தியில் சுமார் 40% சதவீத பங்களிப்பு மத்திய மாகாணத்திலிருந்து கிடைக்கின்றது. தற்போது நாளாந்தம் 2 1/2 இலட்சம் லீற்றர் பால் உற்பத்தி படிப்படியாக குறைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் திஸ்பன், பொகவந்தலாவ, மஸ்கெலியா மற்றும் மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை, உக்குவெல, வில்கமுவ ஆகிய கால்நடை பிரிவுகள் கால்நடை வைத்தியர்கள் இன்றி வெற்றிடமாக காணப்படுகின்றது.

இதனால் இப்பிரதேசங்களிலுள்ள பால் பண்ணையாளர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மத்திய மாகாணத்தில் களப்பணிக்காக 96 கால்நடை வைத்தியர்கள் இருக்க வேண்டும், தற்போது 56 பேர் மாத்திரமே உள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

**லுணுகல நிருபர்**

லுணுகலை ஸ்ரீ இராமகிருஷ்ணா தமிழ் கல்லூரியின் வருடாந்த பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை 03 ஆம் திகதி கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் T. சுந்தரமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

புதிதாக அதிபர் பதவியேற்றதை தொடர்ந்து நடைபெறுகின்ற முதலாவது பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் இதுவாகும். கல்லூரியின் எதிர்கால கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக பழைய மாணவர்களின் பங்களிப்பு பற்றிய முக்கிய கலந்துரையாடலொன்றும் நடைபெறவுள்ளது.

இதன்போது பழைய மாணவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ். சந்திரமோகன் அன்புடன் அழைப்புவிடுக்கின்றார்.

## நுவரெலியாவில் நான்கு மாடிகளுக்கு மேல் அமைக்கப்பட்ட 25 கட்டடங்கள்

### அதில் 22 ஹோட்டல்கள்

நுவரெலியா நகரில் நான்கு மாடிகளுக்கு மேல் அமைக்கப்பட்ட 25 கட்டடங்கள் உள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளிலிருந்து தெரியவந்துள்ளது. அதுவும் இதில் 22 கட்டடங்கள் சுற்றுலா விடுதிகள் என தெரியவந்துள்ளது. அண்மையில் நுவரெலியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நுவரெலியாவில் பல மாடி கட்டடங்களால் நகரின் அழகுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் அதுதொடர்பில் ஆராயுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

அதன்படி, தற்போது நுவரெலியா நகரில் நான்கு மாடிகளுக்கு மேல் கட்டப்பட்ட கட்டடங்கள் தொடர்பில் அதிகாரிகள் விசேட கவனம் செலுத்தினர். இக்கட்டடங்களின் மேல் தளங்களை அகற்றுவது அல்லது சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு மாற்றுவது குறித்து ஆராய குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபை, நுவரெலியா மாநகர சபை, நுவரெலியா மாவட்ட செயலகம் உள்ளிட்ட பல நிறுவனங்களின் அதிகாரிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர்.



நுவரெலியா மாநகர சபையினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை, மாவட்ட செயலக காரியாலயம் மற்றும் பொலிஸ் நிலையம் போன்றவற்றின் கட்டடங்கள் நான்கு மாடிகளுக்கு மேல் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி நுவரெலியாவில் புதிதாக திறக்கப்பட்ட சுற்றுலா விடுதிக்கு சொந்தமான இரண்டு கட்டடங்களும் இதில் அடங்குமென கூறப்படுகின்றது.

## ராஜகுமாரிக்கு நீதி கோரி கந்தப்பளையில் ஆர்ப்பாட்டம்



தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளரும், கோடீஸ்வர தொழிலதிபருமான சுதர்மா நெத்திகுமாரவின் வீட்டில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய நிலையில் பொலிஸ் காவலில் வைத்து மர்மமான முறையில் உயிரிழந்த பதுளையைச் சேர்ந்த ராஜகுமாரிக்கு நீதி கோரி நேற்று கந்தபளை நகரில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

ராஜகுமாரியின் மரணத்திற்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு பக்கச்சார்பின்றி கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டுமென இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இப்போராட்டத்தில் கந்தப்பளை மற்றும் இராகலை பகுதி தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

'இவரின் மரணம் மர்மமானது', 'நியாயமற்றது', 'இளம் தாயின் நியாயமற்ற மரணத்திற்கு நீதி வேண்டும்' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆ.ரமேஷ்



மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் அ. லோரன்ஸின் பூதவுடலுக்கு இலங்கை தொழிலாளர் காங்ரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று முன்தினம் புதன்கிழமை (31) அஞ்சலி செலுத்திய போது எடுக்கப்பட்ட படம்.

## நடமாடும் சேவை

கொட்டகலை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை மின்சார சபையின் ஹற்றன் கிளை காரியாலயத்தின் ஊடாக கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் நடமாடும் சேவையொன்று இன்று (02) இடம்பெறவுள்ளது.

நடமாடும் சேவையூடாக புதிதாக மின்சார இணைப்பை மேற்கொள்ள இருப்பவர்கள், மின்சார பட்டியல் தொடர்பான விபரங்கள், மின்சார பட்டியலின் பெயர்மாற்றம், பாதிக்கப்பட்ட தூண்களை மாற்றுதல் உட்பட மின்சார சபையூடாக முன்னெடுக்கப்படும் சகல வேலைகளும் செய்து தரவுள்ளதாகவும் பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கொட்டகலை வர்த்தக சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

## இராகலையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரித்தானியா உதவிக்கரம்



நுவரெலியாவில் இயங்கும் செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக பிரித்தானிய நிதியுதவியின் கீழ் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இராகலை சென் லெணாட்ஸ் தோட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுள்ளன. நுவரெலியா செஞ்சிலுவை சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் இராகலை செஞ்சிலுவை பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு நேற்று முன்தினம் இராகலை.சென் லெணாட்ஸ் தோட்டத்தில் இடம்பெற்றது.

இதில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் கலந்துக் கொண்டு பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சென் லெணாட்ஸ் தோட்ட மக்களுக்கு உதவித் தொகையை வழங்கி வைத்தார்.



அத்துடன் உதவிகளைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளை சந்தித்து கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளையும் அவர் நேரில் கேட்டறிந்தார். மேலும் பிரித்தானிய நிதியுதவியின் கீழ் செஞ்சிலுவை சங்கத்தினூடாக இராகலை சென் லெணாட்ஸ் தோட்டம் மற்றும் மஹா ஊவா தமிழ் வித்தியாலயங்களில் மேற்கொண்டு வரும் சுகாதாரம், மற்றும் உணவு வழங்கும் வேலைத்திட்டங்கள் குறித்தும் மாணவர்களுடன் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஷ்




இலங்கை, பாகிஸ்தான் நாடுளுக்கிடையிலான நல்லுறவை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கையிலுள்ள மாணவர்களுக்கு பாகிஸ்தான் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலுவதற்கான முன்னோடிப் பரீட்சை பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி தொலைக் கல்வி நிலையத்தில் நடைபெற்ற போது. நிகழ்வில் பாகிஸ்தான் நாட்டு பல்கலைக்கழகங்களின் ஆணையாளர் ஜஹன்கீர்கானும் கலந்து கொண்டார். (படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்)

# புதிய ஆளுநர் பங்கேற்பில் மட்டு. மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம்



*கல்லடி குறூபர் நிருபர்*

மட்டக்களப்பு மாவட்டத்தின் இவ்வாண்டின் மே மாதத்திற்கான அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று (01) மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா ஏற்பாட்டில் கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமான செந்தில் தொண்டமானின் பங்கேற்புடன் நடைபெற்ற

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்,

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன் மற்றும் இரா.சாணக்கியன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

குறிப்பாக இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும்அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ளதிட்டங்களுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் இம்மாவட்டத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுநர் உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை பணித்துள்ளார்.

இதன்போது விசேடமாக தேசிய ரீதியில் கிழக்கு மாகாணம் டெங்கு தொடர்பில் முதலிடம் வகித்து வருவதனையிட்டு அதனை கட்டுப்படுத்துவதற்கான குழுவொன்றினை ஆளுநர் நியமித்ததுடன், மிக விரைவாக மாகாணத்தில் இருந்து டெங்கை இல்லாதொழிக்க அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டுமென அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

# அழகுபடுத்தப்படும் குல்மார்க், டாங்மார்க் காஷ்மீருக்கான பயணிகள் வருகை எதிர்பார்ப்பு

உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான காஷ்மீரை மேலும் அழகுபடுத்தி மக்களுக்கான பொது வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தை உள்ளூர் நகர அமைப்புகளுடன் இணைந்து காஷ்மீர் பிரதேச ஆணையாளர் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில் சுற்றுலாவுக்கு பெயர் பெற்ற டாங்மார்க் மற்றும் குல்மார்க் ஆகிய பகுதிகளில் கட்டடங்கள் வர்ணம் பூசப்பட்டு, சாலையோர தடுப்பு வேலிகள் சரிசெய்யப்பட்டு ஓய்வாக அமர்ந்திருப்பதற்கான பாதையோர இருக்கைகளும் அமைக்கப்படுவதாக திட்ட கண்காணிப்பு அலுவலர்கள் கூறியுள்ளனர்.

இதன் பொருட்டு 1.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கூறியுள்ளனர்.

இந்த அழகுபடுத்தலின் போது அந்தந்த பகுதிகளில் என்னென்ன வர்த்தக பொருட்கள் முக்கியத்துவம் கொண்டவையோ அவற்றை விளம்பரப்படுத்தும் பதாகைகளும் காட்சிக்கு வைக்கப்படும் என உள்ளூர் நகர அமைப்புகளுக்கான பணிப்பாளர் மதுரா மசூம் கூறியுள்ளார்.

ஜி20 சுற்றுலா மாநாடு காஷ்மீரில் நடத்தப்பட்ட பின்னர் இந்தியாவில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் காஷ்மீரின் வனப்பும், பாதுகாப்பான இடம் என்ற அபிப்பிராயமும், நம்பிக்கையும் ஏற்பட்டிருப்பதால் அடுத்து வரும் பருவ காலங்களில் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் பெருமளவில் காஷ்மீருக்கு வருகை தருவார்கள் என்று இப்பிராந்திய சுற்றுலாத்துறை அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

# பேராதனைப் பல்கலை தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக பாரிய பங்காற்றி வருகிறது

## துணைவேந்தர் எம்.டி.லமாவன்ச

*மாவத்தகம தினகரன் நிருபர்*

தமிழ் மொழி பாரம்பரிய கலாசார அம்சங்களைக் கொண்ட மொழி. பேராதனைப் பல்கலைக்கழகம் ஆரம்ப காலம் முதல் இற்றைவரையிலும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக பாரிய பங்களிப்பை ஆற்றி வருகிறது.இலங்கையில் ஏனைய பல்கலைக்ககழங்களிலும் தமிழ் மொழித் துறை உள்ளது. எனினும் அதில் மூத்த துறையாக பேராதனைப் பல்கலைக் கழகம் விளங்குகின்றது என்று பேராதனை பல்கலைக்கழக துணைவேந்தர் எம். டி. லமாவன்ச தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக தமிழ் மொழிப் பிரிவின் ஏற்பாட்டில் ஏழாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியில் முதலுதவி முகாம்

மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியின் கனிஷ்ட பிரிவு கேட்போர் கூடத்தில் சென் ஜோன்ஸ் முதலுதவி முகாம் இரு நாட்கள்(03,04) நடைபெறவுள்ளது. மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி பழைய மாணவியர் சங்கத்தினரும் ,மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவியர் சங்கத்தினரும் இணைந்து இந் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். கேகாலை முதலுதவி பயிற்சி பாசறையின் பயிற்றுவிப்பாளர்கள் பயிற்றுவிக்கும் இப் பயிற்சி பட்டறையில் இக்கல்லூரிகளில் கல்வி கற்றவர்களும் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# விவசாயிகளின் பொருளாதாரம் வலுப்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்



இலங்கை நாடு சர்வதேசத்தில் விவசாய நாடாகவே அறியப்பட்டுள்ளது. விவசாயம் எமது உயிர்நாடி,ஆதலால் வீழ்ச்சியடைந்துள்ள விவசாயத்தை மீள உயிர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ருஷான் மலிந்த தெரிவித்துள்ளார்.

தெய்யத்தகண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர் எரிபொருளின் விலை ஏற்றத்ததால் விதைப்புக்கும் அறுவடைக்கும் அதிக பணத்தை வழங்கி விட்டு விவசாயிகள் நடுத்தெருவில் நிற்கின்றனர். தமது தங்க நகைகளை அடகு வைத்து விவசாயம் செய்யும் விவசாயிகள் அந்த தங்க நகைகளை மீட்க முடியாமல் திண்டாடுகின்றனர். அத்தோடு உரம் களைநாசிகளின் விலை ஏற்றமும் அவர்களை இன்னும் பாதிப்படைய வைத்துள்ளது. இது மிகவும் வேதனையான நிலை.ஜப்பானில் வசித்த ஒருவர் என்ற முறையில், விவசாய உபகரணங்கள், விவசாய வாகனங்கள் அடங்கிய கொள்கலன்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதாக அறிகிறேன். வியட்நாம், கம்போடியா போன்ற நாடுகளில் ஜப்பானின் விவசாய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. டிராக்டர் மற்றும் விவசாய உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்.

நம் நாட்டில் விவசாயத்தை மேம்படுத்த விவசாய உபகரணங்களுக்கான இறக்குமதி வரியை குறைத்தால், அதன் பலன் நாட்டுக்கும் அரிசி வழங்கும் விவசாயிக்கும், நுகர்வோருக்கும் போய் சேரும்.விவசாயத்தை மேம்படுத்த எடுக்க வேண்டிய செயற்பாடுகள் நாட்டை அபிவிருத்தியின் பால் இட்டு செல்லும் என்பது எனது நம்பிக்கையாகும்.


இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனு கோரல்**

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 1 | வெந்நெகிழிப் பொருட்களை வழங்குதல் மற்றும் இடுதல் - (தெர்மோ பிளாஸ்டிக் பொருட்கள்) வடமேல் மாகாணம் பொறியியலாளர் பிரிவு - குருநாகல்) |
| 2 | வெந்நெகிழிப் பொருட்களை வழங்குதல் மற்றும் இடுதல் - (தெர்மோ பிளாஸ்டிக் பொருட்கள்) வடமேல் மாகாணம் பொறியியலாளர் பிரிவு - குளியாப்பிட்டி) |
| 3 | வெந்நெகிழிப் பொருட்களை வழங்குதல் மற்றும் இடுதல் - (தெர்மோ பிளாஸ்டிக் பொருட்கள்) வடமேல் மாகாணம் பொறியியலாளர் பிரிவு - மஹவ) |
| 4 | வெந்நெகிழிப் பொருட்களை வழங்குதல் மற்றும் இடுதல் - (தெர்மோ பிளாஸ்டிக் பொருட்கள்) வடமேல் மாகாணம் பொறியியலாளர் பிரிவு - சிலாபம்) |
| 5 | வெந்நெகிழிப் பொருட்களை வழங்குதல் மற்றும் இடுதல் - (தெர்மோ பிளாஸ்டிக் பொருட்கள்) வடமேல் மாகாணம் பொறியியலாளர் பிரிவு - புத்தளம்) |

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதேச கொள்முதல் செயற்குழு வின் (வடமேல் மாகாணம்) தவிசாளரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக தேசிய விலைமனுக் கோரல் செயல்முறைக்கு அமைவாக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பில் விருப்புள்ள மனுதாரர்கள் www.rda.gov.lk என்ற இணையதளத்தின் ஊடாக 2023.06.02 திகதி முதல் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வடமேல் மாகாண கொள்முதல் செயற்குழு, மாகாணப் பணிப்பாளர் காரியாலயம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**குருநாகல்**

**பகிரங்க ஏலவிற்பனை**

ஓரியண்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2023/05/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2023/06/22 மற்றும் 2023/06/23 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகார சபை

**விலைமனுக்கோரல்**

| தொடர் இலக்கம் | விலைமனு இலக்கம் | விபரம் | விலைமனுப் பிணையம் ரூபா |
|---|---|---|---|
| 01 | CE/RDA/KG/SS/TB/2023/03 | கேகாலை/ ருவன்வெல்ல பிரிவின் வேலை அலகுகளின் வீதிப் பராமரிப்புகளிற்காக டிப்பர் வாகனங்கள் (கியூப் 01) மற்றும் இயந்திராதிகள் (பெகோலோடர் மற்றும் ஸ்கவேட்டர்) வழங்கல் | 10,000.00 |
| 02 | CE/RDA/KG/SS/TB/2023/04 | | |
| 03 | CE/RDA/KG/SS/TB/2023/05 | | |

மேற்படி டிப்பர்கள் மற்றும் இயந்திராதிகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் விலைமனுக் கோரப்படும். இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2023 ஜூன் 02 முதல் 2023 ஜூன் 20 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk என்ற இணையத்திற்குப் பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளர் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**கேகாலை.**

SLITA

இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம்

கைத்தொழில் அமைச்சு

**வெற்றிடங்கள்**

புடவைகள் மற்றும் ஆடைகள் கைத்தொழிலுக்கு பயிற்சி, பரிசீலனை, தொழில்நுட்ப சேவைகள் மற்றும் தொழில்நுட்பச் செயற்றிட்டம் மற்றும் ஆலோசனைகளை வழங்கும் ஓர் அரச நியதிகள் நிறுவனமான இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்தில் தற்போது கீழ்க்காணும் வெற்றிடங்கள் - காணப்படுகின்றன.

**கணக்காளர் - தரம் II**

**தகைமையும் அனுபவமும்**

ப.மா, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் அல்லது வர்த்தக பட்டம்

***அல்லது***

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் இடைநிலை தகைமை (ICASL)

***அல்லது***

முகாமைத்துவ கணக்காளர் பட்டய நிறுவனத்தில் இடை நிலை தகைமை (CIMA)

***அல்லது***

சான்றிதழ் பெற்ற மற்றும் கூட்டுறவு கணக்கு (ACCA) சங்கத்தில் இடைநிலைத் தகைமை

***மற்றும்***

ஓர் அரச துறைகள்/ கூட்டுத்தாபனம்/ நியதிகள் சபை/ நிறுவனங்கள் அல்லது ஓர் நம்பகமான தனியார் நிறுவனத்தில் கணக்கியல் மற்றும் நிதியியலில் குறைந்த பட்சம் ஒரு (01) வருட முன் தகைமை அனுபவம்

**வயது : 22** வயதிற்கு குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு :-**

கணக்காளர் தரம் II இற்கு பொருத்தமான அனுமதிக்கப்பட்ட சம்பள அளவானது - ரூ. 53,175/- 10x1375-15x1910-95,575/- (சம்பள குறியீடு - MM 1-1-2016) இன் பிரகாரம் அத் திகதிகளில் இருந்து உங்கள் சம்பளம் மாதாந்தம் 53,175/- அதற்கு மேலதிக வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசு அனுமதித்த கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

நீங்கள் ஒரு அரச/ அரச சார்பு ஊழியராயின் உங்கள் நிறுவனத்தின் தலைமையூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி விடயத்தில் உங்களுக்கு ஆர்வம் இருப்பின், 2023.06.13ம் திகதி அல்லது அதற்கு முன்பு அடையுமாறு பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிட்டு, இரண்டு உறவினரல்லாத பரிந்துறைப்பவர்களின் தொடர்பு, விபரங்களுடன் விபரமான சுயதரவுகளுடனான உங்கள் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வையுங்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடுங்கள் (குறுகிய பட்டியல்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மற்றும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். அத்துடன் ஆளுநர்கள் சபையின் தீர்மானம் இறுதித் திர்மானமாக இருக்கும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம்**
**இல. 02, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை.**
**தொ.பே. :- 011-2632406 பெக்ஸ் :- 011-2636337 இணையம் :- www.slita.ac.lk**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

கைத்தொழில் அமைச்சு

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

இரத்தினபுரி தெமுவாவன ''இரத்தினக்கல் கோபுரத்தில்'' அமைந்துள்ள 27 கடை அறைகளை 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குதல்

**விலைக்கோரல் இல. NGJA/18/63/2023/01**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக இரத்தினபுரி - தெமுவாவன சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரண விற்பனை நிலையத்திலுள்ள (இரத்தினக்கல் கோபுரம்) 27 கடை அறைகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2023-05-12ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கேள்வி தொடர்பில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

| பெறுகை விபரங்கள் | விலை மற்றும் திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | ரூபா 10,000.00 + 2.5% SSCL + 15% VAT |
| விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் / நேரம் | 2023-06-02ஆம் திகதியிலிருந்து 2023-07-18ஆம் திகதி (பி.ப. 2.00) |
| விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் | 2023-07-18 பி.ப. 2.05 மணி |
| விலைமனுக்கள் செல்லுபடியாகும் காலம் | 2023-10-17ஆம் திகதி வரை |
| விலைமனுப் பிணை முறி செல்லுபடியாகும் காலம் | 2023-11-15ஆம் திகதி வரை |

மேலதிக விபரங்களுக்கு: உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) - 071-5362536/ 011-2332197

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03.**
**தொலைபேசி 0112-329295, 2325364, 2390645-8 தொலைநகல் 0112320758, 011-2332197**
**இணையதளம் : www.ngja.gov.lk**


**1964ஆம் ஆண்டின் காணி எடுத்தல் (திருத்தல்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்**

**எனது இல. அம்பகோ/3/7/அ/143**
**காணி அமைச்சின்**
**குறிப்பு இல. 4-3/5/2019/CEB/94**

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக் கொள்வதற்கு எண்ணியிருக்கிறது மேலதிக விபரங்களுக்கு இல. 2320/86 2023.02.25ஆம் திகதி இல. 2329/49 2023.04.28ஆம் திகதி வெளியான இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் III பகுதியினை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : நுவரெலியா |
| பிரதேச செயலகம் | : அம்பகமுவ கோரளை |
| கிராமம் | : மொரஹேனகம |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 316F தாகம்பிடிய |
| காணியின் பெயர் | : ஹபுஹாமுல தோட்டம், பல்லேவத்த மற்றும் நீலவத்த |
| வரைபட இலக்கமும் துண்டு இலக்கமும் | : கடஸ்டர் வரைபட இலக்கம் 330216 துண்டிலக்கம் 1 |
| பரப்பளவு | : 0.6069 ஹெக்டெயார் |

**சித்தாரா ருவினி கமகே**
**பிரதேச செயலாளர்,**
**அம்பகமுவ கோரளை.**

25.05.2023 திகதி

**பிரதேச செயலகம்,**
**அம்பகமுவ கோரளை.**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

# கேள்வி அழைப்பு

| உருப்படி இலக்கம் | ஒப்பந்தம் | அளவு |
|---|---|---|
| 01 | புல்வெட்டும் இயந்திரம் - முதுகில் சுமக்கக் கூடியது (Back Pack) மற்றும் கைத்தாங்கலானது (Hand Held) | 90 |

மேற்படி வேலைக்காக தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2023 மே 25 முதல் 2023 ஜூன் 14 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இணையதளம் www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு வேண்டப்படுகின்றது.

**மாகாணப் பணிப்பாளர் - மேல் மாகாணம்,**
**மாகாணப் பணிப்பாளர் பணிமலை,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

# பொது அறிவிப்பு

**2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(2)ஆம் பிரிவின் படியான கூட்டிணைப்பு**

LOLC டெக்னாலஜி சர்விசஸ் லிமிடெட் ("LOTS") PB 3788 மற்றும் LOLC டெக்னாலஜிஸ் லிமிடெட் ("LOTECH") PB 4850 ஆகிய கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையினால் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(2)ஆம் பிரிவிற்கமைவாக ("LOTECH") கம்பனியினை (LOTS) கம்பனியின் முழுமையான துணை நிறுவனமாக கூட்டிணைப்பதற்கான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது. இக் கூட்டிணைப்பின் விளைவாக அனைத்து (LOTECH) இனது பங்குகளும் எந்தவிதமான கொடுப்பனவோ அல்லது வேறு ஏதேனும் பெறுமதி வழங்கவோ இன்றி இரத்து செய்யப்படுவதுடன் (LOTS) ஆனது (LOTECH) இனது அனைத்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சுவீகரிக்கும் தொடர்ந்தியங்கும் கம்பனி (LOTS) ஆகும். (LOTS) இனது தற்போதைய பணிப்பாளர்களே கூட்டிணைப்பின் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்களாக தொடர்ந்தியங்குவர்.

கம்பனி பணிப்பாளர் சபையின் அபிப்பிராயத்தின்படி பரிந்துரைக்கப்பட்ட கூட்டிணைப்பானது இரு கம்பனிகளினதும் சிறந்த ஏற்புடையது என்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான (LOTS) கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கூட்டிணைப்பானது வலுவிற்கு வரும் என்பதுடன் தீர்வுத்திறன் பரிசோதனையும் திருப்திப்படுத்தும் எனக் கருதுகின்றார்.

இக் கூட்டிணைப்பானது 2023 ஜூன் 30ஆம் திகதியன்று அல்லது கம்பனிகளின் பொதுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் நாள் தொடக்கம் வலுவிற்கு வரும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**
**எல்ஓஎல்சீ கோப்பரேட் சர்விசஸ் (பிறைவட்) லிமிடெட்**
**எல்ஓஎல்சீ டெக்னாலஜி சர்விசஸ் லிமிடெட் மற்றும்**
**எல்ஓஎல்சீ டெக்னாலஜிஸ் லிமிடெட் செயலாளர்.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **மிஸ்டி ஹில்ஸ் எல்ல ரிசோட் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: PV 104916
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2015 ஏப்ரல் 02
பதிவு முகவரி: **இல. 01, வெள்ளவாய வீதி, எல்ல.**
**பணிப்பாளர்**

# கேள்விக்கான அழைப்பு

**மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

**சப்ரகமுவ மாகாண சபை**

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் கட்டிட நிர்மாணத்திற்காக தகைமையுள்ள மற்றும் திறமையுள்ள சப்ரகமுவ மாகாணத்தின் கேள்விதாரர்களிடமிருந்து சப்ரகமுவ மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

- ❖ மேலதிக விபரங்களை www.sg.gov.lk இணையதளத்திற்குள் உள்ள நிறுவனங்களுக்குச் சென்று அங்குள்ள மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை மாகாண வீதி அமைச்சிற்கு வருகைதந்து அல்லது தொ.ப. இல. 045-2223154 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை மாகாண வீதி அமைச்சிற்கு வருகைதந்து அல்லது தொ.பே. இல. 045-2223154 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படும் நபருக்கு இலவசமாக வாரத்தின் வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- ❖ 2023.06.26 வரை கேள்விப் பத்திரங்கள் விதியோகிக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை**
**புதிய நகரம், இரத்தினபுரி.**
**045-2223154**
**2023.06.02ம் திகதி**




# விலைக்கோரலுக்கான அழைப்பு

## நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு உள்ளக மின்சார பராமரிப்பு சேவைகளை வழங்குதல்

1. 2023ஆம் வருடத்தில் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையின் மின்சார முறைமையைப் பாராமரிப்பதற்கு அந்தத் துறையில் பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்காக என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
   - அ) நிர்மாணப் பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிறுவனத்தின் (ICTAD) பதிவு குறைந்தபட்சம் EM 5 தரத்தில் இருத்தல் வேண்டும்.
   - ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மின்சார பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நிர்மாணப் பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிறுவனத்தில் (ICTAD) பதிவுசெய்து கொண்டதன் பின் ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்ற மேல் மாகாணத்தினுள் வதிவிடத்தைக் கொண்ட ஒப்பந்தக்காரராகவிருத்தல் வேண்டும்.
2. ஒரு நிறுவனத்தின் பொருட்டு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தை இந்த அலுவலகத்தின் கணக்காளருக்குச் செலுத்தி 2023-06-05ஆம் திகதி முதல் 2023-06-15ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் விலைக்கோரல் படிவங்களை அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
3. மீளளிக்கப்படும் 10,000.00 ரூபா தொகையை இந்த அலுவலகத்தில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது அப்பெறுமதிக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறி (விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நாள் முதல் 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில்) சகிதம் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் 15ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் இந்த அலுவலகத்திற்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம்.
4. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''உள்ளக மின்சார பராமரிப்பு சேவைகள் வழங்குதல் - 2023 நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவை திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
5. இந்த விலைக்கோரல் தொடர்பில் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**மருத்துவர் நிலந்தி பத்திரண,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நீர்கொழும்பு.**

**தேசிய மனநல நிறுவனம் - முல்லேரியாவ புதிய நகரம்**

# விலைமனு அழைத்தல்

01. தேசிய மனநல நிறுவனத்தின் சார்பாக பிராந்தியப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் உருப்படிகளைக் கொள்வனவு செய்துகொள்வதற்காக அனுபவமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பெறுகை இலக்கம் | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | NIMH/ACC/FB/1/9/23 | நறுமண சவர்க்காரக் கட்டிகள் | 9000 | 1,000.00 |
| 02 | | பார் சவர்க்காரம் (650g) | 1100 | |
| 03 | | சவர்க்காரத்தூள் (1kg) | 1200 | |
| 04 | | டிஷ் வொஷ் திரவம் 600ml | 750 | |

02. விலைமனுக்கோரலானது, தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படும்.

03. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2023.06.22 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை இந் நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக இதற்கான விலைமனுப்படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. விலைமனுப்படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன், அவற்றை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2023.06.22 வரை, "தலைவர் பிராந்தியப் பெறுகைக்குழு, தேசிய மனநல நிறுவனம்" என்ற பெயரில், தம் நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் விண்ணப்பக்கடிதம் ஒன்று மற்றும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை இத்திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

05. விலைமனுப்பிணையமானது, விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கு மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தினம் வரை செல்லுபடியாகும் வண்ணம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதனைக் காசாகச் செலுத்துவதாயின், சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணையம் இணைக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனத் தனித்தனி உறைகளில் உள்ளிட்டு முத்திரையிட்டு, உறைகளின் இடது பக்க மேல் மூலையில் கழுவும் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு, 2023.06.22 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத்திறத்தல் அன்றைய தினம் (2023.06.22) பி.ப. 2.00 இற்கு மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் நீங்கள் அல்லது உங்களின் அதிகாரம் பெற்ற முகவரொருவர் சமுகமளித்திருக்கலாம்.

07. இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112-578234 (நீடிப்பு 406/ 404) தொலைபேசி மூலம், தேசிய மனநலநிறுவனத்தின் கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்கள் தொடர்பான தீர்மானிக்கும் உரிமை, பிராந்தியப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ் அறிவித்தலில் அல்லது விலைமனு மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை தொடர்பான தீர்மானிக்கும் உரிமை, பிராந்தியப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ் அறிவித்தலில் அல்லது விலைமனு மாதிரிப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை தொடர்பான தீர்மானிக்கும் உரிமை, தேசிய மனநலநிறுவனத்தின் பணிப்பாளருக்கு உரித்தாகும்.

08. விலைமனுக்களைத் தயாரித்தல் தொடர்பான எந்தவித செலவினங்களையும், பிராந்தியப் பெறுகைக் குழுத் தலைவர் பொறுப்பேற்கமாட்டார்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**தேசிய மனநல நிறுவனம்,**
**முல்லேரியாவ, புதிய நகரம்.**

## காலி கோட்டையில் (இலங்கை வங்கிக்கு அருகில்) 07 விற்பனைக் கூடங்களைக் கொண்ட வர்த்தக கட்டிடமொன்றை மாதாந்த குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகோரல்

**புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**
**காலி மரபுரிமை மன்றம்**

கேள்வி இலக்கம் - GHF /2022/PR/02

01. புத்தசாசனம், மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின், காலி மரபுரிமை மன்றத்தினால் காலி கோட்டை பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட 07 விற்பனைக் கூடங்களைக் கொண்ட கட்டிடத்தை கீழே தரப்பட்டுள்ளவாறு வர்த்தக நடவடிக்கைகளுக்காக பொருத்தமான வியாபாரிகள் அல்லது வியாபார நிறுவனங்களில் இருந்து தேசிய போட்டி கேள்வி முறைமையின் பிரகாரம் கேள்விகள் கோரப்படுகின்றன.
02. 07 வர்த்தக கூடங்களுக்கான உத்தேச வர்த்தக பாவனைகள் கீழ்க்காணுமாறு அமையும்.
    - A. உணவகம் (சர்வதேச அல்லது இலங்கை) 01 (Block A)
    - B. கீழ்நாட்டு/மேல்நாட்டு தேயிலை மற்றும் இலங்கை கோப்பி விற்பனை செய்யும் விற்பனை கூடம் (Block B)
    - C. மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட மாணிக்கம் மற்றும் ஆபரணங்கள் விற்பனை கூடம் (Block C)
    - D. துணிமனி, கைத்தறி துணிமனி போன்றவை விற்பனை செய்யும் விற்பனை கூடம் (Block D)
    - E. மர வேலைப்பாடுகள், நினைவுப்படிகம், உள்ளூர் கைத்தொழில்களின் பூர்த்தியான விற்பனை கூடம்(மரப்பொருட்கள், கோரைப்புல் சார்ந்த தயாரிப்புகள் போன்றன) (Block E)
    - F. இரும்பு, முகமூடி, தும்பர மரபுரிமை வடிவங்கள் போன்ற மனங்கவர் கலாசார மரபுரிமை போன்ற தயாரிப்புகளை விற்பனை செய்யும் விற்பனை கூடம் (Block F)
    - G. உணவகம் (சர்வதேச அல்லது இலங்கை) 02 விற்பனை கூடம் (Block G)
03. குத்தகை காலஎல்லை 03 வருடங்களாகும்.
04. சகல கேள்விகளும் 2023.09.25 வரை செல்லுபடியாதல் வேண்டும். (அதாவது கேள்வி ஏற்றுக்கொள்ளுதல் முடிவுறுத்தும் தினம் முதல் 91 நாட்கள்)
05. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விகளுக்கு, சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத்தொகுதியொன்றை மீளளிக்கப்படாத ரூபா ஐயாயிரம் (ரூ.5000/) கட்டணத்தைச் செலுத்தி காலி மரபுரிமை மன்றத்தின் கணக்குப் பிரிவில் 2023.06.23 வரை வேலை நாட்களில் மு.ப.9.00 இற்கும் பி.ப.3.00 இற்கும் இடையில் எழுத்துமூல வேண்டுதலை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஒரு வளாகத்திற்கு மேல் கேள்விகளைச் சமர்ப்பிப்பதாயின் ஒவ்வொரு வளாகத்திற்கும் வேறுவேறாக கேள்வி ஆவணத் தொகுதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.06.15 மு.ப.10.30 இற்கு இல.12, ரூம்பாட் வீதி, கோட்டை, காலியில் அமைந்தள்ள காலி மரபுரிமை மன்றத்தின் தலைமையகத்தில் நடைபெறும்.
07. பணிப்பாளர், காலி மரபுரிமை மன்றத்தில் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட ரூபா எழுபத்திரெண்டாயிரம் (ரூ.72,000/-) பெறுமதியான நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை (கேள்விப் பிணையை கணக்குப்பிரிவிற்கு காசாகவும் வைப்புச் செய்ய முடியும்) சமர்ப்பிக்க முடிவதுடன் அது 2023.09.27 வரை செல்லுபடியாதல் வேண்டும். ஒரு வளாகத்திற்கு மேல் கேள்விகளை சமர்ப்பிப்பதாயின் ஒவ்வொரு வளாகத்திற்கும் வேறுவேறாக கேள்விப்பிணையை சமர்ப்பித்தல் வேண்டும்.
08. சகல கேள்விகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறு கேள்விப் பிணை மற்றும் காலி மரபுரிமை மன்றத்தின் கணக்குப் பிரிவிற்கு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பொறியிடப்பட்ட கேள்விகளை, மூலப்பிரதி மற்றும் பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இட்டு மூடி, அப் பிரதிகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் தலைவர், அமைச்சில் சிறிய பெறுகைக் குழு காலி மரபுரிமை மன்றம், இல.12, ரூம்பாட் வீதி, கோட்டை காலிக்கு அனுப்புவதன் மூலம் அல்லது காலி மரபுரிமை மன்றத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக வருகைதந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் அல்லது பூர்த்தியற்ற கேள்விகள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் காலி கோட்டை பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள வர்த்தக வளாகத்தை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி - (விற்பனை கூடத்தின் எழுத்தை குறிப்பிடுங்கள்)" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2023.06.27 பி.ப.1.00 அகும். சகல கேள்விகளும், கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் மேற்படி முகவரியில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
11. இதுபற்றிய மேலதிக விபரங்களை காலி மரபுரிமை மன்றத்தின் கணக்குப்பிரிவில் (தொ. பே.இலக்கம் 094-2246784) வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பெற்றுக்கொள்ளலாம். இக்குத்தகைக்கு விடல் பற்றிய சகல விடயங்கள் சம்பந்தமாகவும் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

**தலைவர், அமைச்சு சிறிய பெறுகைக்குழு,**
**புத்தசாசனம் மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு (தேசிய மரபுரிமை பிரிவு)**
**செத்சிரிபாய கட்டம் - 2, பத்தரமுல்ல**
**தொ.பே.இல மற்றும் பெக்ஸ் இல : 091-2246784.**
**மின்னஞ்சல் - herifo@sltnet.lk**
**இணையத்தளம் : www.galleheritage.gov.lk**










**கார்கள்**
**விற்பனைக்கு**

SG KB-8504 Chevrolet, 2003, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 033097

WP CAU- 1054 DFSK Glory, 2016, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 033096




**பஸ்கள், லொறிகள்**
**விற்பனைக்கு**

CP DAD-9235 Mahindra Mini Truck, 2016, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210 810 . 033099



# ஆப்கானின் சவாலை எதிர்கொள்ள இலங்கை அணி இன்று களத்தில்



இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கில் இன்று (02) நடைபெறவுள்ளது.

பகல் போட்டியாக நடைபெறும் இந்த ஆட்டத்தில் உபாதைக்கு உள்ளாகி இருக்கும் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் வனிந்து ஹசரங்க மற்றும் ஆப்கான் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் ரஷீத் கான் இருவரும் பங்கேற்கவில்லை. இது சுழற்பந்துக்கு சாதகமான ஆடுகளத்தில் இரு அணிகளுக்குமே தாக்கம் செலுத்துவதாக இருக்கும்.

இலங்கை அணி இந்த மாத நடுப்பகுதியில் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் பங்கேற்க சிம்பாப்வே புறப்பட்டுச் செல்லவுள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாடாகவே ஆப்கான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

குறிப்பாக உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கு இலங்கை குழாம் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில் இந்தத் தொடரின் முடிவுகள் அடிப்படையிலேயே அணி தேர்வு செய்யப்பட வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக துடுப்பாட்ட வரிசையை பலப்படுத்தும் வகையில் அனுபவ வீரர்களான டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில் உள்ளூர் போட்டிகளில் சோபித்து வரும் லெக்பிரேக் பந்துவீச்சாளரான துஷான் ஹேமந்த, வனிந்து ஹசரங்கவுக்கு பதில் இன்றைய போட்டியில் களமிறங்க வாய்ப்பு உள்ளது.

அதேபோன்று அண்மையில் முடிவுற்ற இந்திய பிரீமியர் லீக் தொடரில் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக சிறப்பாக பந்துவீசிய இளம் வேகப்பந்து வீரர் மதீஷ பதிரண தனது கன்னி ஒருநாள் போட்டியில் விளையாட இன்று களமிறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று சென்னை அணிக்காக சிறப்பாக செயற்பட்ட மற்றொரு இலங்கை வீரரான மர்ம சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷனவும் இன்றைய தினம் களமிறங்க வாய்ப்பு உள்ளது.

முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர அணிக்கு திரும்பி இருப்பது இலங்கைக்கு வலுச் சேர்ப்பதாக உள்ளது.

ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு தகுதிபெற இலங்கை அணி தகுதிகாண் போட்டிகளில் ஆட வேண்டிய சூழலில் அந்த அணி ஒருநாள் போட்டிகளில் அண்மைக் காலத்தில் சோபிக்கத் தவறி வருகிறது. இந்த ஆண்டில் இலங்கை அணி ஆடிய ஐந்து ஒருநாள் போட்டிகளில் ஒன்றில் கூட வெற்றியீட்டவில்லை.

கடைசியாக நடந்த நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கை 2–0 என இழந்தது. இந்நிலையில் இலங்கை அணி ஒருநாள் போட்டிகளில் உலகக் கிண்ணத்திற்கு முன்னர் ஓர் ஸ்திரமான அணியான தம்மை நிரூபிப்பது கட்டாயமாக உள்ளது.

மறுபுறம் ஆப்கானிஸ்தான் அணி அடுத்த உலகக் கிண்ணத்திற்கு தயாராகும் வகையிலேயே இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. திட்டமிட்டதை விடவும் ஒரு வாரத்திற்கு முன்னர் இலங்கை வந்த ஆப்கான் வீரர்கள் ஹம்பாந்தோட்டையில் ஒரு வாரம் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

அண்மைக் காலத்தில் வலுவான அணியாக உருவெடுத்து வரும் ஆப்கான் அணி கடைசியாக நவம்பரில் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை 1–1 என சமநிலை செய்தது.

அதேபோன்று கடந்த 2022 ஜூனில் சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரை 3–0 என கைப்பற்றிய ஆப்கானிஸ்தான் அணி கடந்த மார்ச் மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரை 2–1 என கைப்பற்றியது. இது அண்டை நாட்டுக்கு எதிராக ஆப்கான் அணியின் முதல் வெற்றியாக இருந்தது.

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் இதுவரை 7 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ளன. இதில் 4 போட்டிகளில் இலங்கையும் 2இல் ஆப்கானிஸ்தானும் வெற்றியீட்டி இருப்பதோடு ஒரு ஆட்டத்தில் முடிவு கிடைக்கவில்லை.

ஹம்பாந்தோட்டையின் தட்டையான ஆடுகளத்தில் துடுப்பாட்ட வீரர்கள் அதிக ஓட்டங்களை குவித்து வருகின்றபோதும் அது சுழற்பந்து வீச்சாளர்களுக்கு உதவியாக உள்ளது. வெப்பமான காலநிலை நிலவும் ஹம்பாந்தோட்டையில் இன்றைய தினம் மழை குறுக்கிட வாய்ப்பு குறைவாக உள்ளது.

ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கில் இதுவரை 21 ஒருநாள் சர்வதேச போட்டிகள் நடைபெற்றபோதும் கடைசியாக அங்க ஒருநாள் போட்டி ஒன்று நடந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன் 2020 ஆம் ஆண்டிலாகும். அப்போது மேற்கிந்திய தீவுகளை எதிர்கொண்ட இலங்கை அணி 345 ஓட்டங்களை விளாசி எதிரணியை 161 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

# முதல் இரு போட்டிகளில் இருந்தும் ரஷீத் விலகல்



கீழ் இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஆப்கானிஸ்தான் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ரஷீத் கான் இலங்கைக்கு எதிரான முதல் இரு ஒருநாள் போட்டிகளிலும் இருந்தும் விலகியுள்ளார்.

"அவர் முழுமையான மருத்துவ கண்காணிப்பில் உள்ளார். ஜூன் 7ஆம் திகதி நடைபெறும் கடைசி ஒருநாள் போட்டிக்கு அவர் அணிக்குத் திரும்புவார்" என்று ஆப்கான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அண்மையில் முடிவுற்ற இந்திய பிரீமியர் லீக் தொடரில் குஜராத் டைடன்ஸ் அணிக்காக ஆடிய ரஷீத் கான், அந்த அணி இறுதிப் போட்டி வரை முன்னேற முக்கிய பங்காற்றினார். குஜராத் அணி இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸிடம் தோல்வியை சந்தித்தது.

அவர் ஐ.பி.எல் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்தியோர் வரிசையில் இரண்டாவது இடத்தை பிடித்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் ஐ.பி.எல் இறுதிப் போட்டியின்போதே ரஷீத் கானுக்கு காயம் ஏற்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

ரஷீத் இல்லாத நிலையில் ஆப்கானிஸ்தான் சுழல்பந்து முகாமில் முஹமது நபி, முஜீபுர் ரஹ்மான் மற்றும் நூர் அஹமட் ஆகியோருக்கு பொறுப்பு அதிகரித்துள்ளது. ஐ.பி.எல் தொடரில் டைடன்ஸ் அணிக்காக ஆடிய நூர் 13 போட்டிகளில் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். எனினும் அவர் இதுவரை ஆப்கான் அணிக்காக ஒரு ஒருநாள் மற்றும் டி20 போட்டியிலேயே ஆடியுள்ளார்.

இலங்கை ஒருநாள் தொடருக்குப் பின்னர் முழுமையான போட்டித் தொடர் ஒன்றுக்காக ஆப்கான் அணி பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

# கொமர்ஷல் வங்கி அனுசரணை: வவுனியாவில் சதுரங்கப் போட்டி



வவுனியா மாவட்டத்தில் 2023ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டி கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

இரண்டு தினங்களில் ஏழு சுற்றுகளாக இடம்பெற்ற இப்போட்டியில் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று தமது திறமைகளை வெளிக்காட்டினர். வவுனியா வடக்கு மற்றும் தெற்கு வலய கல்வி திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போட்டிக்கு இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் இணை அமைப்பான யாழ்ப்பாண மாவட்ட சதுரங்க கழகம் பூரண ஆதரவை வழங்கியது.

10, 12, 14 மற்றும் 16 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவருக்கு தனிநபருக்கான விருது வழங்கப்பட்டது. ஒவ்வொரு போட்டிப் பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு பணப்பரிசும் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

# ஒருநாள் அணியில் முக்கிய பங்காற்ற எதிர்பார்க்கிறார் திமுத் கருணாரத்ன



இரண்டு ஆண்டுகளின் பின்னர் இலங்கை ஒருநாள் அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டிருக்கும் டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன அணிக்காக முக்கிய பங்காற்ற எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரில் இலங்கை அணியின் தலைவராக செயற்பட்ட கருணாரத்ன 2021ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கு அழைக்கப்படவில்லை. இந்நிலையில் மீண்டும் அணிக்குள் உள்வாங்கப்பட்டமை தொடர்பில் திமுத் கருணாரத்ன வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

"ஒரு பக்கம் நீண்டநேரம் களத்தில் நின்று வீரர் ஒருவர் துடுப்பெடுத்தாடுவதுடன், அவரைச்சுற்றி ஏனைய வீரர்கள் வேகமாக ஓட்டங்களை குவிக்க வேண்டும் என்ற திட்டம் இலங்கை அணிக்கு கடந்த காலங்களில் வெற்றிகளை கொடுத்துள்ளது.

அணியின் 40 ஓவர்கள் வரை களத்திலிருந்து துடுப்பெடுத்தாட வேண்டிய வீரர் ஒருவர் எமக்குத் தேவை என்று நான் நம்புகிறேன். தேர்வாளர்களிடம் நான் எதனையும் கேட்கவில்லை. நான் சிறந்தவராக இருந்தால் அவர்கள் தெரிவுசெய்வார்கள். நான் தேர்வாளர்களை துரத்திச்சென்று என்னால் இதனை செய்ய முடியும் என கூறமாட்டேன். நான் அப்படியான நபர் இல்லை. நான் ஓட்டங்களை பெற வேண்டும் என்பதுடன் துடுப்பாட்ட மட்டையால் பேசுவேன்" என்றார். இதேவேளை ஒருநாள் அணியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பிலும் இதன்போது திமுத் கருணாரத்ன தன்னுடைய கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டார்.

"நான் 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்குப் பின்னர் சில போட்டிகளில் மாத்திரமே விளையாடினேன். அதனைத்தொடர்ந்து சில கழக மட்ட போட்டிகள். இவற்றை தவிர்த்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் விளையாடவில்லை. ஆனால் அதிகமான டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளேன். என்னை அணியிலிருந்து நீக்கும்போது 40 என்ற ஓட்ட சராசரி, சில அரைச்சதங்கள் மற்றும் ஏழு 100 ஓட்ட இணைப்பாட்டங்களையும் பெற உதவியிருந்தேன்.

குசல் பெரேரா, அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் நான் என எம்முடைய பங்களிப்பை தேர்வாளர்கள் எதிர்பார்த்தப்படி சரியாக செய்திருந்தோம். தேர்வாளர்கள் 40 ஓவர்கள் வரை என்னை விக்கெட்டினை விட்டுக் கொடுக்காமல் துடுப்பெடுத்தாடும்படி கூறினர். அதனையும் செய்தேன். எனினும் புதிய தேர்வாளர்கள் புதிய திட்டத்துடனும், புதிய மாற்றங்களுடனும் இலங்கை கிரிக்கெட் செல்ல வேண்டும் என கூறினர். எனவே அதற்கு என்னுடைய மரியாதையை செலுத்தினேன்" என்றார்.

முன்னணி அணிகள் இரு முனையிலும் செயற்படுத்து தாக்குதல் ஆட்டத்திற்கு பதில் இலங்கைக்கு முக்கிய பாத்திரமாக செயற்படும் வீரர் ஒருவர் தேவை என்று கருணாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். "இங்கிலாந்தைப் போன்று எம்மிடம் அதிக கிரிக்கெட் வீரர்கள் இல்லை. அவர்களிடம் அதிக வீரர்கள் இருந்தாலும் அது எமக்கு பொருந்தாது என்பதோடு அவ்வாறு எம்மிடம் இல்லை.

எம்மிடம் மட்டுப்படுத்தப்பட்ட வீரர்களே உள்ளனர். ஆனால் எம்மிடம் போதுமான உடல் தகுதி இருப்பதோடு இடைவெளிகளுக்கு பந்தை செலுத்தி இரு முனைகளுக்கும் ஓடி ஓட்டங்களை பெறும் வீரர்களே கடந்த காலத்தில் எம்மிடம் இருந்துள்ளனர்" என்றும் கருணாரத்ன தெரிவித்தார்.

# வாடிக்கையாளர்களை வேவு பார்த்த 'அமேசன்' இழப்பீடு




பெண் ஒருவரை அவரது வீட்டில் வைத்து வேவு பார்த்தது உட்பட வாடிக்கையாளர்களின் தனியுரிமை சட்டத்தை மீறியதாக குற்றம்சாட்டப்பட்ட அமேசன் நிறுவனம் 30.8 மில்லியன் டொலர்களை செலுத்த இணங்கியுள்ளது.

வீட்டின் படுக்கை அறைகள் மற்றும் குளியலறைகளில் பொருத்தப்பட்ட ரிங் பாதுகாப்பு கெமராக்களை பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டு பல மாதங்கள் பெண் வாடிக்கையாளர் ஒருவரை அமேசன் முன்னாள் ஊழியர் ஒருவர் வேவுபார்த்ததாக அமெரிக்க மத்திய ஆணைக்குழு கூறியதை அடுத்து 5.8 மில்லியன் டொலர்களை செலுத்த அந்த நிறுவனம் இணங்கியுள்ளது.

தீவிர, செயற்கை நுண்ணறிவில் செயல்படும் அலெக்சா எனும் குரலுதவிச் சாதனத்தைப் பயன்படுத்தி குழந்தைகளுக்கான தனிநபர் உரிமைச் சட்டங்களை மீறிய சந்தேகத்தில் அமேசன் நிறுவனம் அதன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைத் தீர்க்க 25 மில்லியன் டொலர் செலுத்தவுள்ளது.

பெற்றோரின் வேண்டுகோளுக்கு ஏற்ப அலெக்சா பதிவுசெய்த ஒலிப்பதிவுகளை அழிக்கத் தவறியதாக அதன் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாகவும், இழப்பீடு செலுத்திப் பிரச்சினையைச் சமாளிக்க முடிவெடுத்துள்ளோம் என்றும் அமேசன் நிறுவனம் கூறியது.

பயனீட்டாளர்களின் தனிநபர் தகவல்களை பாதுகாக்கப் புது அம்சங்களைச் சேர்க்கவுள்ளதாக அது குறிப்பிட்டது.

இதில் பயனீட்டாளர்களின் தனிநபர் தகவல்களைப் பாதுகாக்கத் தவறிய ரிங் நிறுவனம் 5.8 மில்லியன் டொலர்களை செலுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# மஸ்க் மீண்டும் உலகின் பெரும் செல்வந்தரானார்



டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான இலோன் மஸ்க் உலகின் பெரும் செல்வந்தர் என்ற அந்தஸ்தை மீண்டும் பெற்றுள்ளார்.

74 வயது பிரான்ஸ் வர்த்தகரான பெர்னாட் ஆர்னோல்டின் எல்.வி.எம்.எச் பங்குகள் 2.6 வீதம் வீழ்ச்சி கண்டதை அடுத்தே மஸ்கினால் முதலிடத்திற்கு முன்னேற முடிந்துள்ளது. இந்நிலையில் மஸ்கின் மொத்த சொத்து மதிப்பு 192.3 பில்லியன் டொலர்களாக உயர்ந்திருக்கும் நிலையில் ஆர்னோல்டின் சொத்து மதிப்பு 186.6 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சி கண்டுள்ளது.

ஆர்னோல்ட் கடந்த டிசம்பரில் மஸ்கை பின்தள்ளி உலகின் பெரும் செல்வந்தராக பதிவானார். இதில் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் எல்.வி.எம்.எச் பங்கு பத்து வீதம் வரை சரிந்ததோடு, ஒரு கட்டத்தில் ஆர்னோல்ட் சொத்து மதிப்பு ஒரே நாளில் 11 பில்லியன் டொலர்கள் வரை சரிந்தது.

எனினும் இலோன் மஸ்க் இந்த ஆண்டு 55.3 பில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளார். இதில் பெரும்பாலான வருவாய் டெஸ்லா நிறுவனத்தில் இருந்து கிடைத்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

# பறக்கும் மர்மப் பொருள் பற்றி நாசா முதல் கூட்டம்




அடையாளம் தெரியாத பறக்கும் பொருட்கள் பற்றி அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா நடத்திய முதலாவது பொதுவெளி கூட்டத்தில், வேற்றுக் கிரகவாசிகளின் செயற்பாடுகள் தொடர்பில் இன்றுவரை உறுதியான ஆதாரம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த மர்மப் பொருட்கள் தொடர்பில் ஆய்வு செய்வதற்காக நாசா கடந்த ஆண்டு நிபுணர் குழு ஒன்றை நியமித்திருந்தது. இந்தக் குழுவின் கூட்டமே கடந்த புதனன்று வொசிங்டனில் (31) இடம்பெற்றது.

இதில் பல தசாப்தங்களாக சேகரிக்கப்பட்ட அடையாளம் தெரியாத பறக்கும் பொருட்களின் 800 மர்மமான அறிக்கைகளை அமெரிக்க அதிகாரிகள் ஆய்வு செய்துள்ளனர். ஆனால் ஒரு சிறிய பகுதியே உண்மையில் விளக்கப்படாதவையாக உள்ளன என்று இந்த ஆய்வுக் குழு குறிப்பிட்டுள்ளது.

எனினும் வேற்றுக்கிரகவாசிகள், இராணுவ எதிரிகள் மற்றும் இது தொடர்பில் முன்வைக்கப்படும் விளக்கங்களை இந்தக் குழு முற்றாக நிராகரிக்கவில்லை.

குறிப்பாக 2004 தொடக்கம் இராணுவ விமான ஓட்டிகளால் அவதானிக்கப்பட்ட 144 சம்பவங்கள் குறித்து 2021இல் பெண்டகன் அறிக்கையிட்டிருந்தது. இதில் ஒன்றைத் தவிர எஞ்சிய அனைத்து சம்பவங்களும் விளக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

நீர்ப்பாசன அமைச்சு

## இலங்கை மகாவலி அதிகாரசபை

## விலைமனுகோரல்

### இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் உடைந்த இரும்புப் பொருட்களை விற்பனை செய்வதற்காக விலைமனுகோரல்

1. இலங்கை மகாவலி அதிகார சபையின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் இல. 500, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 எனும் இடத்தில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 09ஆம் மாடியில் 2023-06-20ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை மோட்டார் வாகனங்கள், காணிப் பயன்பாட்டு வாகனங்கள், கனரக வாகனங்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் உடைந்த இரும்புப் பொருட்களை கேள்வி மூலம் அப்புறப்படுத்துவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதன் பிரகாரம் இலங்கை மகாவலி அதிகார சபையின் கொழும்பு தலைமை அலுவலகம், பீ வலயம் - வெலிகந்த, சீ வலயம் - தெஹியத்தகண்டிய (நோடா பண்ணை, ரன்கிந்த பண்ணை), விக்டோரியா / ஈ வலயம் - திகன, டீ வலயம் - மெதிரிகிரிய, எச் வலயம் - (நீராவி பண்ணை / இயந்திர வேலைத்தளம் - தம்புத்தேகம), வலவ வலயம் - எம்பிலிப்பிட்டிய, எல் வலயம் - வெலிஓயா, மகாவலி பாதுகாப்பு படையணி - திகன, ரம்பகென்ஓயா வலயம் - மகாஓயா, மொரகஹகந்த வலயம் - (இயந்திர வேலைத்தளம், பக்கமூன) பிரதான வேலி மற்றும் நீர்தேக்க செயற்பாட்டுப் பிரிவு (திகன, ரந்தெனிகல, பொல்கொல்ல, மாதுருஓயா, மாகாகட, போவதென்ன) எனும் இடங்களில் இந்த வாகனங்கள், இந்திராதிகள், இரும்புப் பொருட்களை 2023-06-05ஆம் திகதி மு.ப. 9.30 மணி முதல் 2023-06-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் (அரச விடுமுறை தினங்கள் மற்றும் வார இறுதி நாட்கள் தவிர்ந்த) பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. வாகனங்களுக்காக வேறான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள் மற்றும் உடைந்த இரும்புப் பொருட்களுக்கு வேறான விண்ணப்பப் படிவங்களாக விண்ணப்பப் படிவங்களைக் கொள்வனவு செய்து அந்த விண்ணப்பப் படிவங்களில் அடங்கியுள்ள ஒவ்வொரு வகுதிக்காகவும் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. குறித்த விலைக்கோரல் படிவத்தை நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து இலங்கை மகாவலி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் 07ஆம் மாடியிலுள்ள நிதிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் (நிதி - ஆதனம்/ களஞ்சியம்) அவர்களிடமிருந்து அல்லது மேற்கூறப்பட்ட 02ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள வலய அலுவலகங்களின் கணக்காளர்களிடமிருந்து 3500.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்புத் தொகையைச் செலுத்தி 2023-06-05ஆம் திகதி மு.ப. 9.30 மணி முதல் 2023-06-19ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். (அரச விடுமுறை தினங்கள் மற்றும் வார இறுதி நாட்கள் தவிர்ந்த)
5. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வகுதியொன்றுக்கு இயைபான, மீளளிக்கப்படும் வைப்புத் தொகை 60 நாட்களுக்கு செல்லுபடியாகும் வங்கி வரைவு (Bank Draft) அல்லது ரொக்கப் பண வைப்பாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது சமர்ப்பித்தல் வேண்டும்.
6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மீளளிக்கப்படும் பண வைப்பு அல்லது 60 நாட்கள் செல்லுபடியாகும் வங்கி வரைவொன்றுடன் நிறுவனத்தின் பெயர், முகவரி, மற்றும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களுக்காக விலைமனு கோரல்’’ அல்லது ‘‘பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட இயந்திரோபகரணங்கள் மற்றும் உடைந்த இரும்புப் பொருட்களுக்காக விலைமனு கோரல்’’ எனக் குறிப்பிட்டு உறைக்கு முத்திரைக் குறி பொறித்து 2023-06-20ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கொழும்பு-10, டீ.பீ. ஜாயா மாவத்தை, 500ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 09ஆம் மாடியில் உள்ள பணிப்பாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரில் கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் 2023-06-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அவ்விடத்திலேயே திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் மட்டும் கலந்துகொள்ளலாம். 2023-06-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. சகல விண்ணப்பப் படிவத்துடனும் அப்புறப்படுத்தப்படும் வாகனம், இயந்திரோபகரணம் மற்றும் உடைந்த இரும்புப் பொருட்கள் தொடர்பான விபரங்கள் வழங்கப்படும். குறித்த விலைக்கோரல் ஆவணத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்கு மட்டும் பின்வரும் இணையதளத்தில் கேள்விகள் (Tenders) என்பதன் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.
8. மிட்சுபிஷி து-44 ஜீப், மிட்சுபிஷி பஜரோ, டொயோட்டா லேன்ட்குரூசர் எனும் வகையான ஜீப் வண்டிகள், நிசான் டபள் கெப், மெஸ் பேர்குஷன் டிராக்டர், டாடா லொறி, மெஸ்டா கார் என்பன அப்புறப்படுத்தப்படும் வாகனங்களில் உள்ளடங்கும் என்பதுடன் இயந்திரோபகரணங்கள் மற்றும் உடைந்த இரும்புப் பொருட்களில் பதிவு இரத்துச் செய்யப்பட்ட வாகனங்கள், கெட்டபிலர், லோடர், ஜெனரேட்டர், ரோட் ரோலர், டிரேலர், விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், ஜீப் வண்டி பொடி, மடை கதவுகள் மற்றும் பாவிக்கப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் போன்றன உள்ளடங்கும்.
9. விண்ணப்பப் படிவங்களுடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் மிகுந்த கவனத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
10. மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி இலக்கம்: 011 2699417 இணையதளம்: http://www.mahaweli.gov.lk

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை,**
**இல. 500, டீ.பீ. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு - 10.**



ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின்சார பாவனையாளர்களுக்கு வினைத்திறனான வழங்கல் மற்றும் சேவையை வழங்கும் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு, இலங்கை மின்சார சபை பாவனையாளர் சேவை நிலையங்கள் / மாகாணங்கள் / பிரதேசங்கள் QR குறியீட்டில் சேர்க்கப்பட்டுள்ள திகதிகள் மற்றும் நேரங்களில் மின்சாரம் தடைப்படும். இதனால் மின்சார பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருத்தத்தைத் தெரிவிப்பதோடு திட்டமிடப்பட்ட வேலைகள் நிறைவடைந்தவுடன் மீண்டும் மின்சார வழங்கலை வழமைக்குக் கொண்டுவர இலங்கை மின்சார சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## மின்சாரத் தடை அறிவித்தல் - ஜூன் 2023

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து www.ceb.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையதளம் அல்லது CEB Care எனும் செயலியைப் (App) பார்க்கவும். அல்லாவிடில் பின்வரும் QR குறியீட்டை Scan செய்யுங்கள். மின்சாரம் தடைப்படும் திகதி மற்றும் நேரங்கள் தொடர்பில் பாவனையாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் குறுஞ்செய்தி (SMS) மூலம் அறியத்தரப்படும்.

பொது முகாமையாளர்,
**இலங்கை மின்சார சபை,**
இல. 50, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02.

*வளமான வாழ்விற்கு மின்சாரம்.....*

**நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk எனும் இணையதளத்தில் செலுத்தலாம்.**



## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

# சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திம அளவிலான கைத்தொழிலாளர்களைப் பதிவு செய்தல் — 2023ஆம் வருடம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் சிறு ஏற்றுமதிப் பயிர் அபிவிருத்திப் பிரிவினால் 2023ஆம் வருடத்திற்கான சிறு ஏற்றுமதி பயிர்கள் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திம அளவிலான கைத்தொழிலாளர்கள் பதிவு செய்துகொள்ளப்படுகின்றனர் என்பதுடன் அதற்காக பின்வரும் பயிர்கள் மற்றும் தொடர்புடைய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திம அளவிலான கைத்தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிர் வகைகள்:**

மிளகு, கறுவா, கிராம்பு, வெற்றிலை, வெணிலா, பாக்கு, கரதமுங்கு, பெங்கிரி, கொகோவா, கோப்பி, இஞ்சி, கொரக்கா, லெமன்கிராஸ், சாதிக்கா, மஞ்சள், கரும்பு, மரமுந்திரி

நீங்களும் மேற்கூறப்பட்ட ஏதாவதொரு பயிரின் உற்பத்தியாளர் அல்லது பெறுமதி சேர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவராயிருந்தால் எமது அமைச்சினால் செயற்படுத்தப்படும் இந்த செயற்றிட்டத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

**பதிவு செய்தலின் நன்மைகள்:**

- அரசாங்கம் / பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்படும் நன்மைகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அறிந்துகொள்ளல்
- சிறிய மற்றும் மத்திம அளவிலான கைத்தொழிலாளர்களின் வலையமைப்பில் ஒரு பங்காக இருத்தல்
- கைத்தொழிலாளரான உங்களின் தேவைகளை அறிந்துகொண்டு அதற்கு முன்னுரிமை அளித்தல்.
- உள்நாட்டு / சர்வதேச சந்தைகளுக்கு அறிமுகப்படுத்துதல் மற்றும் புதிய சந்தை வாய்ப்புகளை அமைத்துக் கொடுத்தல்
- கைத்தொழிலின் / வியாபாரத்தின் குணவியல்புத் தன்மைகள் மற்றும் பயன்பாடுகளை உயர்த்துவதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்குதல்

**விண்ணப்பிக்கும் முறை:**

- கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றுடன் 2023-06-16ஆம் திகதிக்கு முன் மேலதிகச் செயலாளர், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பிரிவு, 8ஆம் மாடி, செத்சிறிபாய 11ஆம் கட்டம், பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அல்லது smea.development@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 0714405503 எனும் Whatsapp இலக்கத்திற்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விடயத்தின் காரணம் ‘‘ சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திம அளவிலான கைத்தொழிலாளர்களைப் பதிவு செய்தல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
- இது தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவையானால் 0112877841 / 0714405503 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக அல்லது smea.development@gmail.com எனும் மின்னஞ்சல் மூலம் விசாரித்தறியலாம்.

**செயலாளர்,**
**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.**

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திம அளவிலான கைத்தொழிலாளர்களைப் பதிவு செய்தல்**

**2023ஆம் வருடம்**

01. விண்ணப்பதாரரின் அறிமுகத் தகவல்கள்:..........................................
1.1 முழுப் பெயர்: ..........................................
1.2 தபால் முகவரி: ..........................................
1.2.1 பிரத்தியேக முகவரி:..........................................
1.2.2 வியாபார இடத்தின் முகவரி: ..........................................
1.3 கிராம சேவையாளர் பிரிவு (GND):..........................................
1.4 பிரதேச செயலாளர் பிரிவு (DSD):..........................................
1.5 மாவட்டம்:..........................................
1.6 தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..........................................
1.7 மின்னஞ்சல் முகவரி:..........................................
1.8 தொலைபேசி இலக்கம்:..........................................
I. கையடக்க தொலைபேசி: ................................ III. WhatsApp: ..........................................
II. நிலையானது: ..........................................

02. தற்போது நடாத்திக்கொண்டு செல்லும் வியாபாரம் தொடர்பான பின்வரும் தகவல்களைப் பூர்த்தி செய்யவும்.
2.1 வியாபரத்தின் பெயர்:..........................................
2.2 சட்டபூர்வ தன்மை: தனிநபர் / பங்காண்மை / பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனம் / கூட்டுறவுச் சங்கம் / ஏனையவை (விசேடத்துவம்)
2.3 உரிமையாளரின் பெயர்: ..........................................
2.4 வியாபாரத்தின் முகவரி: ..........................................
2.5 வியாபாரப் பதிவிலக்கம்: ..........................................
2.6 பதிவு செய்யப்பட்ட திகதி: ..........................................
2.8 வியாபாரத்தின் பிரதான நடவடிக்கை / வியாபாரத்தின் தன்மை:
உற்பத்தி ☐ ஏற்றுமதி ☐ இடைத்தரகு வியாபாரம் ☐ ஏனையவை ☐
வியாபாரத்தின் தன்மை (சுருக்கமாக)
2.9 பயன்படுத்தும் பயிர் வகை:..........................................
2.10 உற்பத்தியாளரானால் உற்பத்தியை வழங்கும் சந்தை:
உள்நாடு ☐ வெளிநாடு ☐ இடைத்தரகு ☐
2.11 நீங்கள் தற்போது முகம்கொடுக்கும் சிக்கல்கள்:

மேற்கூறப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும், வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக சான்று பகர்கிறேன்.

..................................... ..................................
**கையொப்பம்** **திகதி**

# கேள்விமனு அறிவித்தல்

## கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை

கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்கு உரிய இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கெனப் பொருத்தமான விலைமனுதாரரிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கென விலைமனுக்களை முன்வைக்க உத்தேசித்துள்ள கேள்விமனுதாரர்கள் விண்ணப்பப் படிவக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையைக் காசாளரிடம் செலுத்தி நிபந்தனைகளுடனான விண்ணப்பப் படிவத்தை 2023.06.01ஆம் திகதியிலிருந்து 2023.06.21ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை சபையில் அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்களை முதற்பிரதி, இணைப்பிரதி என வேறாக்கிப் பின்னர் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் உத்தேச குத்தகை நிலையத்தைக் குறிப்பிட்டு 2023.06.22ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் செயலாளர், கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை, அம்பிட்டிய என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது சபையின் செயலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். மீளளிக்கப்படும் வைப்புத் தொகையான ரூ. 3,000.00 பணத்தை அலுவலகக் காசாளரிடம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டையும் விலைமனுக்களுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

2023.06.22ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்குப் பிரதேச சபையின் அம்பிட்டிய பிரதம அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அதில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள முடியும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் டென்டர் கமிட்டிக்கு உரியது.

| தொடர் இல. | ஆதனம் பற்றிய விபரம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | கேள்வி மனு படிவக் கட்டணம் | அதிகுறைந்த மாதாந்தக் கேள்வி |
|---|---|---|---|---|
| 01 | கட்டுடல் பயிற்சி நிலையம் - குருதெனிய | ரூ. 3,000.00 | ரூ. 1.000.00 | ரூ. 50,000.00 |

**தொலைபேசி இலக்கம் :- 081-2241222**

**செயலாளர்**
**கண்டி கடவத்ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை அலுவலகம்,**
**அம்பிட்டிய.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD13/1334/2023 | கொழும்பு நகர எல்லைக்குள் உள்ள மாநகர சபை வளவுகள் மற்றும் காக்கைத்தீவு பீச் பார்க்கிற்கான ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 5,750.00 | நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி<br>• தீயணைப்புச் சேவை தலைமையகம் ரூபா 60,000.00<br>• வெள்ளவத்தை பயிற்சி நிலையம் ரூபா 30,000.00<br>• பழைய நகர மண்டபம் ரூபா 100,000.00<br>• புதிய நகர மண்டபம் மற்றும் மில்லேனியம் சென்டர் ரூபா 100,000.00<br>• முதியோர் இல்லம் மற்றும் சிறுவர் இல்லம் பத்தரமுல்லை - ரூபா 400,000.00<br>• காக்கைத் தீவு பீச் பார்க் 500,000.00 |
| 2. | CPD18/360/2023 | கொழும்பு மாநகர சபைக்கான ஆவண முகாமைத்துவ முறைமைக்கான கேள்வி | | ரூபா 5,750.00 | 500,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 3. | CPD14/1333/2023 | 200,000 கி.கிராம் 60/70 பிட்டுமன் தொகை (De-canned/ Converted) வழங்குதல், விநியோகித்தல் மற்றும் இறக்குவதற்கு விலைகோரல் | | ரூபா 5,750.00 | 600,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து **(www.colombo.mc.gov.lk)** தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➤ **வட்டார அலுவலகம் 04,**
இல. 147, ஹைலெவல் வீதி,
கிருலப்பனை,
கொழும்பு 06.

➤ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2023-06-21ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2023 ஜுன் 21ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.11.18ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், மாநகர செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023 ஜுன் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2023 ஜுன் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

# லங்கா சோல்ட் லிமிட்டெட்

## பதவி வெற்றிடங்கள்

SLS & ISO 9001:22000 தரஅங்கீகாரத்துடனான நாட்டின் பாரிய உப்பு உற்பத்தியாளரான லங்கா சோல்ட் லிமிட்டெட் ஆனது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக பொருத்தமான தகைமையையுடைய நபர்களின் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு ஆவலாகவுள்ளது.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை பிரஜையொருவராகவும் பதவியின் கடமைகளை செயற்படுத்தவும் கடமையாற்றவும் உடல் உளரீதியில் பொருத்தமானவராகவும் தனிச்சிறப்புள்ள தார்மீக குணாதிசயத்தைக் கொண்டவராகவுமிருத்தல் வேண்டும்.

உகந்த அபேட்சகர்கள் புகழ்வாய்ந்த நிறுவனங்களில் உரித்தான துறைகளில் முன்னைய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர் (ஆண்/பெண்) விழிப்புநிலை, செயற்துணிவு மற்றும் நுண்புத்தியையும் கொண்டவராகவுமிருத்தல் வேண்டும்.

### உதவி பொது முகாமையாளர் - பொறியியல் மற்றும் பராமரிப்பு - ஏச்எம் 1-3

**பணிக்குறிப்பு/பிரதான பொறுப்புள்ள விடயப்பரப்புக்கள்:**

பொறியியல் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளுக்கான சீரான இயக்கத்திற்காக தெளிவான வழிகாட்டல் மற்றும் அறிவுரையை வழங்கல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்கல்.

**பிரதான விளைபயன் விடயப்பரப்புக்கள்:**

- பின்வரும் முக்கியமான விளைபயன் விடயப்பரப்பை செயற்படுத்துவதற்காக திணைக்கள தலைவருக்கு உதவி வழங்கல்
- பொறியியல் திணைக்களத்தின் சீரான இயக்கத்தை உறுதிப்படுத்தல்.
- திணைக்கள தலைமை உற்பத்தியுடனான ஆலோசனையுடன் அனைத்து பழுதுபார்த்தல்கள் மற்றும் தொழில்நுட்ப விடயங்களை சீராக்கல்.
- அனைத்து இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் இயங்கும் நிலையிலிருப்பதை உறுதிப்படுத்தல்.

**தேவைப்படும் தகைமை மற்றும் அனுபவம்:**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பொறிமுறை பொறியியல்/ மின்னியல் பொறியியல் அல்லது நிகரான தகைமையில் விஞ்ஞானமாணித்துறையில் பமாஆ இனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்று

**அத்துடன்**

உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின் பட்டம். உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட அங்கத்துவத்துடனான பட்டயம் பெற்ற பொறியியலாளர் (IESL அல்லது நிகரானது)

**அத்துடன்**

அரசாங்க, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தாபனமொன்றில்/ நிறுவனமொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட பணிப்பதிவுடன் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

முகாமைத்துவ வகுதியின் (எம்எம் 1-3) பதவியொன்றில் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமையுடன் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவை.

**அத்துடன்**

கம்பனியின் இலட்சியங்களை அடைவதற்காக பன்முக மற்றும் கற்கை நெறி அணிகளுக்கு தலைமைதாங்கவும் வழிநடத்தவும் கூடிய நிரூபிக்கப்பட்ட திறமை, செயற்றிட்டங்கள் மற்றும் ஏனைய வளங்களையும் முகாமைப்படுத்தல்.

**அமைவிடம்:** லங்கா சோல்ட் லிமிட்டட் தலைமையலுவலகம் - ஹம்பந்தோட்ட.

**சம்பள அளவுத்திட்டம்:** ஏச்எம் 1-3 – [86,865 + 15 x 2,270 = 120,915]

**சம்பள புள்ளி:** 86865 ரூபா

**வயதெல்லை:** 30 இற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

### உதவி பொது முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு - ஏச்எம் 1-3

**பணிக்குறிப்பு/முக்கிய பொறுப்புள்ள விடயப்பரப்புக்கள்**

கணக்காய்வு கண்டுபிடித்தல்கள் மற்றும் அமுல்நடாத்தலில் தொடர் நடவடிக்கையை மேற்கொள்ளல்.

கணக்காய்வு செயற்பாட்டின் பிரகாரம் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக பிரிவிற்கு தலைமைதாங்கலை வழங்கல் மற்றும் ஊக்குவித்தல்.

**முக்கியமான விளைபயன் விடயப்பரப்புக்கள்:**

வருடாந்த அடிப்படையில் உள்ளக கணக்காய்வு திட்டத்தை உருவாக்கல் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வில் விஷேட கவனத்தைச் செலுத்துதல்.

நிதியிடல் ஒழுங்குவிதிகள், கணக்கிடல் கொள்கைகள் ஆகியவற்றிற்கமைவாக மற்றும் கம்பனியின் MOP கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றை உறுதிப்படுத்துதல்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்முறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான விலகல் தொடர்பாக முகாமைத்துவத்தின் உயர் மட்டத்திற்கு அறிவுரை வழங்கல்.

கம்பனியின் நல்லாட்சியை உறுதிப்படுத்தல் அத்துடன் கணக்காய்வு கண்டுபிடித்தல்களை உயர் மட்டத்திற்கு அறிவித்தல்.

**தேவைப்படும் தகைமை மற்றும் அனுபவம்:**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

ICA(SL), ACCA, CIMA அல்லது CMA ஆகியவற்றில் முழுமையான தொழில்சார் தகைமைகள் அல்லது நிகரான தகைமை.

**அல்லது**

வணிகவியல், கணக்கிடல், நிதி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பமாஆ இனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்று அல்லது முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், விஞ்ஞானமாணி (வர்த்தக நிருவாகம்/ பொது நிருவாகம்) அல்லது CASL, ACCA, CIMA, CMA ஆகியவற்றில் இடைநிலை அல்லது ஏனைய நிகரான தகைமை.

**அத்துடன்**

உரித்தான துறையில் பட்டப்பின் பட்ட தகைமை (முனைவர்) அல்லது ஆகக் குறைந்தது 10 வருட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான தொழில்சார் நிறுவனத்தின் இணைந்த அங்கத்துவம். அரசாங்க, நியதிச்சட்டசபை, கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்வாய்ந்த வாணிப தாபனத்தில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

பதவிக்கு ஏற்றவாறான கணக்கிடல்/கணக்காய்வு செய்தல் ஆகிய பாடப்பரப்புக்களில் முகாமைத்துவ மட்டத்தில் (எம்எம் 1-3) ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவை அத்துடன் தேவைப்படும் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள்.

**அத்துடன்**

கம்பனியின் இலட்சியங்களை அடைவதற்காக மனித மற்றும் ஏனைய தேவைப்படுத்தல்களை முகாமைப்படுத்துவதற்காக பல்லின கற்கைநெறி அணிகளை தலைமைதாங்கவும் பணிப்புரைகளை வழங்குவதற்கான நிரூபிக்கப்பட்ட ஆற்றல்.

**அமைவிடம்:** லங்கா சோல்ட் லிமிட்டட் தலைமையலுவலகம் - ஹம்பந்தோட்ட

**சம்பள அளவுத்திட்டம்:** ஏச்எம் 1-3 [86,865 + 15x2,270 = 120,915]

**சம்பள புள்ளி:** 86,865 ரூபா

**வயதெல்லை:** 30 இற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

### உதவி பொறிமுறை பொறியியலாளர் ஜேஎம்-1-1

**பணிக்குறிப்பு/ முக்கிய பொறுப்பான விடயப்பரப்புக்கள்**

உற்பத்தி மற்றும் பொறியியலுக்கான உதவி பொது முகாமையாளரின் அறிவுரை மற்றும் வழிகாட்டலின் கீழ் லங்கா சோல்ட் லிமிட்டட்டின் உற்பத்தி இலட்சியங்களை பூர்த்தி செய்தல். சிவில், பொறிமுறை, மின்னியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் தேவையான இயந்திராதி உபகரணம் மற்றும் முறைமைகளை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளல். உற்பத்திக்கு தடையேற்படாத தன்மையில் பழுதுபார்த்தல்களை உடனடியாகவே சீராக்கல், உதவி வழங்கும் பதவிநிலை ஊழியர்களை மேற்பார்வையிடல் அவர்களின் பணி அபிவிருத்தி செயற்பாடுகளை நடாத்துவதற்காக அவர்களை வழிநடாத்தல்.

**தேவைப்படும் தகைமை மற்றும் அனுபவம்:**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பொறியியல் (பொறிமுறை/ வாகனம்) துறையில் ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்று அல்லது நிகரான தகைமை.

**அல்லது**

உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/வாழ்தொழில் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வாணிப தாபன நிறுவனமொன்றில் உரித்தான துறையில் ஆகக் குறைந்தது (01) வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

மேலேயுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்

**அல்லது**

பொறிமுறை வாகன தர தேசிய வாழ்தொழில் தகைமை மட்டம் 7.

**அமைவிடம்:** லங்கா சோல்ட் லிமிட்டட் தலைமையலுவலகம் - ஹம்பந்தோட்ட

**சம்பள அளவுத்திட்டம்:** ஜேஎம் 1-1 – 2016: {42,600 – 10 x755+18x1,135= 70,580 ரூபா

**சம்பள புள்ளி:** 42,600 ரூபா

**வயதெல்லை:** 30 இற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

### முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல்சாராதவர் - எம்ஏ 1-2

**பணிக்குறிப்பு/ முக்கிய பொறுப்பான விடயப்பரப்புக்கள்:**

அவர்களின் உடனடியான மேற்பார்வையாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கு அவர்களின் கடமைகளின் வினைத்திறனான செயற்பாட்டில் பிரிவு முகாமையாளர்களினால் உதவி வழங்கல் பணி ஒதுக்கப்பட்ட பிரிவு தொடர்பான அனைத்து ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை பராமரித்தல். தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் கொள்கைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கமைவாக கணினிமயப்படுத்தப்பட்ட அல்லது தேவையான பாங்கில் அனைத்து செயற்பாடுகளையும் செயற்படுத்தல். காலத்திற்கு காலம் ஒதுக்கப்படும் திணைக்கள தலைமை மற்றும் பிரிவுத் தலைமை ஆகியனவற்றின் பணிப்புரைகளுக்கேற்றவாறு கடமைகளை நிறைவேற்றல்.

**தேவைப்படும் தகைமை மற்றும் அனுபவம்:**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தி அத்துடன் மொழி (சிங்களம்/தமிழ்) மற்றும் கணிதம் ஆகியன அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தி.

**அத்துடன்**

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பொது வினாத்தாள் நீங்கலாக, மூன்று பாடங்களில் சித்தி.

**அல்லது**

உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/வாழ்தொழில் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

பின்வரும் தகைமைகளையுடைய ஆரம்ப மட்டம் - தேர்ச்சியுள்ள, ஓரளவு தேர்ச்சியுள்ள மற்றும் ஆரம்ப மட்ட-தேர்ச்சியற்ற வகுதிகளைச் சார்ந்த ஊழியர்களும் விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

- க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தி அத்துடன் மொழி (சிங்களம்/தமிழ்) மற்றும் கணிதம் ஆகியன அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தி.
- மேலேயுள்ள ஊழியர் வகுதியின் கீழ் நிரந்தர பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**அமைவிடம்:** லங்கா சோல்ட் லிமிட்டட் சேவை செயலகம் - நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.

**சம்பள அளவுத்திட்டம்:** எம்ஏ 1-2 [27,910- 10x300 + 7x350 + 12x600 + 12x710 = 49,080 ரூபா

**சம்பள புள்ளி:** 27,910 ரூபா

**வயதெல்லை:** 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

2023 ஜுன் 16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் முழுமையான சுயதரவு அத்துடன் இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியன அடங்கலான விண்ணப்பத்தை தயவு செய்து சமர்ப்பிக்கவும். நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தயவு செய்து குறித்துரைக்கவும்.

மேலேயுள்ள பதவிகளை நிரப்புவதற்கான அதிகாரத்தை பணிப்பாளர் சபையானது கொண்டுள்ளது.

**தலைவர்,**
**லங்கா சோல்ட் லிமிட்டட்,**
**மஹாலேவய,**
**ஹம்பந்தோட்ட.**
**தொலைபேசி: 047-2037305.**

# செலான் வங்கி பீ.எல்.சீ.

**(2007 - 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9 ன் கீழ் பதிவு செய்யப்பட்டது)**

1990 ஆம் ஆண்டு 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04 ம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டு 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08 ம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:

**கிளை : மில்லேனியம்**
**கணக்கு இலக்கம் : 0860-00010754-001**

(2007 ம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். குகதரன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003 செப்டம்பர் 22ம் திகதியிடப்பட்ட 559ம் இலக்க பிணைமுறி, பிரசித்த நொத்தாரிசு எம்.ஜீ.ஆர்.பீ. குமாரி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010 செப்டம்பர் 14ம் திகதியிடப்பட்ட 1092ம் இலக்க பிணைமுறி, 2014 டிசம்பர் 10ம் திகதியிடப்பட்ட 1880 மற்றும் 1881ம் இலக்க பிணை முறிகள் ஆகிய பிணைமுறிகளின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான" அடகு வைத்தவரான 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்டு PV 18288 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட, கொழும்பு 03 இல் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள சுபர்லின்க் எயார் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்தினால் மற்றும் PV 7496 எனும் கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட, கொழும்பு 03 இல் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள சுபர் லின்க் டிரவல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்தினால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணைமுறிகளின் மீது பெறப்பட்ட தவணைக் கடன் வசதிக்காக 2022 மே 17ம் திகதியில் அசல் மற்றும் வட்டித் தொகையாக இருபத்தாறு மில்லியன் நூற்று நாற்பத்தோராயிரத்து எழுநூற்று எழுபத்தேழு ரூபா எழுபது சதத் (ரூ.26,141,777.70) தொகையை மற்றும் 2022 மே 18ம் திகதி முதல் இருபத்தொரு மில்லியன் அறுபத்தோராயிரத்து அறுநூற்று ஒன்பது ரூபா எண்பத்தெட்டு சதத் (ரூ.21,061,609.88) தொகை மீது பதினாறு வீத (16%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து (சலுகைக் கால வசதிகள் தவிர்த்து) செலான் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான இருபத்தாறு மில்லியன் நூற்று நாற்பத்தோராயிரத்து எழுநூற்று எழுபத்தேழு ரூபா எழுபது சதத் (ரூ.26,141,777.70) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2022 மே 18ம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேற் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பர செலவுகளையும், மற்றும் மேற்படி சட்டத்தின் 13 ம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் மேற்குறித்த பிணைமுறிகளின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகையில் பகுதிக் கொடுப்பனவாக கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் மேற்படி 559, 1092, 1880 மற்றும் 1881ம் இலக்க அடகு முறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி. சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

**மேற் குறிப்பிடப்பட்ட முதலாவது ஆதன அட்டவணை:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லையில் வட்டாரம் 38 (பம்பலப்பிட்டி) கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை (முன்னர் கொள்ளுப்பிட்டி ஒழுங்கை) வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1993.05.28ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4014ம் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் 3 வது பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ள இரண்டாவது மாடியின் S 1/3 (அலுவலகம்) என பிரித்தொதுக்கப்பட்ட அடுக்குமனை

கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு S 1/3 இன் எல்லைகளாவன :

**வடக்கு** : இந்த அலகு மற்றும் அலகு CE20 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

**கிழக்கு** : இந்த அலகு மற்றும் அலகு S 1/2 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

**தெற்கு** : இந்த அலகு மற்றும் அலகு CE26A ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

**மேற்கு** : இந்த அலகு மற்றும் அலகு S 1/4 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

**அடிமட்டம்** : அலகு F26, CE20 மற்றும் CE25 (கீழ்) :ஆகியவற்றிற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொங்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

**உச்சி** : அலகு T2 மற்றும் CE27 (மேல்) இற்கு மேற்புறமுள்ள தளத்தின் மத்திய பகுதி தரைப் பிரதேசத்தின் பரப்பளவு 57.7 சதுர மீற்றர் ஆகுமென்பதோடு அது 621 சதுர அடிகளாகும்.

**பொதுவான கூறுகளுடன் சேர்த்து**

01. 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) 12 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அடுக்குமனை உரிமைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அடுக்குமனை ஆதனத்தின் சட்டபூர்வமான பொதுவான கூறுகள்.
    - (அ) கட்டிடம் அமைந்துள்ள காணி.
    - (ஆ) மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புக்கள்
    - (இ) அத்திவாரங்கள், தூண்கள், கேடர்கள், ஆதரவுகள், பிரதான சுவர்கள் மற்றும் கட்டிடத்தின் கூரை.
    - (ஈ) தாங்கிகள், தண்ணீர் கழிவுநீர் மற்றும் வடிகாலமைப்பு சேவைகள் வாகன தரிப்பிடம், குப்பை அகற்றல் மற்றும் பொதுவான பயன்பாட்டிற்காகவுள்ள கருவிகள் மற்றும் பொருத்துதல்கள்.
    - (உ) ஆதனத்தின் இருப்பிற்கு, பராமரிப்பிற்கு, பாதுகாப்பிற்கு அல்லது பொதுவாகப் பயன்படுத்துவதற்கு தேவையான ஏனைய அனைத்து பாகங்களும் வசதிகளும்.
    - (ஊ) நடைக்கூடங்கள், புறக்கூடங்கள், படிக்கட்டுகள், படிக்கட்டு வழிகள், மின்தூக்கிகள், நகரும் படிகள், தீப் பாதுகாப்பிற்காக வெளியேறும் வழிகள், களஞ்சியப்படுத்தும் இடம், தோட்டம் மற்றும் நுழைவாயில்கள் மற்றும் கட்டிடத்தின் இருப்பு போன்றவை...
2. மேற்கூறிய அடுக்குமனை நிலவரைபட இலக்கம் 4014 இல் விவரிக்கப்பட்ட பொதுவான கூறுகள்

    CE26A (அ) இது இரண்டாவது மாடியில் உள்ள ஒரு நடைக்கூடம்
    (ஆ) இது இரண்டாவது மாடியில் உள்ள அலகுக்கான அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதியாகும்.

    I. ஒவ்வொரு அலகிற்குமான பொதுவான கூறுகளின் பகிரத்தக்க விகிதாசாரம்
    - a) அலகு S 1/3 - 1.729%
    - b) அலகு S 1/4 - 1.654%
    - c) அலகு S 1/5 - 1.654%
    - d) அலகு S 1/6 - 1.54%

    II. இரண்டாவது மாடியின் அலகுகளின் பாவனை இரண்டாவது மாடியிலுள்ள அனைத்து அலகுகளும் அலுவலகமாக பயன்படுத்தப்படும்.

